www.padippakam.com

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# புதிய பூமி

පුදිය පුමි

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

PUTHIYA POOMI

சுற்று 09 | யூன்/யூலை 2002 | பக்கம் 12 | விலை 10/- | சுழற்றி 48

## அரசாங்கம் கைச்சாத்திட்டு வரும் ஒப்பந்தங்களின் பின்னணி என்ன?







ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்து ஆறு மாதங்கள் ஆகின்றன. இக்காலப்பகுதியில் பல ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப் பட்டுள்ளன. மேலும் பல ஒப்பந்தங் களுக்கான பேச்சுவார்த்தை இடம் பெற்றும் வருகின்றன. இவ் ஒப்பந்தங்கள் எத்தகைய பின்னணியில் எவ்வித நோக்கங்களை அடைவதற்காக கைச்சாத்தாகி வருகின்றன என்பது மக்களின் கவனத்திற்கு கொண்டுவரப் படுவது அவசியமாகும்.

ஆனால் அத்தகைய புரிந்துணர்வு ஒப்பந்தம் முழுமையாக நடைமுறைப் படுத்தப் படவில்லை என்ற குற்றச் சாட்டுக்கள் வடக்கு கிழக்கில் இருந்து எழுப்பப்பட்டு வருகின்ற போதிலும் அரசாங்கம் அவ் ஒப்பந்தத்தைத் தனது மிகப் பெரும் சாதனை எனப் பிரச்சாரம் செய்து வருகின்றது. அப்பிரச்சாரத்தின் மறைவில் நின்று கொண்டு நாட்டிற்கும் மக்களுக்கும் குறிப்பாக சுயநிர்ணய உரிமைக்காகப் போராடி வரும் தமிழ் மக்களுக்கும் எதிரான பாதக

### சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் புதிய கட்டத்தினுள் புகவேண்டும்

இன்றைய அரசாங்கம் பதவிக்கு வந்ததும் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு வந்து கொண்டது. அதன் மூலம் யுத்தநிறுத்தம். தடைகள் நீக்கம், பாதைகள் திறப்பு போன்றன இடம் பெற்றன. இவை மக்களால் வரவேற்கப்பட்டன. அனைத்து மக்களினதும் விருப்பம் சமாதானம் என்பதாலேயே ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வரமுடிந்தது. எனவே புலிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்வதற்கு உள்நாட்டு வெளிநாட்டு சூழல்கள் வற்புறுத்திக் கொண்டன.

விளைவுகளையும் கடுமையான பாதிப்புக்களையும் கொண்டு வரக்கூடிய ஒப்பந்தங்களை அரசாங்கம் வெளிநாடு களுடன் கைச்சாத்திட்டு வருகின்றது.

1. அமெரிக்காவுடன் சுதந்திர வான்வெளி ஒப்பந்தம் செய்யப்பட் டுள்ளது. இதன் மூலம் அமெரிக்கா வின் சகல விமானங்களும் எந்தத் தேவைகளுக்காகவும் இலங்கையின் வான்வெளி எல்லைக்குள் பறந்து செல்லலாம். எந்த விமான நிலையத்தை யும் பயன்படுத்தவும் எரிபொருள் நிரப்பவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ் ஒப்பந்தம் இம்மாத முற்பகுதியில் வாஷிங்டனில் வைத்து இலங்கை வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்ணாண்டோவினாலும் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் கோலின் பவலாலும் ஒப்பமிடப்பட்டுள்ளது.

2. திருகோணமலை நிலத்தடியில் உள்ள 100 எண்ணெய் குதங்களில் 15ஐ இந்தியப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்திற்கு கொடுக்கவும் இலங்கையில் 100 பெற்றோல் நிரப்பு விற்பனை நிலையங்களை நடாத்தவும் புதுடில்லியில் இம்மாதம் கைச்சாத்தாகி உள்ளன. இலங்கைப் பிரதமர் முன்னிலையில் இந்திய-இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர்கள் இவ் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

3. இலங்கையில் பயங்கரவாத ஒழிப்புக்கு ராணுவ ஒத்துழைப்பு தரக்கூடிய கடல் பிராந்திய ஒப்பந்தம் ஒன்று சீனாவுடன் செய்யப்பட்டுள்ளது. இவ்வொப்பந்தம் அண்மையில் பெய்ஜிங் நகரில் இலங்கை பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனா சீன பாதுகாப்பு அமைச்சர சிஹாஓ தியன் ஆகியோரால் கைச்சாத்திடப்பட்டது. அத்துடன் இலங்கையின் கடற்பரப்பில் ஆழ்கடல் மீன் பிடிப்பதற்கும் சீனாவுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

4. ஐரோப்பிய நாடுகளில் இருந்துவரும் இலங்கை அகதிகளை திருப்பி அனுப்புவதற்கான ஒப்பந்தம் ஒன்று அண்மையில் பெய்ஜியத்தின் தலை நகரான பிரஸெல்ஸசில் கைச்சாத்திடப் பட்டது. இதன் காரணமாக மூன்று லட்சம் இலங்கையர்கள் உடன் திருப்பி அனுப்பப்பட உள்ளனர்.

5. மேலும் அடுத்த மாதத்தில் அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட உள்ளது. இதன் மூலம் ராணுவ ஆயுத வழங்கல் பயிற்சி ஆலோசனைகள் அமெரிக்காவிட மிருந்து திட்டவட்டமானதாகப் பெறப்படும்.

6. இந்தியாவில் இலங்கையின் அதிரடிப்படைப் பொலிசாருக்கு விஷேட பயிற்சி வழங்கப்பட இணக்கம் காணப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 12ம் பக்கம்...

## மேல் கொத்மலைத் திட்டம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்

மல்கொத்மலை நீர்த்தேக்கத்திற்கு திராக மக்கள் எதிர்ப்பியக்கத்தை ன்னெடுக்காமல் தடுத்து நிறுத்து தற்காக மலையகத்தின் இரண்டு தான தொழிற்சங்கங்களின் தலைவர் ளுக்கு தலா பத்துக்கோடி ரூபா காடுக்கப்பட்டுள்ளதாக வாராந்த த் திரிகையொன்று செய்தி வளியிட்டுள்ளது.

மல்கொத்மலை திட்டத்திற்கென ப்பான் கடனாக பண உதவி செய்து ளதால் அத்திட்டத்தை எப்படியாவது றைவேற்றிவிட வேண்டும் என்று ரசாங்கம் உறுதியாக இருக்கிறது. த்திட்டத்தினால் சூழல் பாதிப்பு ட்டுமன்றி தலவாக்கொல்லையில் ாழும் தமிழ் மக்கள் பெருமளவில் திப்படைவார்கள். பெரிய நிலப்பரப்பு ில் மூழ்கவுள்ளது. நிலத்திற்கு அடியில் ரைக் கொண்டு செல்வதற்கான ண்ட சுரங்கம் அமைக்கப்படவுள்ளதால் ண்டகாலத்தில் இன்னும் பல ஏக்கர் ாணிகள் பாதிப்படையலாம்.

வ்வளவு நாசங்களை விளைவிக்கப் ாகும் திட்டத்தினால் இன்னும் 5 ருடங்களுக்குப் பிறகு 150 மகாவாட்ஸ் நீர்மின்சாரம் மட்டுமே ன்மையாக கிடைக்கவிருக்கிறது. தனால் இலங்கையின் மின்சாரத் தவையைப் பூர்த்தி செய்துவிட டியாது. அத்துடன் இதுவே லங்கையில் மேற்கொள்ளப்படவுள்ள டைசி பெரிய நீர்த்தேக்கத் ட்டமாகும்.

த்திட்டத்தை கைவிட்டால் 150 மகாவாட்ஸ் மின்சாரம் மட்டுமே கிடைக்காமல் போகும். கைவிடாமல் முன்னெடுத்தால் மேற்குறிப்பிட்ட பலவாறான பாதிப்புகள் ஏற்படும். மலையகத்தமிழ் மக்களின் பிரதேச, இன அடையாளம் என்பவற்றிலெல்லாம் பெரிதாகப் பேசிய ம.ம.மு.தலைவர் சந்திரசேகரன் அத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கிறார். அவருக்கும் அவரது கட்சித் தலைவர்களுக்கும் ஏதாவது நன்மை கிடைக்குமோ தெரியாது மலையகத்தமிழ் மக்களுக்கு அத்திட்டத்தினால் பேரழிவுகள் ஏற்படும்.

இத்திட்டத்தினால் பாதிக்கப்படுப்வர் களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்பதையே ஆரம்பத்தில் இ.தொ.கா. வலியுறுத்தியது. தற்போது அத்திட்டம் பூரணமாக கைவிடப்பட வேண்டும் என்று கூறுகிறது. இந்நிலைப்பாடு எவ்வளவு காலத்திற்கு நீடிக்குமோ தெரியாது.

இதைத்தவிர மலையத்தின் அனைத்து தொழிற்சங்கங்களும், அரசியல் கட்சிகளும், வெகுஜன அமைப்புகளும் மேல்கொத்மலை திட்டத்தை கைவிடும் படியே வலியுறுத்தி வருகின்றன.

மலையகத்தமிழ் மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதை நன்கு தெரிந்து கொண்டும் அதனை ஆதரிப்பவர்கள் மக்கள் விரோதிகளே ஆவர். மக்களின் அரசியல் பலத்தை தனிப்பட்ட பட்டம் பதவிகளுக்காகவும், பணத்திற்காகவும் தாரைவார்க்கும் தலைவர்கள் மக்களிட மிருந்து தகுந்த பாடத்தை வெகு விரைவில் கற்றுக்கொள்வார்கள்.

மேல்கொத்மலை போன்ற பாதிப்பு நிறைந்த திட்டங்கள் பற்றி தலைவர்கள் எனப்பட்டவர்கள் முடிவெடுக்கட்டும் என்று ஒதுங்கி இராமல் அவற்றுக்கு எதிரான வலுவான மக்கள் இயக்கங் கள் கட்டி வளர்க்கப்பட வேண்டும். அப்போது தான் அவற்றை தடுத்து நிறுத்த முடியும்.

இல்லாவிட்டால் தலைவர்கள் எனப் பட்டோர் விலை போவதுடன் பாதகமாக திட்டங்களைப் பாராட்டி கருத்து வெளி யிடுவதுடன் தாங்கள் விலை போனதை யும் நியாயப்படுத்தி விடுவார்கள்.

பாரிய நீர்த்தேக்கத் திட்டங்களெல்லாம் உலக வங்கி போன்ற நிதி வழங்கும் நிறுவனங்களும், வளர்ச்சியடைந்த நாடுகளும் அபிவிருத்தி திட்டங்கள் என்ற பெயரில் மூன்றாம் உலக நாடுகளினுள் திணிக்கப்படும் திட்டங்களாகும். அவற்றால் பெரும் பரப்பளவு நிலம் தண்ணீரில் மூழ்கடிக்கப்பட்டு நீண்டநாட்களில் சூழல் பாதிப்பு ஏற்படுவதுடன் மூன்றாம் உலக நாடுகள் கூடிய கடன் சுமைக்குள்ளா கின்றன.

நிலத்திற்கும், மக்களுக்கும், சூழலுக்கும் பாதிப்பில்லாமல் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய தேவை முதலாளித்துவத்திற்கு கிடையாது. அதற்கு 'லாபம்' மட்டுமே தேவை. லாபத்தை பெறுவதற்காக மனித குலத்திற்கு எவ்வித அழிவுகளையும் செய்யத்தயங்காது.

அந்த அடிப்படையில் மேல்கொத் மலை திட்டம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

• • • • • •

## பொருட்களின் விலைகள் உச்ச ஏற்றம்

### யூ.என்.பி. பற்றிய கனவு கலைகிறது.

பொதுசன முன்னணி அரசாங்கத்தின் மீதான ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னைய முக்கியக் குற்றச்சாட்டு பொருட்களின் விலைகளை உயர்த்தி விட்டார்கள் என்பதாகும். ஆனால் இப்போது அதே கட்சி அதிகாரத்தில் இருந்துகொண்டு என்ன செய்கிறது. விரைவில் பெறுமதி கூட்டல் வரி என்பது நடைமுறைக்கு வர சட்டம் கொண்டு வரப்பட்டுஉள்ளது. அதன் மூலம் இப் போதைக்கு 20 வீத வரி அறவிடப்படும். ஏற்கனவே பொருட்கள் சேவைகள் வரி (ஜி.எஸ்.ரி.) 12.5 வீதமாகவும் பாதுகாப்பு வரி 5 சதவீதமாகவும் இருந்து வந்தது. இப்போது அவை இரண்டும் நீக்கப்பட்டே புதிய பெறுமதி கூட்டல் வரி எடுக்கப்பட்டுள்ளது. இது உமியைக் கொடுத்து அரசியைக் கேட்ட அரசனின் கதை போன்றதாகும்.

இந்த வழிமுறையால் பொருட்களின் மேலும் பல மடங்கு உயரவே செய்யும். அரைப் பட்டினி முழுப் பட்டினியாகும். பட்டினி கிடந்தோர் இறந்துபட வேண்டியது தான். பற்றாக்குறை உடையோர் மேலும் கீழே உதைத்து வீழ்த்தப்படுவர். இவற்றுக்கும் உலகமமாதலின் தனியார்மயம் தாராள சந்தை என்பவற்றுக்கும் நெருங்கிய உறவும் ஊட்டமும் இருப்பதை ஆழ்ந்து நோக்குவதில்லை. அதனாலேயே யூஎன்.பி. வந்தால் சகல பொருளாதார பீடைகளும் நீங்கி முன்னேற்றமும் பொருட்களின் விலைகளும் குறைந்து விடும் என அப்பாவித்தனக் கனவு கண்டனர். அப்படிப்பட்டவர்களுக்கு இப்போது கனவு கலைந்து வரும் என்றே நம்ப முடியும்.

பொருட்களின் தாறுமாறான விலை உயர்வுக்கு சம்பள உயர்வு இன்மை களும் பண வீக்கமும் பொருளாதார நெருக்கடிகளும்: வேலையின்மை, வறுமை, பட்டினி, சமூகச் சீரழிவுகள், கல்விச் சீர்குலைவு, தனிமனித சுயநலப் பேராசை போன்ற யாவும் உலக மயமாதலின் உள்நாட்டு பெருமுதலாளி யத்தின் ஆளும் மேட்டுக்குடி வர்க்க அதிகாரத்தின் பெறுபேறுகளாகும்.

எனவே ஒரு சிறு தொகையில் உண்டு களித்து அனுபவித்து உல்லாச வாழ்வு வாழ்கிறார்கள். அதேவேளை பெரும் பான்மையான உழைக்கும் மக்கள் இடுப்புப் பட்டியை இறுக்கிக் கொண்டே பட்டினியிலும் பற்றாக்குறையிலும் துன்பம் அனுபவிக்க விடப்பட்டுள்ளனர். இவ் அடிப்படை வேறுபாட்டை உணர்ந்து சிந்தித்து மக்கள் கிளர்ந்தெழுவதைத் தவிர வேறு குறுக்கு வழிகள் எதுவும் இருக்க முடியாது. கிளர்ச்சி செய்வது ஒன்றே நியாயமானதாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# மலையகத் தலைமைகள் பணம் பதவிக்காக நரகத்திற்கும் செல்லக் கூடியவர்கள்

மலையகத் தலைமைகளது அரசியல் லட்சணம் உலகறிந்த ஒன்று. இன்று மட்டுமல்ல தொண்டமான் கால கட்டத்திலிருந்தே தொடரப்படுவது. அதன் சாராம்சம் பேச்சுப் பல்லக்கு தம்பி கால் நடை என்பது போன்றதாகும். அதிலும் முக்கியமான விடயம் உண்டு. இத் தலைமைகளின் பேச்சு மலையக மக்களுக்கும் தோட்டத் தொழிலாளர் களுக்கும் வெட்டி வீழ்த்துவது போன்று இருக்கும். ஆனால் நடைமுறை ஆளும் வர்க்கங்களோடும் தோட்ட முதலாளி மார்களோடும் இணைந்து கூடிக் குலாவி கும்மாளமிட்டு உயர் வர்க்க நலன் காப்பதாகவே இருக்கும்.

இத்தகைய மலையக தொழிற்சங்க அரசியல் தலைமைகளை எடுத்து ஆழமாக ஆராய்ந்தால் அவர்களுக்குப் பிரதானமானது மலையக மக்களின்- தொழிலாளர்களின் கோரிக்கைகளோ அபிலாஷைகளோ அல்ல. பணம் பதவி இரண்டுமே அவர்களின் அடிப்படை யாகும். பணத்தால் பதவி பெறுவது பின்பு பதவியால் பணத்தைச் சேர்ப்பது. இதற்கு தொழிற்சங்க- அரசியல் என நீட்டி முழக்கிப் பேசுவார்கள். அறிக்கை கள் விட்டுக்கொண்டே இருப்பார்கள்.

தங்களது பணம் பதவி இவற்றின் மூலமான தலைமைத்துவத்தைப் பாது காக்க இலங்கையின் இரண்டு பேரின வாத ஆளும் வர்க்க அரசங்கங்கள் இரண்டிலும் பேரம் பேசி இணைந்து கொள்வார்கள். பேரம் பதவி பணம் பற்றியதே அன்றி மலையக மக்களது பிரச்சினைகளாக இருந்ததில்லை. ஆனால் தாங்கள் அரசாங்கத்தில் அமைச்சர் பதவி பெறுவதற்கு ஒரே காரணம் மலையக மக்களுக்கு சேவை செய்வதற்குத்தான் என்றே அடித்துக் கூறி கொள்வார்கள். அரசியல் விழிப்புணர்வை எட்டாத நிலையில் உள்ள மக்களை 'நம்ம கட்சி' 'நம்ம தலைவருமாரு' 'என்னதான் இருந் தாலும் நம்ம ஆட்கள் தானே' எனக்கூற வைத்து ஒருவகைத் தோற்றம் காட்டி ஏமாற்றி பெரும் தொகைப் பணத்தை செலவீடுசெய்து பாராளு மன்றத்திற்கும் ஏனைய தேர்தல்களிலும் வென்று விடுவார்கள். வெல்லும் வரை இவர்கள் மக்களுக்குக் கும்பிடு காட்டுவார்கள். வென்ற பின் மக்கள் இவர்களைக் கும்பிட்டுக் கேட்டாலும் எதையும் செய்து கொடுக்க மாட்டார்கள்.

இப்போது இரண்டு அமைச்சரவை அந்தஸ்து பெற்ற அமைச்சர்கள் இருக் கிறார்கள். ஆனால் அரசாங்கத்தின் ஊடாக எதனைச் செய்கிறார்கள் என்று மக்கள் கேட்கிறார்கள். அறிக்கைகள் ஒழுங்காக வந்து கொண்டிருக்கும். படங்கள் பத்திரிகை களில் பல கோணங்களில் வாரம் தவறாமல் வருகின்றன. ஆனால் மலையகத்திற்கான- தொழிலாளர்க ளுக்கான அதிமுக்கிய பிரச்சினை வரும் போதே இவர்களது சுய ரூபத்தை காணலாம்.

இவ்வேளை அந்தச் சுயரூபம் வெளிப்பட ஆரம்பித்துள்ளது. மலைய கத்தில் உடனடிப் பிரச்சினைகள் இரண்டு பிரதானமாகியுள்ளன. ஒன்று சம்பளப் பிரச்சினை. இரண்டாவது மேல் கொத்மலை நீர் தேக்கத் திட்டம். இவ்விரண்டிலும் மக்களின் பக்கம் என்றும் அரசாங்க - கம்பெனி களின் பக்கம் என்றும் இரண்டு பக்கங்கள் உண்டு. இங்கே இரண்டு அமைச்சர் களும் யார் பக்கத்தில் நிற்பார்கள் என்பது ஒரு தேவையற்ற கேள்வியாகும். ஏனெனில் இத்தலை மைகள் ஒரு போதும் மக்கள் தொழிலாளர்கள் பக்கத்தில் நின்ற தில்லை. ஆனால் நிற்பது போல் நின்று போக்குகாட்டிவிட்டு அரசாங்க- கம்பெனிகளுக்கு உரிய நேரத்தில் கைகொடுத்து உதவிக் கொள்வார்கள்.

அமைச்சர் சந்திரசேகரன் ஏற்கனவே மேல் கொத்மலைத் நீர்த் தேக்கத் திட்டதிற்கு ஆமாம் போட்டு விட்டார். இப்போது ஆறுமுகம் அமைச்சர் தனது தனித்துவத்தைக் காட்டுவது போல் சீறி விழுந்து எதிர்ப்புத் தெரிவித்து பிரதமரோடு பேசப் போவதாகக் கூறி நிற்கிறார். அவர் தாத்தா வழியில் இறுதியாக இரகசியமாக ஆமாம் போடுவார். பொறுத்திருந்து பார்த்தால் தெரியும்.

எல்லாம் பணம் பதவி தான் என்பதை ச் சொல்லித் தெரிய வேண்டிய தில்லை. பணம் என்றால் பணமும் வாய் பிளக்கும் என்று சும்மாவா சொன்னார்கள். மலையகத் தலைமைகளுக்கு பணத்தையும் பதவியையும் காட்டினால் நரகம் என்று கூறப்படுகின்ற இடத்திற்குப் போக வேண்டுமானாலும் மறுப்புத் தெரிவிக்க மாட்டார்கள். அந்தளவு க்கு அந்த இரண்டிலும் ஊறித் திளைத்த தலைமைகளே இன்றைய தொழிற்சங்க-அரசியல் தலைமைகள். மலையக மக்கள் தமது புதிய அரசியல் தேடலாலும் சிந்தனை செயற்பாட்டாலும் முன்னுக்கு வருவ தாலேயே இத்தகைய தலைமை களைத் தூக்கி வீசி முன்னேறிச் செல்லமுடியும். புதிய மலையகத்தைத் தோற்றுவிக்க முடியும்.

# வவுனியா வைத்தியர்களின் மக்களை மறந்த பணி

வவுனியாவில் சில அரசாங்க வைத்தியர் கள் நடந்து கொள்ளும் நாளாந்த செயற்பாடுகளில் நோயாளர்களுக்கு அதிருப்தியும் மன வேதனையும் தான் அதிகரித்துக் காணப்படுகின்றது. மக்களுக்கு சேவை செய்ய வேண்டிய சில வைத்தியர்கள் மக்களுக்கு விரோதமாகவே நடந்து கொள்கின் றனர். மக்களின் வரிப்பணத்தில் அதிக சம்பளம் வாங்கும் இவர்கள் நோயாளர் களை கவனிக்கிறார்களோ இல்லை யோ அடிக்கடி சாராய விருந்து வைப்பதில் மட்டும் தவறுவதில்லை. இதில் இரண்டு தமிழ் வைத்தியர்களும் மும்மரம். முஸ்லீமானவர் பணம் கறப்பவர். தன்முனைப்புடன் பிரபல பெண் வைத்தியர். இப்படி இன்னும் சில வைத்தியர்கள் வவுனியாவில் ஒரே அட்டகாசம் தான். வவுனியாவில் நேர்மையுடன் பணிபுரியும் வைத்தியர் களும் இருக்கிறார்கள். அவர்களை நாம் குறைகூறவில்லை.

இவர்களது குறி முழுக்க பணம் கறப்பதுதான். வவுனியாவில் எல்லோ ருக்கும் நன்கு தெரிந்த மகப்பேற்று நிபுணத்துவ வைத்தியர் தாய் சேய் செத்தாலும் பரவாயில்லை அவருக்குரிய தானம் செய்தால்தான் அரசாங்க வைத்தியசாலைக் கட்டில் பக்கம் வருவார். இவரைப் பற்றி ஏற்கனவே பல பத்திரிகைகளில் கண்டனங்கள் வந்தபோதும் அதெல்லாம் அவருக்கு சும்மா ஈக்கடி போன்றதேயாகும். அவரது பணம் கறக்கும் வேலை விடாப்பிடியாக நடந்தே வருகின்றது.

வவுனியா சுகாதார வைத்திய தாய் சேய் கவனிப்பு நிலையங்களில் திரிபோஷ மாவினை வழங்குவதில் பல தில்லு முல்லுகள் இடம் பெறுகின்றன. இன்னும் வரவில்லை. பெயரையும் ஒப்பத்தையும் தந்து விட்டுப்போங்கள். மா வந்ததும் அறிவிக்கிறோம் என்பார்கள். திரிபோஷ மா வந்தாலும் முறைப்படி விநியோகிப்பதில்லை என அறிய முடிகின்றது. தூரக் கிராமங்களில் இருந்து வரும் தாய்மார்கள் திரிபோஷ மாவினைப் பெறாது 'அடுத்தமுறை' என்பதோடு போய் விடுகிறார்கள். இந்நிலையங்களில் தாய்மார்கள் பார்த் திருக்கவே திரிபோஷ மாப் பக்கற்றுக் கள் ஒழித்து களவாடப்படும் நிகழ்வுகள் நடந்துள்ளன என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இதே வைத்தியர்களில் சிலர் பாலியல் சேட்டைகளிலும் வக்கிர செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர். ஊழல் புரியும் சிலருக்கு எதிரான முறைப்பாடுகளினால் சுகாதாரத் திணைக்கள விசாரணைகளும் நடந்துள்ளன. விசாரணை வைக்க வருபவர்களுக்கே விருந்து வைத்து மடக்க முன்னிற்கும் வைத்தியர் களின் கெட்டித்தனம் சாதாரண மானதல்ல.

இன்னும் சில வைத்தியர்கள் தங்களது மோசடிகளையும் திருகு தாளங்களையும் மறைக்க ஏதாவது இயக்கத்துடன் தங்களை அடையாளம் காட்டிக் கொண்டும் வந்துள்ளனர்.

வவுனியாவில் பன்முக நெருக்கடிகள் துன்ப துயரங்கள் மத்தியில் வாழும் மக்களுக்கு வைத்திய சேவை செய்ய வேண்டிய வைத்தியர்கள் வெறுமனே பணத்தைக் கறந்து கொள்ளும் சுயநல நோக்குடன் ஒவ்வொரு விடயத்திலும், நடந்து கொள்வது மனசாட்சிக்கும் மக்களுக்கும் பெரும் துரோகம் இழைப்பதாகும். வெறுமனே ஆதாரங்கள் இன்றி சில வைத்தியர்கள் மீது குற்றம் சுமத்துவதற்காக இதனை எழுத வில்லை. மேலே பொதுப்படை யாகக் கூறிய விடயங்களுக்கான ஆதாரங் களை எம்மைப் போன்ற மக்கள் நலன் விரும்பிகளால் முன்வைத்து நிரூபிக்க முடியும் என்பதையும் தெரிவிக்கிறேன்.

**என். ஏ. நிக்சன்**
வவுனியா.

# கலவியல பாரபடசம வவுனியாவல கேடபாரலலை

வவுனியா மாவட்டம் வடக்கு வலயம், தெற்கு வலயம் என இரண்டு கல்வி வலயங்களாகவும் வடக்கு வலயம் இரு கோட்டங்களாகவும், தெற்கு வலயம் மூன்று கோட்டங்களாகவும் வகுக்கப் பட்டு நிர்வகிக்கப்படுகின்றது. வடக்கு வலயத்தின் பெரும்பகுதி புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும் சிறுபகுதி அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள்ளும் அடங்குகின்றது.

பிற மாவட்டங்களில் இருந்து யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் நிம்மதியான வாழ்வுக்கு வவுனியா தெற்கு வலயப்பகுதியில் குடியேறினர். மாணவர் தொகை அதிகரித்தது. ஆனால் பாடசாலைக்குரிய வளங்கள் அதிகரிக்கவில்லை. அரசு சார்பற்ற நிறுவனங்களின் உதவியால் சில கட்டிடங்கள், தளபாடங்கள் கிடைத்தன. அவை மாணவர்களினதும் ஆசிரியர் களினதும் தேவையைப் பூர்த்தி செய்வதாக இல்லை. நகரின் மையத்தில் அமைந்துள்ள ஐந்து பாடசாலைகளை விட ஏனைய பாடசாலைகள் நிர்வாகத் தால் புறக்கணிக்கப்பட்ட நிலையில் அமைந்துள்ளன. மையத்திலிருந்து விலகிச் செல்லச் செல்ல வசதிக் குறைவுகளும் கவனிப்பாரற்ற போக்கும் அதிகரித்துச் செல்கின்றது. காரணம் தூரப்பாடசாலைகள் வசதி குறைந்த விவசாயிகளின் பிள்ளை களையும் இடம் பெயர்ந்த மாணவர் களையும் கொண்ட தேயாகும்.

மாணவர்கள் நிலத்திலிருந்து கற்கின்றார்கள். சில பாடசாலை களில் மலசலகூடமின்றி மாணவரும் ஆசிரியர்களும் தவிக்கின்றனர்.

தொடர்ச்சி 3ம் பக்கம்...

# நாலு நடக்கும் நற்குணம் உலகிலே

## தமிழருக்கு விலக்குப் பிடிப்பது யார்?

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக மாணவர் அடிதடி நடந்தது எதற்காக? கட் அரசியலா? கொள்கை வேறுபாடா? கோஷ்டிச் சண்டையா? கிடையாது. இரண் பேருக்கு இடையிலான மோதலை இரண்டு கல்வித் துறைகட்கு இடையிலான மோதலாக்கி விட்டார்கள். பிரச்சினை முற்றியதும் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தரோ அவரது பரிவாரங்களோ பிரச்சினையைச் சுமூகமாகத் தீர்க்கமுடியாமல், வளாகத்தின் ஒரு பகுதியை மூடி பொலிஸ் காவ போட்டுவிட்டார்கள்.

தமிழ் மாணவர்கள் மோதலில் சிங்களப் பொலிஸ் அமைதியை நிறுத் அழைக்கப்பட்டது. நாளைத் தமிழ் ஈழம் வந்தால் அங்கு நடக்கக்கூடிய மோதலுக் சிங்கள ராணுவத்தை அழைப்போமா, விமானப்படையை அழைப்போமா?

## வைத்தியரே முதலில் உமது நோயை மாற்றும்

யாழ் பல்கலைக்கழக மாணவர்களது அடிதடி மோதல் தொடங்கிய பின்பு யா பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் ஒரு சமூக சேவகரிடம் போய்த் தங்களது ஹர்த்தாலுக்கு உதவிசெய்ய மறியல் செய்யும் இடத்துக்கு வந்து ஆதரவு த வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர்.

சமூக சேவகர் நிதானமாகவும் ஆணித்தரமாகவும் }தம்பிமாரே. முதலில் நீங்க ஒழுங்காக நடந்து கொள்கிற வழியைப் பாருங்கள். பிறகு. சமுதாயத்துக் வழிகாட்ட வாருங்கள் என்றாராம்.

## வெறும் கையால் முழம் போடுவது

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே பொறியியல் கல்விக்கு 100 பேரை எடுப்ப என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவரும் யாழ் பல்கலைக்கழ உயர் அதிகாரிகள் சிலரும் மும்முரமாக நிற்கிறார்களாம். யாழ்ப்பாணத்தி விஞ்ஞானத் துறையிலே போதியளவு நவீன தளபாடங்கள் இல்லை. கட்டடமு இல்லாமல் தகுதியுள்ள ஆசிரியர்களும் இல்லாமல் ஆய்வுகூடக் கருவிகளு அவற்றை பாவிக்கக்கூடிய உதவியாளர்களும் இல்லாமல் பட்டப்படிப்பு தொடங்கினால் என்ன நடக்கும்?

தமிழர்கள் என்ற ஒரே தகுதியீனம் காரணமாக ஏற்கனவே வேலை வாய்ப் மறுக்கப்படும் தமிழ் மாணவர்கள். இனிக் கல்வித் தரமும் காணாது என் ஒதுக்கப்பட மாட்டார்களா?

## நாலு கட்சிக் கூட்டணிக்குள் குத்து வெட்டு

யாழ் குடாநாட்டு மீனவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் மறியல் போராட்ட என்றெல்லாம் பாடுபட்டுப் போராடினார்கள். தமிழ் எம்.பி.மாரில் சிவாஜிலிங்க போக யாருக்குமே அதுபற்றி அக்கறையில்லை. பனைகள் படையினரால் மறுப வெட்டப்படுகின்றன. மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். ஆனால் தமிழ் எம்.பி.மார்

அவர்களுக்கு முக்கியமான பிரச்சினைகள் எத்தனையோ இருக்க. இந்த மாதிரி சின்ன விடயங்களில் எல்லாம் நேரம் செலவிடுவார்களா? சிவசிதம்பரம் ஐயாவி சடலம் சிதை ஏற முன்னமே அவரிடத்தில் பாராளுமன்றப் படியேறுவது யா என்ற போரல்லவா மூண்டுள்ளது. அவர்களது புரிந்துணர்வு உடன்படிக்கையின்ப த.வி. கூட்டணி ஆளுக்குத்தான் இடம் என்றாயிற்றாம். ஆனாலும் ஆர் ஆ என்று முடிவு செய்யும் அதிகாரம் த.வி.கூவுக்குத்தான் என்று சங்கரியாரு நாலு கட்சிகளுக்கும் என்று குமரகுருபரரும் வானலைகளில் மோதுவதைக் கேட் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் பிழையில்லை என்று தோன்றியது.

பிணக்கைத் தீர்க்க முடியவில்லை என்றால் விடுதலைப் புலிகளிடம் போ அவர்களுடைய கொள்கைக்கு ஏற்றவர் யார் என்று கேட்டு வரலாமே அவர்களுக்கு அதில் அக்கறை இருக்காது என்றால் இருக்கவே இருக்கிறா எசமானர் ரணில் விக்கிரமசிங்க. அவரிடம் கேட்டால் மகேஸ்வரன் மாதிரி ஒ நல்ல ஆளாகப் பிடித்துத் தருவாரல்லவா?

## சாயி பகவான் மகத்துவம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்குப் போய் முக்கியமான அரசிய தலைவர்கள் எனப்படும் பிரதமர் வாஜ்பாய். அயல் விவகார அமைச்சர் ஜஸ்வந் சிங் மற்றும் பாரதிய ஜனதா முக்கியஸ்தர்கள், காங்கிரஸ் தலைவி சோனியா முதலமைச்சர் ஜெயலலிதா ஆகியோரையெல்லாம் கண்டு வந்தார் இன்னொ வல்லமை மிக்க அரசியல்வாதியைப் போய்க் கண்டு வந்தது பற்றி நமது ஏடுக எதுவும் சொல்லவில்லை. அவர் தான் சத்திய சாயி பாபா. அவரது மகிமை பெரிது. இலங்கை ராணுவ அதிகாரிகள் பலரும் அவரது ஆசி வேண்டிப் போவ பலர் அறிந்ததே. படு தோல்வியில் முடிந்த ஜயசிக்குரு நடவடிக்கைகள் மூன்றுக்கு {பகவான்{ ஆசி வழங்கினாராம்? விடுதலைப் புலிகள் அவரை நம்பாததற்கு நியாய வேறு வேண்டுமா?

சாயி பாபாவுக்கு வேறும் ராசிகள் உண்டு. பிரதமர் பிரேமதாச அவரிடம் போ வந்தார். அதன் பிறகு ஆளே போய்விட்டார். அடுத்தவர் காமினி திசாநாயக் அதே கதை. அதே கதி.

என்ன இருந்தாலும். சனாதிபதி சந்திரிக்காவுக்குச் சாதகமாக ஓரிரு விடயங்க உள்ளன. மகா நாயக்கர்கள் காலில் அவர் விழுந்ததாக இது வரை ஒரு தகவலு இல்லை. சாயி பாபாவிடம் போனதாகவும் தகவல் இல்லை. இந்த நிதான தேசிய இனப்பிரச்சினையிலும் இல்லாமல் போனமை தான் அவரைப் பிடித்துள்ள சோகம்.

## கல்வியோ கல்வி

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் இலங்கை ஏகப்பிரதிநிதியாகக் கூறப்படு ஒரு நிறுவனம் அங்கு பட்டம் பெறுவதற்கு இங்கு மாணவர்களைத் திரட்டுகிறது இது ஒரு தருமம் என்று யாரும் எண்ணாதீர்கள். லட்சக்கணக்கில் செல செய்து பட்டம் வாங்கலாம். அந்தப் பட்டத்தின் பெறுமதி பற்றித் தெரிய மூன் வருடமாகும். இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர் பல்கலைக்கழகங்கள் எல்லா பட்டம் விற்கத் தொடங்கினால் இந்தியப் பட்டங்கள் வாங்க ஆளில்லாமல் போகுமா யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்குள்ளும் கடைவிரித்து ஒரு முகவ நியமித்துள்ளார்கள்.

இது கல்வியாக வியாபாரமா என்று யாரும் கேட்டால் உரிய பதில் இதே வீரகேசரியின் }வர்த்தக உலா பகுதியில் விளம்பரம் போட்டிருக்கிறார்கள். இதற் மேல் எதைச் சொல்ல!

படிப்பகம்

www.padippakam.com



# செம்மணிப் புதைக்குழி விசாரணை மீண்டும் நீதிமன்றம் வருமா?

## தமிழ் பா.உ.கள் மௌனம் ஏன்?

கடந்த பொதுசன முன்னணி ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற கொலைகள், ஆட்கடத்தல்கள், தாக்குதல்கள், வீடு உடைப்புக்கள்-எரிப்புக்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் என்பவற்றுக்கான விசாரணைகள் வழக்குத் தாக்கல்கள் பல பக்கங்களிலும் முடுக்கி விடப்பட்டு வருகின்றன. இவற்றில் பலபொதுசன முன்னணிப் புள்ளிகள் சிக்கவைக்கப்பட்டும் வருகின்றனர். நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டியவர்கள் யாராயினும் நிறுத்தப்படுவது நியாயமானது தான்.

ஆனால் அவை வெறுமனே அரசியல் பழிவாங்கலாகவும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் விருப்பு வெறுப்புக்கு உரிய ஒன்றாகவும் இருந்து விடக்கூடாது. தமக்கொரு நியாயம் ஏனையோருக்கு வேறொரு நீதியாக அமையக் கூடாது.

வடக்கில் பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலை பற்றிய விசாரணை துரிதப்படுத்தப்பட்டு வருகின்றமை நியாயமானதாகும். அதன் கொலையாளிகள் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படுவதும் அவசியமானதாகும்.

அதேவேளை வடக்கு கிழக்கில் பல பொதுமக்கள் ஆயுதப் படைகளால் கொல்லப் பட்டிருக்கிறார்கள். காணாமல் போய் உள்ளனர். அவர்களுக்கு என்ன நடைபெற்றது என்றும் உறவினர்களால் அறிய முடியவில்லை. குடாநாட்டில் 1996ல் எழுநூறுக்கு மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். செம்மணியில் புதைக்கப்பட்டவர்களில் ஒரு சிலரது எலும்புகளும் உடைகளும் தோண்டி எடுக்கப்பட்டு நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப் பட்டது. துரையப்பா விளையாட்டரங்கிலும் அவ்வாறு எலும்புக் கூடுகள் கண்டு கொள்ளப்பட்டன.

ஆனால் அந்த விசாரணைகள் யாவும் இடைநிறுத்தப்பட்டன. ஏன் என்பது இன்றுவரை வெளிப்படுத்தப்படவில்லை. காணாமல் போனவர்கள் சார்பான அமைப்பு தேர்தலுக்கு முன்பு பல இயக்கங்களை நடாத்தி நீதிகோரி நின்றன. வெற்றி பெற்ற பா. உறுப்பினர்கள் வாக்குறுதிகள் கொடுத்து விட்டு கொழும்பு வந்து சேர்ந்தனர். அந்தளவும் தான். ஐ. தே. கட்சி அரசாங்கம் காணாமல் போனோர் பற்றிய முடிவுகளை உறவினர்களுக்கு உரியபடி கூறுமா? இடைநிறுத்தப்பட்ட செம்மணிப் புதைகுழி விசாரணையை மீண்டும் எடுத்து நீதி கிடைக்கச் செய்யுமா? அல்லது உயர்படை அதிகாரிகளைத் திருப்திப்படுத்த விசாரணையை கிடப்பில் போடுமா? அவற்றைக் கிளறாது தத்தமது சுயலாப வேலைகளை தமிழ்ப் பா.உ. வினர் செய்து கொண்டு மௌனமாகக் காலத்தைக் கடத்துவார்களா? ஆனால் காணாமல் போனோர் சார்பாக நீதியும் நியாயமும் கேட்பது மக்களது கடமையாகும்.

# அமைச்சர் சந்திரசேகரன் புதிய கயிறு விடுகிறார்

அமைச்சர் சந்திரசேகரன் அடிக்கடி மலையக மக்களை நோக்கி புதிய கயிறு விடுவதில் வல்லவர். நம்ம அண்ணன் சும்மா இருக்க மாட்டார். நமக்காக ஏதோ செய்து கொண்டே இருப்பார் என்றே மலையகத்தில் பத்திரிகை படிக்கும் பலரும் நம்பி விடுவார்கள். அண்மையில் அமைச்சர் தனது நெருங்கிய ஒருவரின் திருமணத்திற்காக தமிழ் நாட்டிற்கு சென்று வந்தவர். அங்கிருக்கும் போது பத்திரிகைகளில் புலிகளுக்கு ஆதரவான கருத்துக்கள் கூறி சபாஷ் பெற்றுக் கொண்டார். அந்தக் கையோடு மலையகத்திற்கு தனியார் பல்கலைக்கழகம் கொண்டு வரப் பேச்சுவார்த்தை நடாத்தியதாக அவிழ்த்து விட்டிருக்கிறார் அமைச்சர். அது பற்றி அங்குள்ள சென்னைப் பல்கலைக்கழக துணைவேந்தரோடு பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறார். 'சொல்லுவார் சொன்னாலும் கேட்பாருக்கு என்ன மதி' என்பது முதுமொழி.

இலங்கையில் தனியார்மயம் மிக வேகப்படுத்தப்பட்டுள்ளது. அப்பலோ வைத்தியசாலை வந்து விட்டது. அடுத்து தனியார் பல்கலைக்கழகம் வந்து கொள்ளவே செய்யும். ஆனால் மலையகத்திற்கு பல்கலைக்கழகத்தை அமைச்சர் கொண்டு வருவதாக ஏன் கயிறு விட வேண்டும். இப்போது இது சாத்தியமா? இப்போது மலையகத்தில் சிறிபாத கல்வியில் கல்லூரி, கொட்டகலை ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை ஆகியன கடுமையான வளப் பற்றாக் குறைகளுடனும் பல பிரச்சினைகளுடனும் கவனிப்புகளோ கரிசனைகளோ இன்றி இயங்கி வருகின்றன. அங்கு சென்று கல்வியைத் தொடர்வதே தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு கஷ்டங்களின் மேல் கஷ்டமாக இருந்து வருகின்றது. தனியார் பல்கலைக்கழகம் என்பது சும்மா கல்வி கற்கும் இடமா? அதற்குரிய கட்டணத்தை தோட்டத் தொழிலாளர்களால் நினைத்துப் பார்க்கக் கூடியதா? மலையகத்தில் ஆரம்ப கல்வியில் இருந்து உயர்தரப் பாடசாலைகள் வரை செய்யப்பட வேண்டியவை ஏராளம் உண்டு. அவைபற்றி வாய் திறக்காத அமைச்சரும் பரிவாரங்களும் தனியார் பல்கலைக்கழகம் பற்றிப் பேசுவது வெறும் ஏமாற்றுக்கேயாகும்.

# வசதியும் பதவியும் உள்ளோருக்கே சாயிபாபா வெகுமதி கொடுப்பார்!

அண்மையில் இந்தியாவிற்கு உத்தியோகப் பயணம் மேற்கொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மனைவி மைத்திரியுடன் பகவான் சாயிபாபாவிடம் சென்று தரிசித்து அருள் பெற்று வந்துள்ளனர். அதேவேளை சாயிபாபா தனது சித்து விளையாட்டின் மூலம் ரணிலுக்கு ஒன்பது நவரத்தினங்கள் பதித்த மோதிரத்தை மேலே இருந்து வரவழைத்துக் கொடுத்தாராம். மனைவி மைத்திரிக்கு சங்கிலி ஒன்றும் வரவழைத்துக் கொடுக்கப்பட்டதாம். இவர்களுடன் சென்ற ரணிலின் உறவினருக்கும் சங்கிலி கிடைத்திருக்கிறது. கூடச் சென்ற இலங்கைக்கான இந்தியத் தூதுவருக்கும் பச்சைக் கல்லு பதித்த மோதிரம் கிடைத்துள்ளது.

வசதியும் பதவியும் உள்ளவர்களுக்கு மட்டுமே 'பகவான்' சத்தியசாயிபாபா அருளும் கொடுப்பார். அதற்கு அப்பால் விலை உயர்ந்த வெகுமதியும் கொடுப்பார். ஏனென்றால் இத்தகையோர் பாபா கொடுத்த வெகுமதியைப் போன்று பல மடங்கு பெறுமதியான பணத்தை உண்டியலில் போடக்கூடியவர்கள் என்பதை பாபா சரியாகவே அறிந்து தான் அருள் பாலிக்கிறார்.

இந்த சித்து விளையாட்டுப் பம்மாத்துக்களைப் பற்றிப் பிரசாரம் செய்ய வசதி வாய்ப்புக்கள் அனுபவிக்கும் ஒரு கூட்டம் இருக்கிறது. அதை நம்பி ஏமாற வேறொரு கூட்டம் அலைகிறது. ஆனால் சராசரி மனிதர்களின் அன்றாட பசி பட்டினி வறுமை பற்றி மட்டும் 'பகவான்' பாபா அறிந்துகொள்ள மாட்டார் போலும். இந்தியாவில் முப்பது கோடி மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே தான் வாழ்கிறார்கள். அங்கே தான் பெரிய பெரிய உள்நாட்டு வெளிநாட்டுப் புள்ளிகளுக்கு பாபா அருளும் வெகுமதியும் கொடுக்கிறார்.

# ஏ 9 பாதையில் மக்கள் பரதவிப்பு!

ஏ 9 பாதை திறக்கப்படுகிறது என்று செய்தி வந்ததும் எல்லோரும் மகிழ்ந்தனர். பழைய பயண ஞாபகங்களை நினைவுபடுத்தி இனி இலகுவாக கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்கும் பிரயாணம் செய்து தமது தேவைகளை விரைவாகவும் பயணத்துன்பங்கள் இன்றியும் செய்யலாம் என்றே எதிர்ப்பார்த்தனர். ஆனால் ஏதோ வழியில் துன்பம் தொடர்கதைதான். ஆனால் வித்தியாசமான வழிகளிலாகும். ஆறு இடங்களில் பஸ்கள் மாறி ஏற வேண்டும். பஸ் பிரயாணச் செலவு மொத்தம் 275 ரூபா. ஆனால் கொழும்பிலிருந்தோ யாழ்ப்பாணத்திலிருந்தோ தனியார் வாகனத்தில் பயணம் செய்ய ஆயிரம் ரூபா அறவிடுகிறார்கள். வரிசையில் பல மணி நேரம் நிற்பதும் ராணுவச் சோதனைகளும் அடையாள அட்டைப் பதிவுகளும் பெரும் உலைச்சலையே கொடுக்கின்றன. என்ன தான் சமாதானச் சூழல் வந்தாலும் ஏதோ துன்பத்தையும் உலைச்சலையும் மக்களுக்கு தொடர்ந்து வழங்க வேண்டும் என்பது ஒரு எழுதா விதியாகி விட்டதோ என்றே எண்ணத் தோன்றுகின்றது. ஏ 9 பாதையில் ஒருமுறை பிரயாணம் செய்தால் தான் மக்கள் படும் பரிதவிப்பைக் காண இயலும்.

# உலக வேட்டைக்காரன் புஷ்சும் வேட்டை நாய் சி. ஐ. ஏ. யும

உலக நாடுகளின் அதி உயர் வளங்களையும் மக்களது உழைப்பின் செல்வங்களையும் வேட்டையாடி உறுஞ்சிச் செல்வதற்கு அமெரிக்கா உலக வேட்டைக்காரனாகி நிற்கிறது. அதற்காக தனது பொருளாதார ராணுவ பலத்தைப் பிரயோகிப்பதுடன் பண்பாட்டு ஊடுருவல் உட்பட பிரசாரத் திணிப்பையும் நடாத்தி வருகின்றது.

அமெரிக்காவின் உலக ஆதிக்க நோக்கத்தை எதிர்க்கக் கூடிய மக்களைப் பல வழிகளிலும் பழிவாங்கி வருவதுடன் தன்னை எதிர்க்கும் அரசாங்கங்களைக் கவிழ்த்துக் கொள்வதிலும் ஈடுபட்டு வருகின்றது. இந்த நடைமுறை இன்று நேற்று ஆரம்பமான ஒன்றல்ல. அமெரிக்க முதலாளியத்தின் ஆரம்பம் முதலே நடந்து வரும் ஒன்றாகும். அதற்காகவே சி.ஐ.ஏ என்ற புலனாய்வு-உளவு அமைப்பு அமெரிக்காவில் தோற்றுவிக்கப் பட்டது. அது உலகில் செய்த கொலைகள். சதிகள். ஆட்சிக் கவிழ்ப்புகள் என்பனவற்றின் எண்ணிக்கை நீண்ட பட்டியலைக் கொண்டதாகும்.

முன்பு சி.ஐ.ஏ.யின் செயற்பாடுகள் மிக இரகசியமாகவே இடம்பெற்று வந்தன. ஆனால் இப்போது வெளிவெளியானவையாகச் செய்யப்படுகின்றன். அண்மையில் ஜனாதிபதி ஜோர்ச் டபிள்யூ புஷ் ஈராக்கில் சதாம் ஆட்சியைக் கவிழ்க்குமாறு சி.ஐ.ஏ.க்கு உத்தரவு பிறப்பித்துள்ள செய்தி வெளிவந்துள்ளது. இதனை அமெரிக்க காங்கிரஸ் பாராட்டியும் உள்ளது. ஒரு நாட்டின் ஆட்சியைத் தீர்மானிப்பவர்கள் அந்நாட்டின் மக்களேயாவர். ஆனால் அந்நாடுகளின் விருப்பு வெறுப்புக்கு அப்பால் அமெரிக்காவே ஆட்சியையும் அதன் தலைமையையும் தீர்மானிக்கும் அவலநிலை தோன்றியுள்ளது. அந்த வகையில் ஈராக். கியூபா. வடகொரியா. லிபியா. பலஸ்தீனம் ஆகியவற்றின் தற்போதைய ஆட்சிகளும் தலைவர்களும் கவிழ்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்றது அமெரிக்கா. தான் குறிப்பிடும் தலைவர்கள் அங்கு ஆட்சியில் இருக்க வேண்டும் என அமெரிக்கா விரும்பி அதற்காகச் செயல்படுகிறது. அதற்கு வேட்டை நாயாக இருந்து வரும் சி.ஐ.ஏ.ஐ ஏவிப் பணிக்கப்பட்டுள்ளது. இந்த வேட்டை நாய் எவ்வித தயக்கமும் இன்றி தனது வழமையான சதி நாசவேலைகளைச் செய்வதில் மும்முரமாக நிற்கிறது.

ஈராக்கிடம் நச்சு இரசாயன ஆயுதங்களும் ஆபத்தான அணு ஆயுதங்களும் இருப்பதாகக் கூறியே ஈராக் ஜனாதிபதி பதவியிலிருந்து சதாமை வெளியேற்ற வேண்டும் என அமெரிக்கா பிரகடனப்படுத்தி உள்ளது. அமெரிக்கா உலகின் அழிவுகரமான ஆயுதங்களைப் பெருமளவில் உற்பத்தி செய்து விற்பனையும் ஆக்கிரமிப்பும் செய்துவரும் நாடாகும். அப்படி இருக்க அமெரிக்காவிற்கு என்ன யோக்கியதை இருக்கிறது. ஈராக் மீதும் ஜனாதிபதி சதாம் மீதும் நடவடிக்கை எடுப்பதற்கு.

அமெரிக்கா இதன் மூலம் தன்னை அம்பலமாக்கி வருகின்றது. உலக மக்கள் அதற்கு எதிராக வெகுண் டெழும் நாட்கள் அதிக தூரத்தில் இல்லை.

## கூட்டமைப்புக்குள் குத்துவெட்டு

# ஆதிக்க அரசியல் மத்தியில் அடிபிடி!

கடந்த தேர்தலில் தமிழர் கூட்டமைப்பின் தோற்றமும் வெற்றியும் தமிழர் பழமைவாத ஆதிக்க அரசியலின் தொடர்ச்சியை வெளிப்படுத்தியது. இப்போது மறைந்த தேசியப்பட்டியல் உறுப்பினரான மு. சிவசிதம்பரத்தின் ஆசனத்திற்கு கூட்டமைப்புக்குள் ஒரே குத்துவெட்டு நடைபெறுகிறது. பாராளுமன்ற கதிரை ஆசை சும்மா விடுமா? சங்கரியார் வரிந்து கட்டிக் கொண்டு மரபுப் போராட்டம் என்கிறார். தமிழ்க் காங்கிரஸ் தனக்குத் தான் என்கிறது. சுரேஸ் பிரேமச்சந்திரன் தனது இந்திய விசுவாசத்தைச் சான்றிதழாகக் காட்டுகிறார். ரெலோவும் பங்கு கேட்கிறார். யார் வந்தாலும் தமிழர் பழமைவாதப் பாராளுமன்ற ஆதிக்க அரசியல்தான் கோலோச்சும். தமிழ் மக்களுக்கு எவ்வித பயனும் இருக்க மாட்டாது.

# பொது இடங்களில் இருந்து படையினர் விலக வேண்டும்

ரிந்துணர்வு உடன்படிக்கையில் ஏற்றுக்கொண்டபடி வடக்கு கிழக்கில் பாடசாலைகள். கோவில்கள். சனசமூக நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் இருந்து படைத்தரப்பினர் இன்னும் விட்டு விலகவில்லை. இது படையினர் ஆக்கிரமித்த இடங்களை விட்டுவிலக மறுக்கும் செயல் போன்றதாகும். அப்படி விலகிச் சென்றால் தமது பேரினவாத ஆதிக்கத்திற்கு இடம் இல்லாது போய்விடுமோ என்ற ஒடுக்குமுறை எண்ணத்துடனேயே படையினர் இவ்வாறு தொடர்ந்தும் இருந்து வருகின்றனர். இன்று வீதிச்சோதனைகளோ வீடுகளில் தேடுதல் நடத்தப்படுவதோ இல்லை. அப்படியானால் ஏன் தான் பொது இடங்களில் இருந்து கொண்டு மக்களுக்கு அச்ச உணர்வையும் ஏனைய உள்ளார்ந்த தொந்தரவுகளையும் பீதியினையும் படையினர் செய்ய வேண்டும். எனவேதான் வடக்கு கிழக்கின் பொது இடங்கள் அனைத்திலிருந்தும் படையினர் விலக வேண்டும் என்ற கோரிக்கையை மக்கள் வற்புறுத்துகின்றனர். இக்கோரிக்கை முற்றிலும் நியாயமானதாகும்.

**ல்வியில் பாரபட்..**

ம் பக்க தொடர்ச்சி...

லன்புரி நிலையங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில் (குறிப்பாக ந்தோட்டம். சிதம்பரபுரம்) மலசலகூடம் இல்லை. இதனால் மாணவரும் ஆசிரியரும் நோயாளிகளாக மாற்றப்படுகின்றனர். இவற்றை அமைப்பது லன்புரி நிலையத்தினை அமைத்த அரசாங்க அதிபரா? கல்வியை வழங்குகின்ற கல்வித் திணைக்களமா என்ற இழுபறியில் காரியம் நடக்காது இருக்கின்றது. இங்கே பூனைகள் விளையாடுகின்றன. சுண்டெலிக்குத் தான் சீவன் போகிறது. உயர் நிர்வாகிகளின் பிள்ளைகள் எங்கே படிக்கிறார்கள்? வசதிபடைத்தோருக்கு ஒரு நீதி! வசதியற்ற ஏழைப் பிள்ளைகளுக்கு மற்றொரு நீதி! இதுதான் இன்றைய கல்வி அமைப்பின் கோட்பாடாகும்.

பாடசாலைக் கட்டிடங்கள் வெடித்தும் உடைந்தும் போகின்றன. இவற்றைத் திருத்தாமல் திணைக்களம் வேடிக்கை பார்க்கின்றது. தெற்கு கல்வி வலய வளாகத்தில் இருக்கும் முகாமைத்துவ மண்டப மலசலகூடம் பாவிக்கப்படாமல் பூட்டப்பட்டிருப்பதன் காரணம் அதன் மேலேயுள்ள தண்ணீர்த் தாங்கியில் இருந்து ஒழுகி ஓடும் தண்ணீர்தான். திணைக்கள வளாகத்துக்குள் அதுவும் பிரதான பொறியியளாளர் அலுவலகத்துக்குப் பக்கத்தில் கதி இதுவென்றால் பிறதூர இடங்களைச் சொல்ல வேண்டுமா? கட்டிடம் அமைத்த ஒப்பந்தக்காரருடன் பேசவிடாது தடுத்தது எது?

ஆசிரியவாண்மை விருத்தி நிலையம் ஒன்றினை வடக்கு வலயத்துள் புளியங்குளத்தில் அமைப்பதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு விட்டது. ஆனால் இன்னமும் வேலை தொடங்கப்படவில்லை. இவ்வருடத்திற்கான திட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் மழை காலத்தின் முன் செய்து முடிப்பது சாத்தியமற்றது. ஒப்பந்தக்காரர் அப்பகுதிக்குச் செல்லமுடியாதவராய் இருந்தால் அவ்வொப்பந்தத்தை இன்னொருவருக்கு வழங்க விடாது தடுப்பது எது? பணமா? அல்லது பாசமா?

ஆங்கிலக்கல்வி. கம்பியூட்டர் யுகம் என்றெல்லாம் பேசுவது நகரங்களில் அதுவும் வசதி உள்ளவர்களுக்கு மட்டுமானதேயாகும். சாதாரண மக்களின் பிள்ளைகளுக்கு அடிப்படைக் கல்வி கூட வழங்க முடியவில்லையே என்பதுதான் உண்மை நிலை ஆகும். இதனையே உலகமயமாதல் கல்வி என்றும் கூறப்படுகின்றது.

வடக்கு வலயத்தில் மூன்றே மூன்று ஆங்கில ஆசிரியர்கள் மாத்திரம் கடமை புரிகின்றனர். ஆசிரியர் பற்றாக்குறை பெருமளவில் நிலவுகின்றது. தெற்கு வலயத்தில் மையப் பாடசாலைகள் ஐந்திலும் 100க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் மேலதிகமாக இருக்க கிராமப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக் குறை நிலவுகிறது. கிராமப்புறப் பாடசாலைகளில் இருந்து இன்னொரு கிராமப்புறத்திற்கு மாற்றப்படுகிறார்களே அன்றி நகரப்புறத்தில் ஆசிரியர்களை மாற்றுவதில்லை. அவர்கள் மேலதிகாரிகளுக்கு தேவையானவர்கள். பல வித சேவைகளையும் மேலதிகாரிகளுக்கு செய்து வருகிறார்கள் என்றும் அறியமுடிகிறது. இடமாற்றம் செய்யும் உரிமை மாத்திரம் அல்ல நீதியாகவும் பக்கச் சார்பின்றியும் நடக்க வேண்டிய பொறுப்பும் அதிகாரிகளுக்கு இருக்கிறதா என்றே அங்கலாய்க்க வேண்டியுள்ளது.

பொதுமக்கள். பெற்றோர் தங்கள் வரிப்பணத்தில் கல்விக்காகச் செலவிடப்படுகின்ற நிதி சரியான முறையில் தங்கள் பிள்ளைகளது கல்விக்கு பயன்படுத்தப்படுகிறதா என்ற அக்கறையுடன் கவனிக்கவேண்டும். அப்படிப் பயன்படுத்தாமைக்கு எதிராக கேள்வி எழுப்ப வேண்டும். ஆசிரியர்கள் தங்கள் உரிமைக்காக உணர்வு பூர்வமாக குரல் கொடுக்க வேண்டும். பெற்றோர்களும் மாணவர்களும் ஏதோ நடக்கட்டும் என இருந்துவிட முடியாது. ஆசிரியர்கள் எல்லோராலும் பந்தம் பிடித்து பதவிகளில் ஒட்டிக்கொள்ள முடியாது. நீதி. நியாயம் கேட்பது நமது உரிமை என முன்வந்தால் மட்டுமே சாதாரண மாணவர்களுக்கும் நியாயம் கிடைக்க வேண்டிய ஆசிரியர்களுக்கும் விடிவு வரும். வவுனியாவில் குறைந்தளவில் தானும் கல்வி உருப்பட முடியும்.

**மா. குருகுலசிங்கம்**
வவுனியா தெற்கு

படிப்பகம்

www.padippakam.com



# சம்பள உயர்வுப் பிரச்சினையில் தோட்டத் தொழிலாளர்கள் மீண்டும் ஏமாற்றப்படுவார்களா?

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்சங்கத் தலைவர்கள் கூட்டு ஒப்பந்தங்கள் பற்றி புதுப்புது வியாக்கியானங்களைக் கொடுத்து வருகின்றனர். தொழிலாளர்கள் தற்போது சுமக்கும் வாழ்க்கைச் செலவை சமாளிப்பதற்கு வழிவகை செய்ய வேண்டிய சம்பள உயர்வை உறுதி செய்யும் வகையில் புதிய கூட்டு ஒப்பந்தத்தை செய்து கொள்ளக்கூடிய வலிமை அவர்களிடம் இல்லாதபடியால் அவர்கள் தொழிலாளர்களை சமாளிக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன. இது சம்பள உயர்வுப் பிரச்சினை வரும் போது தலைமைகள் செய்து வரும் வழமையான ஏமாற்றேயாகும்.



சம்பள உயர்வை எப்படியாவது பெற்றுத் தருவேன் என்று அமைச்சர்கள் ஆறுமுகனும், சந்திரசேகரனும் ஏட்டிக்குப் போட்டியாக அறிக்கை விட்டுவருகின்றனர். சம்பள உயர்வு எவ்வளவாக இருக்க வேண்டும் என்பது பற்றி அவர்கள் கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை. அவர்கள் இத்தனை ரூபாய்க்கு மேல் இருக்க வேண்டும் எனத் தெரிவிக்கவில்லை ஏன்?

அவர்கள் தலைமை வகிக்கும் இரண்டு சங்கங்களைத் தவிர ஏனைய சங்கங்களும் கட்சிகளும் பொது அமைப்புகளும் தொழிலாளர்களின் ஆகக்குறைந்த நாளாந்த சம்பளம் ரூபா. 200 ஆக இருக்க வேண்டும் என்று கூறிவருகின்றன.

தற்போது நடைமுறையில் இருக்கும் தோட்டத் தொழிற்சங்கங்களுக்கும் தோட்டக் கம்பெனிகளுக்குமிடையிலான கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பிறகு ஏனைய தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட இரண்டு சம்பள உயர்வுகளும் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை. அக்கூட்டு ஒப்பந்த ஏற்பாடுகளின்படி அவ்வாறான சம்பளஉயர்வுகளை வழங்க முடியாது என்று தோட்டக் கம்பெனிகள் காரணம் காட்டின.

கடந்த காலத்தில் ஏனைய தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளஉயர்வு. அடுத்த இரண்டு வருடகாலத்தில் வழங்கப்பட வேண்டிய சம்பள உயர்வுகள் என்பனவெல்லாம் கணக் கெடுக்கப்பட்டு. இம்மாதம் (யூன்) செய்து கொள்ளப்படவுள்ள புதிய கூட்டு ஒப்பந்தத்தில் சம்பளத்திட்டம் வகுக்கப்பட வேண்டும்.

இவற்றை அடிப்படையாகக் கொள்ளாது வகுக்கப்படும் எவ்வித சம்பளத் திட்டத்தாலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு பயன் ஏற்படாது. தோட்டக் கம்பெனிகள் வழங்கத் தயாராக இருக்கும் 10 ரூபா சம்பள அதிகரிப்பை தொழிற்சங்கங்கள் ஏற்றுக் கொள்வது நியாயமாக இருக்க முடியாது. அவ்வாறான பத்து ரூபா, பிச்சைக் காசுக்குக் கூடப் பெறுமதியற்றது.

இலங்கையின் கைத்தொழில் பிணக்குகள் சட்டத்தின்படி கூட்டு ஒப்பந்தங்கள் சட்டபூர்வமானவை ஆகும். கம்பெனிகளுக்கும் தொழிலாளர் களுக்கும் ஏற்படும் பிணக்குகளின் எண்ணிக்கையை குறைத்துக் கொள்ளவும் பிரச்சினைகளை சுமூக மாக தீர்த்துக் கொள்வதற்கு மாகவே கூட்டு ஒப்பந்தங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் தொழிலாளர்கள் கூடிய பலனடைவார்கள் என்று கூறமுடியாது. ஆனால் கூட்டு ஒப்பந்தங்களை செய்து கொள்ளும்போது தொழிற்சங்கங்கள் மிகவும் வலிமையான பேரப்பேச்சை செய்வதன் மூலம் தொழிலாளர்களுக்கு சாதகமான சில விடயங்களை உறுதி செய்துகொள்ள முடியும். அதற்கு தொழிற்சங்கத் தலைமைகளுக்கு உறுதியான நிலைப்பாடு அவசியம்.

கூட்டு ஒப்பந்தங்கள் பொதுவாக இரண்டு வருட காலத்திற்கு அமுலில் இருக்கும் வகையிலேயே செய்து கொள்ளப்படுவதுண்டு. அதில் தொழிலாளர்களின் சம்பளத்திட்டம் முக்கியமானதாக கொள்ளப்படும். அந்த இரண்டு வருடகாலத்திற்குள் வழங்கப்பட வேண்டிய சம்பள உயர்வுகள் முன்னுணர்ந்து தீர்மானிக்கப்பட்டு சம்பளத்திட்டம் கூட்டு ஒப்பந்தத்தில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

தற்போது தோட்டக் கம்பெனிகள் வழங்கத்தயாராக இருக்கும் 10 ரூபா சம்பள உயர்வுடன் அடுத்த இரண்டு வருடங்களுக்கு தோட்டத் தொழிலாளர்கள் வாழ்க்கையை நடத்த முடியுமா என்பதும் ஏற்கனவே ஏனையோருக்கு வழங்கப்படவுள்ள சம்பள உயர்வுகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுமா இல்லையா? என்பனவும் தற்போதுள்ள இரண்டு பிரதான கேள்விகளாகும்.

தொழிலாளர்களின் சார்பில் கூட்டு ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும் தொழிற்சங்கங்கள் மேற்படி இரண்டு கேள்விகளுக்கும் தொழிலாளர்களுக்கு சார்பான பதிலுடன் விடயத்தை அணுகவேண்டும். செங்கொடிச்சங்கத் தலைவர் ஓ.ஏ. இராமையா கூறுவது போன்று அடிமைத்தனமாக கருத்துக்களை வெளியிடக்கூடாது. கூட்டு ஒப்பந்தத்தில் வழங்கப்படும் சம்பள உயர்வு குறுகிய காலத்திற்கு தானே



யன்றி நீண்டகாலத்திற்கு நிரந்தரமானதல்ல. அதனால் கம்பெனிகள் வழங்கவுள்ள ரூபா. 10 சம்பள உயர்வை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற வகையில் அவர் கருத்துத் தெரிவித்துள்ளார். இது அடிமைப் புத்தியா? அல்லது கம்பனிகள் இவரைப் போன்றவர்களைப் பேசவைத்துள்ளதா?

எதுவொரு கூட்டு ஒப்பந்தமோ கூட்டு ஒப்பந்த ஏற்பாடுகளோ நிரந்தரமானவை அல்ல என்பது அவருக்குத் தெரியாததல்ல. கூட்டு ஒப்பந்தத்தில் சேர்க்கப்படும் சம்பளத்திட்டம் கூட்டு ஒப்பந்தம் அமுலில் இருக்கும் காலத்திற்குள் வழங்கப்பட வேண்டிய சம்பள உயர்வுகளையும் ஏற்கனவே வழங்கப்படாத சம்பள உயர்வுகளையும் முன்னுணர்ந்து வகுக்கப்பட வேண்டும் என்பதும் புரியாத விடயங்கள் அல்ல. பாவம். இராமையா தொழிலாளர்களுக்காகப் பேசும் தகுதியை ஏற்கனவே இழந்து விட்டதால் முதலாளிகளுக்காகப் பேசியே தீரவேண்டியது தான். பரவாயில்லை. தன்னையொரு பழைய சிகப்பு என்று கூறாது விட்டால் போதுமானதாகும்.

இன்று அதிகரித்துக் கொண்டு போகும் வாழ்க்கைச் செலவை பார்க்கின்றபோது அடுத்து வரும் இரண்டு வருட காலங்களில் பல மடங்குகளாக வாழ்க்கைச் செலவு அதிகரிக்கப்படும் என்பதை உறுதியாகக் கூறமுடியும். அவ்வாறானால் கம்பனிகள் உத்தேசிக்கும் பத்து ரூபா சம்பளள உயர்வு எந்த மூலைக்குப் போதுமானது.

இவ்வாறன நிலையில் தோட்டத் தொழிற்சங்கங்கள் அவற்றின் சுயலாபங்களை முதன்மைப் படுத்தாமல் உறுதி யான பேரப்பேச்சில் ஈடுபட வேண்டும். இல்லாவிட்டால் தொழிலாளர்களை ஏமாற்றா மல் தொழிற்சங்க இயக்கத்தை விட்டு விலகிக்கொள்வது நல்லது. தாங்கள் கம்பனிகளுக் கும் முதலாளிகளுக்கும் சேவகம் செய்பவர்கள் என்ப தை வெளிப்படையாக ஒத்துக் கொள்வது நல்லதாகும்.

உண்மையாகவே .தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு விடயத்தில் பிரதான தொழிற் சங்கங்களுக்கு நேர்மையுடனான அக்கறை இருக்குமானால் கம்பனிகளை வற்புறுத்துவதற்கு தமது அரசாங்க ஆதரவு நிலைப்பாட்டைப் பயன்படுத்த முடியும். இரண்டு முழுமையான அமைச்சர்கள் அமைச்சரவையில் இருந்து கொண்டு கம்பனிகளின் தான்தோன்றித்தனமான முடிவுகளுக்கு விட்டுக் கொடுப்பு செய்ய தயாராக இருப்பது அவர்களது இயலாமையையும் சுயநலப் பதவிப் பாதுகாப்பையுமே எடுத்துக் காட்டுகின்றது. இச் சம்பள உயர்வுப் பிரச்சினையுடனாவது இந்த வேடதாரிகளை மலையகத் தோட்டத் தொழிலாளர் வர்க்கம் அடையாளம் காணுமா? அல்லது தொடர்ந்தும் செக்கு இழுக்கும் பாதையில் தானா?

**ம. முத்துதேவன்**

---

# மலையகத்திற்கு புலிகள் சென்றால் பொதுநல அரசியல் பிறக்குமா? தமிழ்மாறன் என்பவர் உளறுகிறார்!

கடந்த 28-04-2002 வீரகேசரி ஞாயிறு இதழ் குறிஞ்சிப் பரல்கள் பகுதியில் சிட்டிசன் என்பவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் மலையகப் பிரவேசம் பற்றி எழுதியிருந்தார். அதற்குப் பதிலாக கடந்த 09-06-2002 வீரகேசரி ஞாயிறு இதழின் குறிஞ்சிப் பரல்கள் பக்கத்தில் தமிழ்மாறன் என்பவர் எழுதியிருக்கிறார். அதற்கும் எனது குறிப்பை விபரமாக எழுதி வீரகேசரிக்கு அனுப்பியினேன். ஆனால் ஏனோ அவர்கள் அதனை வெளியிடவில்லை. சிலவேளை தமிழ்மாறன் என்பவர் பெரிய இடத்து ஆளாக இருக்குமோ தெரியவில்லை. எனவே தங்களது புதியபூமிப் பத்திரிகையில் எனது கருத்தை வெளியிடுமாறு வேண்டுகின்றேன்.

தமிழ்மாறன் தனது கருத்தில் மலையகத்தில் வாக்குகளை வாங்கிக் கொண்டு தலைவர்கள் சுயலாப அரசியல் நடத்துவதாகக் கூறி. இந்நிலையில் புலிகள் இயக்கம் அங்கு பிரவேசித்தால் தான் பொதுநல அரசியல் பிறக்கும் எனக் கூறுகின்றார். அதாவது அனைத்துத் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளாக புலிகள் இயக்கம் மலையகத்தையும் தனது கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வரவேண்டும் என்பதே தமிழ்மாறனின் பேரவா போலும். பாவம் புலிகளுக்கு இல்லாத விருப்பத்தை தமிழ்மாறன் ஏன்தான் ஏற்றி நிற்க வேண்டும். புலிகள் இயக்கத் தலைவர் நடாத்திய சர்வதேசப் பத்திரிகையாளர் சந்திப்பில் மலையகத்தின் தலைமையை மக்கள் வாக்குகள் மூலம் ஏற்றிருக்கிறார்கள் என்றே கூறினார். அதுமட்டுமன்றி அமைச்சர்கள் ஆறுமுகத்தையும் சந்திரசேகரனையும் வரவேற்று உபசரித்து நீங்கள் தான் மலையகத்தின் பிரதிநிதிகள் என்றும் பிரபாகரன் கூறி இருந்தார். அதனை வைத்துக் கொண்டு ஆறுமுகம் தானே மலையகத்தின் ஏகப் பிரதிநிதி என்றார். சந்திரசேகரனோ தன்னை மலையகத்தின் ஏகப்பிரதிநியாக ஏற்கும்படி மலையக மக்களைக் கேட்டுக் கொண்டார்.

இவை மட்டுமன்றி ஏற்கனவேயும் புலிகள் இயக்கம் மலையக மக்களது பிரச்சினைகளுக்கு திட்டமோ தீர்வோ வைத்திருக்கவில்லை என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. இப்போதும் அவர்கள் அதில் தலையிட விரும்பவில்லை என்பதே உண்மை. ஆனால் தமிழ்மாறன் என்பவர் மலையகத்திற்குள் புலிகள் பிரவேசிக்க வேண்டும் என்பதன் அர்த்தம்தான் புரியவில்லை. புலிகளைச் சொல்லி பலவித வயிறு வளர்ப்புகள் இடம் பெறுகின்றன. அதிலும் முன்பு புலிகளை எதிர்த்து வந்த பல புத்திஜீவிகள் இப்போது புலித்தோல் போர்த்த முற்பட்டுள்ளனர். அதில் தமிழ்மாறன் என்பவரும் ஒருவரோ தெரியவில்லை.

இவர் அந்த கட்டுரையில் மேலும் சில ஆலோசனைகளை மலையக மக்களுக்கு அருளுரை செய்திருக் கிறார். மலையக மக்கள் வடக்குக் கிழக்கில் சென்று குடியேற வேண்டுமாம். அதன் மூலம் நிரந்தரமாக வடக்கு கிழக்கில் இருந்து இடம் பெயர்ந்த தமிழர்களின் வெற்றிடத்தை நிரப்ப முடியுமாம். தமிழ்மாறனின் புத்தி சரியாகத்தான் வேலை செய்கிறது. வசதியான வடக்கு கிழக்குத் தமிழர் எல்லாம் வெளிநாடுகளிலும் கொழும்பிலும் நிரந்தரமாகி விட அவர்களது இடத்திற்கு காவலாளிகளாக, தொழிலாளர்களாக, கூலிகளாகச் செல்வதற்கு வாய்ப்பானவர்கள் மலையக மக்களாகவே தேவைப்படுகின்றார்கள் போலும். ஏற்கனவே நம்மவர்களான மலையக மக்கள் அங்குள்ள பண-நிலச் சொந்தக்காரர்களால் எவ்வாறு நடத்தப்பட்டார்கள் என்பது நாம் அறியாத ஒன்றல்ல. வசதி வாய்ப்புப் பெற்ற உயர் குடியினர் எம்மை எப்படி அழைத்து வேலை வாங்கி இறுதியில் என்ன செய்தார்கள் என்பது இரகசியமல்ல. தமிழ்மாறன் போன்றவர்களின் வீடுகளுக்கு இன்னும் நம்மவர்கள் தான் வேலைக்குத் தேவைப்படுகிறார்கள் போலும்.

வடக்குகிழக்கு. மலையகம். மேல் மகாணம் எனப் பிரிந்து நின்று ஒப்பாரி வைக்காமல் தமிழர் என்ற ஒரே குடையின் கீழ் ஒன்று சேர வேண்டும் என எமக்குப் புத்தி கூற வரும் தமிழ்மாறன் தமிழர்கள் மத்தியில் எத்தனை பிரிவுகள் பிளவுகள் ஏற்றத் தாழ்வுகள் உண்டு என்பதை உணருவாரா? தமிழ்க் குடையின் கீழ் நின்றால் எல்லோரும் சமமாகி விடமுடியுமா? மலையக மக்கள் கோரிக்கை வைத்தால் ஒப்பாரி. நீங்கள் கோரிக்கை வைத்தால் உயர்ந்த லட்சியம். தமிழ்மாறன் பாவித்த ஒப்பாரி என்ற சொல்லிலேயே ஆளும் ஆதிக்க அரசியல் தொனி உரத்து ஒலித்து நிற்கிறது தெரிகிறதல்லவா?

மலையக வர்த்தகர்கள் வடக்கு கிழக்கில் வந்து வர்த்தகம் செய்தால் ஒற்றுமை பீறிட்டுக் கொண்டு வந்துவிடும் எனத் தமிழ்மாறன் கூறுகிறார். ஐயனே! முன்பும் இப்போதும் அங்கு நம்மவர்கள் எனக்கூறி நின்று வர்த்தகம் செய்கிறார்கள் தான். வர்த்தகம் பணம் பண்ணவே அன்றி இனம் மொழி ஒற்றுமைக்காக அல்ல என்பது புரிய வேண்டும்.

இன்றும் மலையகத்தின் பெரும்பான்மையான மக்கள் வர்க்கத்தாலும் சாதியாலும் இன்னல்களையும் இடர்பாடுகளையும் அனுபவிப்பவர்களாகவே இருந்து வருகின்றனர். தமிழ்மாறன் கூறுவது போன்று வடக்கு கிழக்கிற்கு நாம் சென்றால் எப்படி நாம் நடாத்தப்படுவோம் என்பதற்கு ஏதாவது உத்தர வாதம் வழங்க முடியுமா? இவ்வளவு யுத்த இழப்பிற்குப் பின்பும் அங்குள்ள சாதி குறைந்ததாகக் கூறப்படுவோருக்கு அநீதிகள் இருந்து வருவதாகவே அறிய முடிகிறது. ஏற்றத் தாழ்வுகள் பார்க்கப்பட்டு 'அந்தப்பகுதி' 'இந்தப் பகுதி' என்றே சுட்டப்படுகிறது என்றும் 'அதுகள்' 'இதுகள்' என்று மக்களில் ஒரு பிரிவினர் அழைக்கப்படுவதாகவும் அங்கிருந்து வருவோர் கூறுவதைக் கேட்க முடிகின்றது. இந்த லட்சணத்தில் தான் எமக்கு அழைப்பு விடுக்கிறார் தமிழ்மாறன்.

இலங்கையில் தமிழ் மொழியைப் பேசுகின்ற வடக்குக் கிழக்குத் தமிழர்கள். முஸ்லிம்கள். மலையகத் தமிழர் என மூன்று பிரிவினராக உள்ளனர். இவர்கள் மத்தியில் வேறுபாடுகளும் தனித்துவங்களும் உண்டு. வெறுமனே இனம் மொழி என்பனவற்றால் மட்டும் பிணைத்துவிட முடியாது. ஒவ்வொருவருக்கும் இருக்கும் தனித்துவம் தனி அடையாளங்கள் பாதுகாத்து பரஸ்பரம் மதிக்கப்படல் வேண்டும். அதனையே விடுதலைப் புலிகளும் அதன் தலைவர் வே. பிரபாகரனும் அண்மைய செயற்பாடாகச் செய்து கொண்டார்.

ஆனால் தமிழ்மாறனோ ஆதிக்க அரசியல் சிந்தனை வழி நின்று தமிழ்த் தேசியக் குடையை விரித்துக் காட்டுகிறார். அதனைச் சில மலையகப் புத்திஜீவிகள் இளைஞர்கள் விரும்புவதாகவும் கூறுகிறார். மலையகத்தில் இருந்து அந்நியப்பட்டு தமது சுய அடையாளத்தையே மறைத்து நிற்க முற்படும் ஓரிரு புத்திஜீவிகள் இருக்கலாம்? ஆனால் தங்களை ஒரு தேசிய இனமாக நிலைநிறுத்தி வரும் மலையகத் தமிழ் மக்கள் நியாயமான போராட்டத்திற்கே தயாராகி வருகிறார்கள். அதன் மூலம் மலையகத்தின் சுயநல பதவி வேட்டைக்காகரத் தலைமைத்துவங்கள் தூக்கி வீசப்படும் என்பதில் நம் போன்ற இளம் தலைமுறையினருக்கு நம்பிக்கை உண்டு என்பதைத் தமிழ்மாறன் என்பவருக்குக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

**இரா. ஆனந்தகுமார்**
மஸ்கெலியா.

www.padippakam.com



புதிய பூமி
புதிய பூமி REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA PUTHIYA POOMI
சுற்று 09 யூன்/யூலை 2002 பக்கம் 12 விலை 10/- சுழற்சி 48

எஸ்.47, 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11. இலங்கை. தொ.பே.: 435117. 335844 பாக்ஸ்: 01-473757

## இந்துத்துவமும் பௌத்த பேரினவாதமும்

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது நாட்டின் வளங்கள் ஏகாதிபத்திய, மேலாதிக்க சக்திகளுக்கும் பல்தேசிய கம்பெனிகளுக்கும் தாரை வார்க்கப்பட்டதுபோன்று சமாதானம் என்ற பெயரில் கடந்த சில மாதங்களாக காட்டப்படும் நடவடிக்கைகளுக்கூடாக நாட்டின் எஞ்சிய வளங்களும் இறைமையும் இந்திய மேலாதிக்க சக்திகளிடமும் அமெரிக்க ஏகாதிபத்திய சக்திகளிடமும் தாரை வார்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹவின் இந்திய விஜயத்துடன் இந்திய மேலாதிக்கத்துக்கு இங்கு முற்றாக எல்லாமே திறந்துவிடப்பட்டுள்ளன.

இந்தியா பிரதான பூமி என்றும் அதனுடன் தொடர்பபடாமல் இலங்கை தீவு வளர்ச்சியடைய முடியாது என்றும் இந்திய மேலாதிக்க சக்திகளாலும் இலங்கையின் சில தமிழ் சிங்கள புத்திஜீவிகளாலும் தொடர்ந்து பிரசாரம் செய்யப்படுகிறது.

சீனாவிற்கு ஹொங்கொங் போன்று இந்தியாவுக்கு இலங்கை என்று அமைச்சர் மிலிந்த மொறகொட கூறிவைத்தது நினைவிருக்கலாம். அமெரிக்காவின் வருகையைவிட இந்தியாவின் வருகை எமது நாட்டிற்கு பாதிப்பு குறைவாகவே இருக்கும் என்று கூறும் புத்திஜீவிகளும் இருக்கின்றனர்.

இந்திய மேலாதிக்க சக்திகளாலும் முதலாளித்துவ, இந்துத்துவ சக்திகளாலும் ஆளப்படும்வரை இலங்கையை சமத்துவமாக மதித்து இலங்கையின் அபிவிருத்திக்கு நேர்மையான நேசக்கரம் நீட்டும் சூழ்நிலை ஏற்படமாட்டாது.

இந்தியா இல்லாமல் பூட்டானிலும் நேபாளத்திலும் எதுவும் செய்யமுடியாது என்ற நிலையில் அடுத்ததாக தென்னாசியப் பிராந்தியத்தில் இலங்கை இந்தியாவின் கொலனியாக மாறுகின்ற நிலை மிகவும் வேகமாக நடைபெறுகிறது.

இலங்கை இந்திய சுதந்திர ஒப்பந்தம் நிறைவேற்றப்படும்போது பொருளாதார ரீதியாக இந்தியாவிற்கே அதிக லாபமாக இருக்கும். திருகோணமலை எண்ணெய் குதங்கள் இந்தியாவுக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டுவிட்டன. திருகோணமலை துறைமுக அபிவிருத்தியும் நகர அபிவிருத்தியும் இந்தியாவிடம் கொடுக்கப்படவுள்ளன. இலங்கையையும் இந்தியாவையும் இணைக்கும் தரைவழி பாலம் போடப்படவுள்ளது. பிபிலையில் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணியில் இந்தியா பழச்செய்கையில் ஈடுபடவுள்ளது. கண்டியில் தகவல் மையமொன்றை இந்தியா அமைக்கவிருக்கிறது. இதைவிட ஏற்கனவே பெருந்தோட்டக் கம்பெனிகள். மின்சாரசபை போன்றவற்றில் இந்திய ஆதிக்கம் மிகையாகவே இருக்கிறது.

இவற்றின் வளர்ச்சியில் இலங்கை பொருளாதார ரீதியில் முற்றுமுழுதாக இந்தியாவில் தங்கியிருக்கின்ற நிலை ஏற்பட்டு இந்தியாவின் சுரண்டலிலும் ஆதிக்கத்திலுமிருந்து இலங்கை மீளமுடியாத நிலையில் விடப்படும். இலங்கையின் விவசாயிகளும் தொழிலாளர்களும் மட்டுமன்றி தேசிய இனங்களும் இந்திய மேலாதிக்க கட்டுப்பாட்டிற்குற்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹவிற்கு இலங்கையின் முதலாளிவர்க்க நலன்களையும் பேரினவாத மேலாதிக்கத்தையும் தொடர்ந்து நிலைநிறுத்திக் கொள்வதற்கு வேறுவழியில்லை. அதனால் அவர் அமெரிக்க ஏகாதிபத்தியத்திடமும் இந்திய மேலாதிக்கத்திடமும் சரணடைந்து வருகிறார். இலங்கையின் தொழிலாளிகளுக்கும் விவசாயிகளுக்கும் தேசிய இனங்களுக்கும் அவ்வாறு சரணடைய முடியாது. ஏனெனில் அவ்வாறு சரணடைவது இலங்கையின் தொழிலாளிகளினதும் விவசாயிகளினதும் தேசிய இனங்களினதும் இருப்பையே பாதிக்கும்.

தமிழர்களின் கோரிக்கைகளுக்கு இந்தியா சாதகமாக இருக்கும் என்று தொடர்ந்து பல தமிழர் அமைப்புக்கள் பிரசாரம் செய்துவருகின்றன. ஆனால் தமிழர் போராட்டத்தையும் தமிழ்மக்களின் கோரிக்கைகளையும் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளையே இந்தியா தொடர்ந்து முன்னெடுத்து வருகிறது. இலங்கையின் இனப்பிரச்சினைக்கு காணப்படும் எத்தகைய தீர்விலும் இந்திய மாநிலங்களுக்கு வழங்கப்படக் கூடாது என்பதில் இந்தியா உறுதியாகவே இருந்து வருகிறது. அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை நசுக்குவதை பிரதான நோக்கமாகக் கொண்டு செயற்படுகிறது. ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டமைக்காகவன்றி இந்திய மேலாதிக்கத்திற்கு சவாலாகவும் அதனால் இந்திய தேசிய இனங்களிடம் தேசிய இனவிடுதலை போராட்டங்கள் பலமாக வளர்ச்சியடைய உதவும் வகையில் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கம் இருக்கக்கூடாது என்பதில் இந்தியா கவனமாகவே இருக்கிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹவின் இந்திய விஜயம் வெறும் பொருளாதார நோக்கம் கொண்டதாக மட்டுமன்றி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஓரம் கட்டுவதற்கான நோக்கத்தையும் கொண்டதாகும். மேலாதிக்க எண்ணம் கொண்ட இந்தியத் தலைவர்கள் அனைவரையும் பிரதமர் சந்தித்துள்ளார். இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு இந்தியா ஆதரவு தர வேண்டும் என்ற அவரின் கோரிக்கை புலிகள் இயக்கத்திற்கு எதிரான நிலைப்பாட்டையும் கொண்டதும்தான். ரணில் இலங்கை முதலாளி வர்க்கத்தினதும் அதேவேளை சிங்கள பௌத்த பேரினவாதத்தினதும் தலைவராகவே இருக்கிறார் என்பதும் புரிந்து கொள்ளப்பட வேண்டியதாகும்.

இந்திய மேலாதிக்கத்திற்கு எதிரான போராட்டமும் விடுதலையும் இப்பிராந்திய நாடுகளின் மக்களது போராட்டங்களிலும் விடுதலையிலும் மட்டுமன்றி இந்திய மக்களின் போராட்டங்களிலும் விடுதலையிலும் தங்கியிருக்கின்ற ஒரு அம்சமும் இருப்பதை மறந்துவிட முடியாது.

பொதுவாக இப்பிராந்திய நாட்டு மக்கள் புரிந்துணர்வுடனும் குறிப்பாக அவ்வவ் நாட்டு சூழ்நிலைகளுக்கு ஏற்ப அவ்வவ் நாட்டு மக்கள் இந்திய மேலாதிக்கத்திற்கு எதிரான போராட்டங்களை முன்னெடுப்பதிலிருந்து தூரவிலகி இருக்க முடியாது.

இந்திய மேலாதிக்கத்தை எதிர்ப்பது போன்றே அமெரிக்க ஏகாதிபத்தியத்தினையும் எதிர்த்தே ஆக வேண்டும். இரண்டும் புரிந்துணர்வுடன் உள்நோக்கத்துடன் இலங்கையையும் இலங்கை மக்களையும் கட்டுப்படுத்துகின்றனர். இலங்கையின் முதலாளி வர்க்கத்தையும் பேரினவாதத்தையும் பயன்படுத்தி இலங்கையை பளீகரம் செய்ய முற்படுகின்றன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹவின் தலைமையில் மிகவும் வேகமாக முன்னெடுக்கப்படுகின்ற இந்தியா மேலாதிக்கத்தினதும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் ஆதிக்கத்தை இலங்கையில் நிலைநாட்டும் நடவடிக்கைகளுக்கு இலங்கை மக்கள் அனைவரும் எதிராக நிற்பதுடன் மாற்று நடவடிக்கைகளுக்காக போராடுவதும் அவசியமாகும். அதன் மூலமே தொழிலாளர்கள், விவசாயிகள், அடக்கப்படும் தேசிய இனத்தவர்கள் உட்பட அனைத்து இலங்கையரும் சுதந்திரமாக வாழும் நிலையை உறுதி செய்ய முடியும்.

- ஆசிரியர் குழு -

## வர்க்கப் போராட்ட அரசியலின் தேவையும் புதிய தலைமுறையினரின் சிந்தனையும்

மனிதகுல வரலாற்றோடு தோன்றி வளர்ந்த பல்வேறு முக்கிய அம்சங்களில் ஒன்று அரசியல். ஆனால் இவ் அரசியலில் மக்கள் பெரும் திரள் பங்கு பற்றுவது சராம்சத்தில் அனுமதிக்கப் படவில்லை. சொத்துடமையும் சுகபோக வாழ்வும் மேற்கொண்டு அவற்றுக்காக மக்களை அடக்கி ஒடுக்கி அவர்களது உழைப்பை சூறையாடி வந்த ஒரு சிறு பிரிவினரே அரசியலையும் தமது கரங்களில் இறுக்கமாக வைத் திருந்தனர்.

இருப்பினும் வரலாற்று வளர்ச்சிகளும் போராட்ட இயக்கங்களும் அரசியலில் மக்களின் பங்கு பற்றுதல்களைச் சாத்தியமாக்கி வந்தன. ஆனால் அவை கூட அதிகாரம் என்னும் மையத்தை நோக்கி மக்கள் செல்வதைத் தடுத்து வந்துள்ளன. மட்டப்படுத்தல்களின் கடுமையான கட்டுப்பாடுகளின் மத்தியிலேயே மக்கள் அரசியல் பேசவும் பங்கு கொள்ளவும் அனுமதிக்கப் பட்டனர். அந்த அரசியல் செயற்பாடு எனப்படுவது வாக்குரிமை அடிப்படையி லான தேர்தல் அரசியல் வரையறை களால் எல்லையிடப்பட்டும் வந்துள்ளன. இவை முதலாளித்துவத்தின் தோற்றத் திற்கு பிந்திய ஜனநாயகம் என்ற பதத்தால் ஒழுங்கு படுத்தப்பட்டு மக்கள் மீது ஏற்றி வைக்கப்பட்டது. அத்தகைய ஜனநாயக அரசியல் எனப்படுவது முதலாளித்துவ ஆளும் வர்க்க அரசியலாக உறுதிப்படுத்தப்பட்டு நிலைப்பிற்கு உள்ளாகியது.

ஆனால் உலகின் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுக்கூறில் இருந்தே மக்கள் பெருந்திரளின் பக்கமான வர்க்க அரசியல் என்பது தெட்டத் தெளிவுடை யதொன்றாக மார்க்சியத்தினால் முன்வைக்கப்பட்டது. முதலாளித்துவத்தி னால் உருவாக்கம் பெற்ற தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலான அரசியல் என்பது உலகின் பன்முக ஒடுக்கு முறைகளாலும் அடக்கப்பட்டு வந்த மக்களின் விடிவிற்கும் விமோசனத்திற்கு மான வர்க்க அரசியலாகியது.

இம் மார்க்சிய அரசியல் ஒவ்வொரு நாடுகளிலும் விரைவாக உட்புகுந்து வலிமை பெற்றுக் கொண்டது. அதனால் முதலாளித்துவ அரசியலும் அதற்கெதி ரான தொழிலாளி வர்க்க அரசியலும் நேர் எதிர் நிலைப்பாட்டிலிருந்து மோதுகைக்கு உட்பட்டது. தொழிலாளி வர்க்க அரசியல் அதிகாரம் 1917ன் ஒக்ரோபர் புரட்சியின் மூலம் சோவியத் ரஷியாவில் நிலைநிறுத்தப்பட்டது. இனைத் தொடர்ந்து உலகின் பல நாடுகளிலே வர்க்க அடிப்படையிலான அரசியல் ஆட்சி அதிகாரம் நடை முறைக்கு வந்து கொண்டன.

நமது சமூகப் பரப்பிலே அரசியல் என்பது மேட்டுக்குடியினருக்குரிய ஒன்று என்றும் அதில் சாதாரண மக்கள் சம்மந்தப்படத் தேவையில்லை என்ற கருத்து நிலை பரப்பப்பட்டு வந்துள்ளது. அடுத்து அரசியல் என்றால் அது பாராளுமன்ற அரசியல் மட்டும் தான் என்பதாகவும் வியாக்கியானம் செய்யப்படுவது நடைமுறையில் இன்றும் காணப்படுகின்றது. மேலும் மக்கள் இளைஞர். யுவதிகள், மாணவர்கள். அரசியலில் ஈடுபடக்கூடாது என்ற அறிவுரையை மதத்தலைவர்கள். சமூகப்பெரியார்கள். கல்வியாளர்கள்

**வெகுஜனன்**

என்போர் அடிக்கடி சொல்லி வருவதைக் கேட்க முடியும். இதே போதனையை இன்றைய அரசு சார்பற்ற நிறுவனங்களின் பரப்புரை களிலும் தாராளமாகக் கண்டு கொள்ள லாம். ஏற்கனவே உறுதியாக்கப் பட்டுள்ள சமூக அமைப்பும் அதற்கான அரசியலுக்கும் பங்கமில்லாதவாறு பார்த்துக் கொள்வதே அந்நிறுவனங் களின் தொண்டு நோக்காகும். அதுவும் அரசியல் தான் என்பதைப் பலரும் விளங்கிக் கொள்வதில்லை. ஆனால் நம் அரசியலுக்கு அப்பாற்பட்ட நிறுவனம். எமக்கு எந்த அரசியலும் கிடையாது. அரசியலில் சார்புநிலை எடுக்கமாட் டோம் என்றே கூறிக்கொள் வார்கள்.

ஆனால் உண்மையில் இத்தகைய நிறுவனங்களே இன்று மூன்றாம் உலக நாடுகளின் உள்நாட்டு அரசியலில் மறை கரங்களாகச் செயற்படுகின்றன. தமக்கு அரசியல் இல்லை ஆண்டவனே ஒரே குறிக்கோள் எனக் கூறும் மதத்தலைவர்கள் இறுதிநேரங்களில் அரசியலில் தீர்மானிக்கும் சக்தியாகி தமக்குள்ள செல்வாக்கை மக்கள் மீது திணித்து ஆளும் மேட்டுக்குடி அரசியலுக்கு உதவிக் கொள்வார்கள். இதே சக்திகள் தான் சாதாரண வேளைகளில் அரசியல் நமக்கு வேண்டாம் என்று நயவஞ்சக வேடமணிந்து நிற்பார்கள். இவர்கள் அனைவரினதும் சார்பான தொழிலாளி வர்க்க அரசியலேயாகும்.

இவர்கள் அனைவரும் தமக்குரிய ஆளும் வர்க்க அரசியல் நிலைப் பாட்டைக் கொண்டிருப்பதுடன் தொழிலாளிவர்க்க மார்க்சிச அரசியல் மேலெழும்புவதை பல்வேறு கருவிகள் கொண்டு தடுக்கும் முன் முயற்சிகளில் ஈடுபட்டும் வருகின்றனர். நவீன சிந்தனைகள் என்று கூறியவாறே தொழிலாளிவர்க்கத்தின் மக்கள் விடுதலைக்கான மார்க்சிச வர்க்க அரசியலை நிராகரிக்கின்றனர். இது இன்றைய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்டதொன்றாகவே முன்னெடுக்கப்படுகின்றது. தலித்தியம். தேசியம், பெண்ணியம் என்றும் கட்டுடைப்பு. கட்டவிழ்ப்பு எல்லா அதிகாரமும் சிதறுக. என்றும் விளிம்பு நிலை. மறுவாசிப்பு எனவும் பேசப்படு கின்றது. இவை அனைத்தும் வர்க்கப் போராட்ட அரசியலுக்கு எதிரானவை களாகவே முன்னெடுக்கப்படுகின்றன.

கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் உலகமயமாதல் என்பதை நமது நாடுபோன்று மூன்றாம் உலக நாடுகள் - மக்கள் மீது திணிக்கப்பட்டது. இத்திட்டத்திற்குரிய அடிப்படை மாற்று எதிர்ப்பு அரசியல் அதிலும் மார்க்சிச அரசியல் அரங்கில் எழக்கூடாது என்பதேயாகும். இப்போக்கு பல்வேறு பிரச்சினைகளை குறிப்பாகத் தேசிய இனப்பிரச்சினையை ஒடுக்குமுறை மூலம் வலுப்படுத்திக் கொண்டதால் மார்க்சிச அரசியலும் வர்க்கப் போராட்ட அடிப்படைகளும் பின்னடைவைக் கண்டன.

ஆனால் புதிய தலைமுறையினர் இத்தகைய பின்னடைவுச் சூழலை மாற்றியமைப்பார்கள் என்பதில் ஐயம் இருக்க முடியாது. மீண்டும் மக்கள் பெரும் திரளின் கைகளுக்கு தொழிலாளி வர்க்க அரசியல் சொல்லாலும் செயலாலும் வந்து சேரவேண்டும். வர்க்க சக்திகளின் அரசியலை மார்க்சிச லெனினிச அடிப்படையில் புதிய தலை முறையினர் இறுகப் பற்றிக் கொள்ளல் வேண்டும். நமக்குரிய அரசியலை நாமே முன்னெடுத்து எதிர் வர்க்க சக்திகளின் அரசியலைத் தோற்கடிக்க வேண்டும். இது பாராளுமன்றத்தால் ஆகக் கூடிய ஒன்றல்ல. மக்கள் திரளின் உணர்வுப் பூர்வமான புரட்சிகரப் போராட்டங்களி னாலே சாத்தியமாக்கப்படக் கூடிய தாகும்.

• • • • • • •

## மறைந்த மு. சிவசிதம்பரம் ஆதிக்க அரசியலின் அடையாளச் சின்னம்

அண்மையில் தமிழர் கூட்டணியின் தலைவர் மு. சிவசிதம்பரம் தனது 79வது வயதில் காலமானார். அவரது மறைவுக்கு பாராளுமன்றக் கட்சிகளின் தலைவர்களும் மற்றும் தமிழ் இயக்கங் களின் தலைமைகளும் புகழாரங்கள் வரைந்து அனுதாபச் செய்திகள் வெளி யிட்டனர். தமிழருக் காகப் போராடிய தீரர், தியாக வாழ்வு வாழ்ந்தவர், வாழ்நாளை தமிழர் உரிமைக்காக அர்ப்பணித்தவர். சளைக்காத தமிழ் அரசியல்வாதி, பழைய தலைமுறைக்கும் புதிய தலைமுறைக்கும் பாலமாக நின்றவர் என்றெல்லாம் கூறப்பட்டது. மேலும் படித்த மேதை சட்டக் கல்விமான். பரந்த நெற்றி, கனிந்தமுகம். சிம்மக்குரல். உயர்ந்த தோற்றம், ஏறு நடை என்றெல்லாம் ஏற்றிப் புகழுரை சூட்டப்பட்டன. இவை உண்மையான வையா அல்லது வெறும் புனைவுகளா?

இவற்றுக்கும் அப்பால் பேராசிரியர் சிவத்தம்பி கல்வெட்டுப் பாணியில் தினக்குரல் ஞாயிறு இதழில் நீண்ட கடிதம் எழுதியிருந்தார். அதில் கரவெட்டி ஊர். படிப்பு. பாடசாலை. கோவில். மண். மயானம். குளம் என்ப துடன் பரம்பரை பற்றி உடையாரின் மகன். இரண்டு உடையார்மாரின் பேரன் என்ற நீண்ட வாசிப்பு. அத்துடன் உடையாரின் கடைக்கண் கடாட்சத் தால்தான் தேவரையாளியில் சூரன் என்பவர் பாடசாலை கட்டியதாக ஒரு இட்டுக் கதையைச் சேர்த்துக் கூறிய சிவத்தம்பி உடையார் செய்த 'மௌனப் புரட்சி' பற்றியும் தனது தமிழில் சிலாகித்து எழுதி சிவசிதம்பரத்தின் பரம்பரையை மட்டுமன்றி பழைமைவாத ஆதிக்க அரசியல் சக்திகளையே மெய்சிலிர்க்க வைத்துவிட்டார். பாவம் பேராசிரியர்.

இறந்த ஒருவரைப் பற்றி சம்பிரதாயத் திற்கு புகழுரை கூறுவது தமிழ் மரபு என்று சிலர் சமாதானம் கூறலாம். ஆனால் ஒரு அரசியல் தலைவரைப் பற்றிய கண்மூடித்தனமான புகழுரைகள் வரலாற்றுத் திரிபாகி புதிய தலைமுறை யினருக்கு இருட்டடிப்பாகிவிடக் கூடாது என்பதில் கவனம் வேண்டும்.

சிவசிதம்பரம் யாழ்ப்பாணம் வடமராட்சி கரவெட்டி உடையார் பரம்பரையில் வந்தவர். நில. பண. அதிகார. சாதிய ஆதிக்கத்தை கைகளில் வைத்திருந்த ஆண்டபரம்பரையினரின் வாரிசுகளில் ஒருவர். பல்கலைக் கழகத்தில் படித்த அன்றைய சூழலில் இடதுசாரிப் பக்கம் எட்டிப் பார்த்தவர் மட்டுமே. அவரால் பொதுவுடமைக் கருத்தியலை உள்வாங்க முடியவில்லை. காரணம் அவரிடம் சொந்த வர்க்க முத்திரை ஆழமாகப் பதிந்திருந்தது. அதன் காரணமாக விரைவாகவே யாழ்ப்பாண சைவ வேளாள ஆதிக்க அரசியல் கட்சி யான தமிழ்க் காங்கிரசில் இணைந்து கொண்டார். குடும்ப ஆதிக்கம். சட்டத்தொழில். சொத் துடமை. சாதிய மேன் நிலை என்பன பாராளுமன்ற ஆதிக்க அரசியலில் அவருக்குரிய இடத்தைப் பெற்றுக் கொடுத்தது. சிவசிதம்பரம் மேட்டுக்குடிகளின் பிரதி நிதியாக தமிழின் பெயரால் பாராளு மன்றத்திற்கு உடுப்பிட்டித் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டவர். இதே கரவெட்டியில் இருந்து வந்த தோழர் பொன் கந்தையா பொதுவுடமை வாதியாக இறுதிவரை வாழ்ந்து மறைந்தவர். உழைக்கும் மக்களாலும் தாழ்த்தப்பட்டவர்கள் என்றழைக்கப்படும் மக்களாலும் பாராளுமன்றத்திற்கு ஒருமுறை அனுப்பப்பட்டவர். ஆண்ட பரம்பரையினருக்கும் ஆதிக்க அரசியலுக்கும் தலைவணங்காது தனது அரசியல் நெறியில் இறுதிவரை உறுதியாக நின்றவர் என்பது இவ்வேளை நினைவுபடுத்த வேண்டிய ஒன்றாகும்.

சிவசிதம்பரம் தமிழின் பெயரால் ஆதிக்க அரசியல் செய்து வந்தபோது என்றுமே வர்க்கத்தாலும் சாதியாலும் ஒடுக்கப்பட்ட

தொடர்ச்சி 12ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com



# உலகமயமாதலும் மாற்றுச் சிந்தனையும்

**கடந்த 10-06-2002 அன்று யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் யாழ்-சமூக விஞ்ஞான கல்வி வட்டம் நடாத்திய கருத்தரங்கில் "உலகமயமாதலும் மாற்றுச் சிந்தனையும்" என்னும் தலைப்பில் பேராசிரியர் சி. சிவசேகரம் ஆற்றிய உரையின் சுருக்கத்தை இங்கே தருகின்றோம். இக் கருத்தரங்கிற்கு யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் வீ. பி. சிவநாதன் தலைமை தாங்கினார்.**

ஆரம்பத்தில் தேச எல்லைகட்கு உட்பட்டிருந்த முதலாளிய மூலதனம் ஒருபுறம். முதலாளிகளி டையிலான சுதந்திரமான போட்டி என்ற நிலையிலிருந்து ஒரு சில முதலாளிகளின் ஏகபோக ஆதிக்கத்திற்கு உட்பட்ட உற்பத்தி என்ற நிலையை அடைந்தது. மறுபுறம், தன் தேச எல்லைகளுக்கு உட்பட்ட சந்தையை அந்த எல்லைகட்கு வெளியே விஸ்தரிக்க வேண்டிய நிலையையும் அது அடைந்தது. அயல் நாடுகளின் சந்தைகளைத் தமது ஆதிக்கத்தின் கீழ் வைக்கும் தேவையை ஏகபோக முதலாளிகள் தமது அரசுகளின் உதவியால் நிறைவு செய்தனர். கொலனிய ஆதிக்கம், முதலாளியம் ஏகபோக முதலாளியமாக வளர்ந்து நிலைக்க அவசியமான ஒன்றாக இருந்தது. ஏகாதிபத்தியம் என்பது ஏகபோக முதலாளியமே என்று லெனின் ஏகாதிபத்தியத்தை வரையறுத்தார். இன்று அமெரிக்க ஏகாதிபத்தியம் என்றும் பிரித்தானிய ஏகாதிபத்தியம் என்றும் அந்தந்த நாடுகளைச் சேர்ந்த ஏகபோக முதலாளிகளது நலன்களைக் காப்பாற்றச் செயற்படுகிற அரசாங்கங்களையே சொல்லுகிறோம்.

முதலாளியத்தின் இத்தகைய வளர்ச்சி. ஏகாதிபத்திய நாடுகளிடையே தவிர்க்க முடியாத போட்டியையும் போரையும் உண்டாக்கியது. ஏனெனில். அயல் நாட்டுச் சந்தைகளையும் மக்களது உழைப்பையும் அந்த நாடுகளின் மூல வளங்களையும் எந்த ஏகாதிபத்தியம் அதிகளவில் தன் ஆதிக்கத்தில் வைத்திருக்கிறதோ அதுவே மற்ற ஏகாதிபத்தியங்கள் மீது ஆதிக்கம் செலுத்த முடியும். சென்ற நூற்றாண்டில் நிகழ்ந்த இரு பெரும் உலகப் போர்களின் அடிப்படையான காரணம் இதுவே. முதற் போரின் விளைவாக ஜேர்மன் ஏகாதிபத்தியம் முறியடிக்கப்பட்டது. அதே வேளை. பலவீனமான ரஷ்ய ஏகாதிபத்திய அரசு புரட்சியாற் கவிழ்ந்தது. 1917ல் உலகின் முதலாவது சோஷலிஸ நாடாக சோவியத் ரஷ்யாவும் ரஷ்யாவின் பழைய கொலனிகளைச் சமமான பங்காளிகளாகக் கொண்ட சோவியத் யூனியனும் உருவாகின.

இரண்டாம் உலகப்போர், முதலாவது போரின் தொடர்ச்சியே என்று வரலாற்றாளர் பலர் கூறுவர். இப்போரின் பின்னணியில் ஃபாஸிஸத்தின் எழுச்சியும் ஏற்பட்டது. அதே வேளை. இப்போரின் முடிவிற்குள், கொலனி ஆட்சிமுறைக்கு எதிரான எழுச்சிகள் மிகுந்த வேகம் பெற்றன. ஆசியாவில், பிரித்தானிய, பிரெஞ்சு, டச்சுக் கொலனிகள் ஒவ்வொன்றாக விடுதலை பெற்றன. 1950 அளவில், ஏறத்தாழ முழு ஆசியாவும் நேரடியான கொலனி ஆட்சியினின்று விடுபட்டது. கொலனி எதிர்ப்பு அலை 1950களில் ஆபிரிக்காவில் எழுந்தது. 1960களில் ஆபிரிக்காவின் பெரும்பகுதி கொலனி ஆட்சியை உதறித் தள்ளியது. ஆனாலும். 1945க்குப் பிறகு உலகின் மிக வலிய ஏகாதிபத்திய வல்லரசாக அமெரிக்கா தன்னை நிலை நிறுத்தியது.

1975ம் ஆண்டு வியற்நாமில் அமெரிக்கா கண்ட அவமானமிக்க தோல்வி. கொலனிய விரோத, ஏகாதிபத்திய விரோத எழுச்சிகளின் உச்சக்கட்டம் என்று சொல்லலாம். அதேவேளை. அமெரிக்க ஏகாதிபத்தியம் உலகை அடக்கி ஆள்வதற்கான தனது புதிய தந்திரோபாயத்தையும் உருவாக்கியது. பழைய கொலனிய ஆதிக்க முறை உலக மக்களது கடும் எதிர்ப்பைச் சந்திக்கும் என்பதை நேரடியாகக் கண்டும் அனுபவித்தும் பாடம் கற்ற அமெரிக்கா, மூன்றாமுலக நாடுகளில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தவும் மூன்றாம் உலக நாடுகளின் புரட்சிகர எழுச்சிகளை நசுக்கவும். மூன்றாம் உலகின் முதலாளிய அரசுகளையே பயன்படுத்தும் முயற்சியில் இறங்கியது.

சோவியத் யூனியனுக்கு எதிரான ஒரு முதலாளிய அணி என்ற பேரில். மேற்கு ஐரோப்பாவுடன் ராணுவக் கூட்டு ஒன்று 1945ல் உருவானது. ஆயினும். 1960 அளிவிலேயே அமெரிக்காவின் மேலாதிக்க நோக்கத்தைக் கண்டறிந்த ஐரோப்பிய நாடுகளில் அதற்கு மாற்றான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பிரான்சும் மேற்கு ஜேர்மனியும் முன்னின்று உருவாக்கிய ஐரோப்பிய ஒன்றியம். அமெரிக்காவின் பொருளா தார மேலாதிக்கத்திற்கு எதிரான இன்றைய ஐரோப்பியச் சவால் எனலாம். அமெரிக்காவால் தொடக்கத்தில் ஊக்குவிக்கப்பட்ட ஜப்பானும் ஒரு போட்டியான பொருளாதார வல்லரசாக வளர்ந்தது.

அமெரிக்காவுக்கும் பிற ஏகாதிபத்திய நாடுகளுக்குமிடையிலான உறவு, சோஷலிச எதிர்ப்பு. மூன்றாம் உலகைத் தட்டி அடக்குதல் போன்ற விடயங்களில் பொது உடன்பாடாகவும் பொருளாதார ஆதிக்கம் என்பதில் மோதலாகவும் இதுவரை தொடர்ந்து வந்துள்ளது. சோவியத் யூனியனில் குருஷ்சொவ் அதிகாரத்துக்கு வந்த பின்பு தொடங்கிய சீரழிவின் விளைவாக, சோவியத் யூனியன் அமெரிக்காவுடன் ஒருபுறம் மேற்கொண்ட சமரசமும் மறுபுறம் மேற்கொண்ட ஆயுதப் போட்டியும் உலக ஆதிக்கத்துக்கான போட்டியும் சோவியத் யூனியனின் பொருளாதாரத்தின் சிதைவிலும் பின்பு அதன் உடைவிலும் ஐரோப்பாவின் சோஷலிஸ ஆட்சிகளது கவிழ்விலும் வந்து முடிந்தன. இதன் விளைவாக. 1991ல் அமெரிக்காவே உலகின் அதிக ஆயுத வலிமை பெற்ற நாடாகவும் அதிகளவு பொருளாதார வலிமை கொண்ட ஏகபோக முதலாளிய நாடாகவும் அமைந்தது. இதன் பின்னரே. அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது நவகொலனிய விஸ்தரிப்புக்கு உலகமயமாதல் என மறுபேர் இட்டது.

முழு உலகையும் தன் குடைக்கீழ் கொண்டு வரும் நிலையைப் பூகோளக் கிராமம் என அழைத்தது. தனது உற்பத்திகளை மூன்றாம் உலக நாடுகளில் கட்டுப்பாடின்றி விற்றுத் தள்ளும் அதிகாரத்தை திறந்த சந்தைப் பொருளாதாரம் என்றது. மூன்றாமுலக நாடுகளின் தொழில், வணிகம், விவசாயம் ஆகிய அனைத்தையும் தன் கீழ்க் கொண்டு வர இயலுமாக்கும் காரியத்துக்குத் தாராளமயமாக்கல் என்று அது பேரிட்டது. மூன்றாமுலக நாடுகளின் அரசாங்கங்கள் தமது நாட்டின் பொருளாதாரத்தின் மீது கொண்டிருக்கும் கட்டுப்பாட்டை நீக்குவதை மறுசீரமைப்பு என்றது.

இவை அனைத்துக்கும் மேலாக. பண்பாட்டுத் துறையிலும் மூன்றாம் உலகின் கல்வி, உணவு. உடை, பொழுதுபோக்கு ஆகிய அனைத்திலும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது சிந்தனையின் ஆதிக்கத்தைச் செலுத்தியது. மூன்றாமுலக நாடுகளின் கல்வியின் சீரழிவும். அமெரிக்காவின் குப்பை உணவுப் பழக்கங்களும். ஆடம்பரமான பழக்கங்களும் பண்பாட்டுச் சிதைவுக்கு ஊக்கம் தரும் பழக்க வழக்கங்களும் பொழுதுபோக்கும் புதிய பரம்பரையினரது சிந்தனையைச் சமூகப் பயனுள்ள திசையில் போகாது தடுக்கும் என்பதை நன்கறிந்தே. அமெரிக்க ஏகாதிபத்தியம் மூன்றாம் உலகின் பண்பாட்டுச் சீரழிவுக்குத் தன் சினிமா, தொலைக்காட்சி. வானொலி, சஞ்சிகைகள். இசை. விளம்பரங்கள் போன்ற சகல ஆயுதங்களையும் பாவித்து வருகிறது.

இன்னொரு புறம். மூலதனத்தின் வளர்ச்சியின் இன்னொரு அம்சமாகப். பணம் உடையவர்களது தனிப்பட்ட முதலீடாக இருந்த மூலதனம் ஏகபோக முதலாளித்துவத்தின் வருகையோடு பல முதலீட்டாளர்களது கூட்டான மூலதனமாகவும் வங்கிகளின் கடன் முதலீட்டு வசதி போன்றன மூலம் இன்னும் பரவலான அளவில் உற்பத்தியுடன் தொடர்பு அற்றவர்களது மூலதனமாகவும் விரிந்தது. அண்மைக் காலங்களில், நேரடியாகவே நடுத்தர வர்க்கத்தினரதும் முன்னேறிய முதலாளிய நாடுகளில் தொழிலாளர்களில் ஒரு பகுதியினரதும் முதலீட்டுக்கும் இடமளிக்கும் விதத்தில் பங்குச் சந்தைகளின் செயற்பாடு உருமாறியுள்ளது. இன்று பங்குச் சந்தை முதலீடு. பங்கு விலைகளின் ஏற்ற இறக்கத்துடன் ஒட்டக்கூடிய ஒரு சூதாட்டமாகவும் மாறிவிட்டது. இச்சூழ்நிலையில் சிறு முதலாளிகளாகக் கூட அல்லாத. உழைக்கும் மக்களில் ஒரு பகுதியினர். தமது நலன்களைத். தாம் சிறு தொகைகளை முதலிட்ட ஏகபோகக் கம்பனிகளது நலன்களுடன் சேர்த்துக் கருதவும் இயலுமாகிறது.

எனவே பலவேறு வகைகளில் ஏகபோக முதலாளியம். முதலாளியத்துக்கு எதிரான சிந்தனை மக்கள் மனதில் எழாத வண்ணம் செயற்பட்டு வருகிறது. இதன் நோக்கம் பற்றி நாம் தெளிவாக இருக்க வேண்டும். சுருங்கச் சொன்னால், அது அமெரிக்காவின் பூகோளக்கிராமக் கனவுதான். அமெரிக்க ஏகாதிபத்தியமே இப் பூகோளக் கிரமத்தின் மிகவலிய பெரிய பண்ணையார். அவருக்கு அடுத்த படியாக ஒரு சில சிறிய நிலச் சொந்தக்காரர் இருப்பர். இவை பிற முன்னேறிய முதலாளிய நாடுகளின் ஆளும் வர்க்கங்கள். மூன்றாமுலகின் பெருந்தொகையான மக்கள் பண்ணையடிமைகளும் கூலிவிவசாயிகளுமேயாவர். இவர்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் அடியாட்களும் காவலதிகாரிகளுமாக மூன்றாமுலக நாடுகளின் அதிகார வர்க்கங்களும் அரச யந்திரமும் இருக்கும்.

இந்த விதமான எதிர்காலம் உலகுக்குத் தேவையா என்பதே நம்முன் உள்ள கேள்வி. வேண்டாம் என்பதே இன்று உலகின் ஒடுக்கப்பட்ட நாடுகளதும் மக்களதும் விடையாக இருக்கும். அவ்வாறாயின். அமெரிக்கா கனவு காணும் பூகோளக் கிராமத்திற்கு மாற்றான மனித சமத்துவப் பூகோளக் கிராமத்துக்காக நாம் செயற்பட வேண்டும். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலகமய மாக்கலுக்குப் பதிலாக மனிதரிடையே நல்லுறவும் நட்பும் பரிவும் கொண்ட ஒரு உலகமயமாக்கலுக்காக நாம் செயற்பட வேண்டும்.

அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதன் எடுபிடிகளும் இதுவரை வற்புறுத்தி வந்துள்ள மாற்றுச் சிந்தனை எது? இதுவரை காலமும் மனித சமுதாயம் போற்றி வந்த சமூகச் சார்பான மனித சமத்துவக் கோட்பாட்டுக்கும் மனிதரை மனிதர் சுரண்டுவதை எதிர்க்கும் சிந்தனைக்கும் எதிரான சிந்தனை அல்லவா! சுயநலத்தைக் கொண்டாடும் சிந்தனை அல்லவா! சமூக நலனுக்கும் மேலாகத் தனிமனித நலனை வற்புறுத்தும் சிந்தனை அல்லாவா! பொதுவுடைமைப்படுத்தப்பட்ட சிந்தனையும் ஒடுக்கப்பட்ட மக்களின் வேற்றுமையினிடையே ஒற்றுமை காணும் மனித ஐக்கியப் போக்கை மறுக்கும் பின்நவீனத்துவச் சார்பான சீரழிவுச் சிந்தனை அல்லவா!

இந்தச் சிந்தனை உண்மையில் மாற்றுச் சிந்தனை அல்ல. இது மனிதரை இதுவரைக்காலமும் அடக்கி ஒடுக்கி வைத்து வந்த அடிமை முறையை மேலும் நீடிக்கும் சிந்தனையே மனித குலம் நாடும் மாற்றுச் சிந்தனை. விடுதலைக்கான சிந்தனையாக அமைய வேண்டும். மனித சமுதாயத்தின் பலவேறு முரண்பாடுகள் இன்று கூர்மை அடைந்து வருகின்றன. முதலாளித்துவத்துக்கு எதிரான சிந்தனை இன்று ஏகாதிபத்திய நாடுகளில் மீண்டும் வலுப்பெற்று வருகிறது. தேசிய ஒடுக்குமுறைக்கும் இன ஒடுக்கலுக்கும் எதிரான போராட்டங்கள் முனைப்படைகின்றன. ஆணாதிக்கத்துக்கு எதிரான பெண்ணுரிமைப் போராட்டம் பரவலாகி வருகிறது. சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான எழுச்சி வலுப்பெறுகிறது. மனிதரது பல்வேறு உரிமைகட்கான போராட்டங்கள் ஓயவில்லை.மாறாக வலுத்து வருகின்றன.

எதிர்பார்க்க வேண்டியபடி இப் போராட்டங்களைத் தனிமைப்படுத்தி. மற்றப் போராட்டங்களுக்கு உடன்பாடற்றவையாகக் காட்டும் முயற்சிகள் ஒருபுறம் நடைபெறுகின்றன. முதலாளியச் சார்பான பெண்ணியம். வர்க்கப் போராட்டத்தை மறுக்கும் தலித்தியம். ஆதிக்க எண்ணம் கொண்ட குறுந்தேசியம் போன்றன இவ்வகையானவை. இவற்றை இனங்கண்டு எதிர்க்கும் அதேவேளை, நியாயமான போராட்டங்கள் அனைத்தையும். ஒன்றை ஒன்று ஆதரிக்கும் போராட்டங்கள் என்று உணர்ந்து. அவற்றை வர்க்கப் போராட்டத்துடன் ஒருங்கிணைத்து முன்னெடுத்துச் செல்வதற்கான ஒரு சிந்தனை இன்று விருத்தி பெற்று வருகிறது. இப்படிப்பட்ட சிந்தனையைத் தமது சூழலின் யதார்த்தத்திற்கேற்ப அமைப்பதும் உலகச் சூழலுடன் பொருத்தி நடைமுறைப்படுத்துவதுமே இன்றைக்கு அவசியமான மாற்றுச் சிந்தனையும் அதன் சவால்களுமாகும்.

---

# கோக்கா கோலாவால் ஆபத்து!

கொக்காகோலா, பெப்சிகோலா போன்றவை இல்லாமல் ஜீவிக்க முடியாதோ என்றளவிற்கு அவற்றை உற்பத்தி செய்யும் பல்தேசிய கம்பனிகளின் ஏமாற்று பிரச்சாரங்களுக்கும் அனுசரணைகளுக்கும் மூன்றாம் உலகநாட்டு மக்கள் ஏமாற்றப்பட்டு வருகின்றனர். சாப்பிடும் போதும், தாகம் எடுக்கும் போதும் மதுபானங்களுடன் கலந்து குடிக்கவும். கொக்காகோலா. பெப்சி கோலா என்பன பரவலாக பயன்படுத்தப் படுகின்றன. அவை இல்லாத உபசரிப்புக்களும் விருந்துகளும் இல்லை எனலாம். அந்தளவுக்கு பட்டி தொட்டி எல்லாம் அவை பரப்பப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

ஆனால் அவை 'மென்பானங்கள்' அல்ல. உயிர்க் கொல்லிகள். மனிதருக்கு கேடு விளைவிக்கக் கூடியன என்பதற்கு பல ஆதாரங்கள் இருக்கின்றன.

கறை படிந்திருக்கும் மலசலக்கூட கொமோடிலோ. ஸ்கொட்டிலோ கொக்கா கோலாவை ஊற்றி ஒரு மணித்தியாலத்திற்கு பின்பு தேய்த்து கழுவினால் கறை யாவும் நீங்கிவிடும்.

கொக்காகோலாவில் ஊறவைத்த அலுமினியக் கடதாசியினால் தேய்த்தால் குரோமியம் கார் பம்பரில் படிந்திருக்கும் கறையை போக்கலாம்.

கிறீஸ் படிந்து கறை ஏற்பட்டுள்ள துணிகளிலிருந்து கறையை அகற்ற துணிகளை கொக்காகோலாவில் ஊறவைத்துவிட்டு கழுவலாம்.

கொக்காகோலாவினால் வாகன கண்ணாடிகளை சுத்தம் செய்யலாம். ஒருவர் இறந்து பல ஆண்டுகளுக்குப் பின்பும் பற்கள் அழிவதில்லை. ஆனால் கொக்காகோலா. பெப்சிகோலா ஆகியவற்றில் பற்களை 10 நாட்களுக்கு ஊறவைத்துப்பார்த்தால் அவை கரைந்திருப்பதை அவதானிக்க முடியும்.

தில்லி பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கொக்காகோலாவை ஒரே நேரத்தில் கூடுதலாக குடிப்போரைத் தெரிவு செய்வதற்கான போட்டியில் எட்டுப் போத்தல் கொக்காகோலாவை குடித்த ஒருவர் மரணமானார். காரணம் அதை குடித்ததனால் இரத்தத்தில் போதியளவு ஒக்சிஜன் இல்லாமல் போய்விட்டது. காபனீரொட்சைட் அளவுக்கு அதிகமாகி விட்டது. அன்றிலிருந்து அப்பல்கலைக் கழக சிற்றுண்டிச்சாலையில் கொக்கா கோலா விற்பது தடைசெய்யப்பட்டுள்ளது. ஆகவே இவை எப்படி மென்பானங்களாக இருக்க முடியும்? நிச்சயமாக இவை உயிர் கொல்லும் இரசாயனப் பானங்களேயாகும்.

அமிலமும் காரமும் கூடியளவில் இருப்பதால் கொக்காகோலா. பெப்சிகோலா போன்றன குடலுக்கும் உடலின் ஏனைய அவயவங்களுக்கும் கேடு விளைவிக்கின்றன. இவற்றை தொடர்ந்து குடித்து வந்த பலர் சிறுநீரக நோயினால் அவதிப்பட்டு இறந்துள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஏகாதிபத்திய உலகமயமாதலின் சந்தைப் பொருளாதார முறையின் கீழ் மக்களின் தேவைகளுக்காக பொருட்கள் சந்தைக்கு வருவதில்லை. மாறாக லாபமாக உற்பத்தி செய்யப்படும் பொருட்களை கொள்ளைலாப விலைக்கு விறபனை செய்வதற்காகவே பொருட்கள் சந்தைக்கு வருகின்றன. மக்கள் மீது பொருட்கள் திணிக்கப்படு கின்றன. அப்பொருட்கள் மனிதவாழ்க்கைக்கு விளைவிக்கும் கேடுகள் பற்றி சிந்திப்பதற்கு முதலாளித்துவத்திற்கு மனிதாபிமானம் இல்லை. அதன் ஒரே குறிக்கோள் லாபம்! கொள்ளை லாபம்! என்பது மட்டுமே. அதற்காக எதையும் முதலாளித்துவம் செய்துகொள்ளும். இதற்கு நம்முன்னுள்ள உதாரணம் தான் கொக்காகோலாவும் பெப்சி கோலாவும்.

சர்வதேச ரீதியில் விளையாட்டுப் போட்டிகளையும் அழகுராணி போட்டிகளையும் நடத்துவதற்கு பல்தேசிய கம்பெனிகள் பணத்தை வாரியிறைப்பது அவற்றுக்கு விளம்பரத்தை தேடிக்கொள்வதற்கே ஆகும். அதேவேளை அக்கம்பெனிகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களை நடத்துகின்ற விதம் மோசமானதாகும். இத்தகைய ராட்சத பல்தேசியக் கம்பனிகள் ஒரே நேரத்தில் உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்களையும் சுரண்டுகின்றது. விற்பனையின் மூலம் ஒவ்வொரு நாட்டு மக்களையும் கொள்ளையிட்டுக் கொழுக்கின்றது.

கொக்காகோலா, பெப்சிகோலா இரண்டும் மிகப் பெரிய ராட்சத பல் தேசிய நிறுவனங்கள். அவை இரண்டுப் அமெரிக்காவின் கோடீஸ்வரர்களது மூலதனத்துடன் இயங்குவது. உலக நாடுகளில் வெவ்வேறு அளவுகளில் தரங்களில் அவை விலை போகின்றன எந்தளவுக்கு மக்கள் மத்தியில் பிரச்சார செய்து அமோக விற்பனை செய்ய முடியுமோ அந்தளவுக்கு இக்கம்பனிகள் பல வழிகளில் செயற்படுகின்றன கொக்காகோலாவும் பெப்சிகோலாவு உலக மக்களை குறிப்பாக. மூன்றா உலக நாடுகளின் மக்களிடமிருந்த பணத்தைக் கொள்ளையிடும் அதே வேளை மோசமான நச்சுத் தன்மை யைப் பரப்பி நோயாளர்களாக்கியு வருகின்றது. எனவே இவற்றை மக்க எதிர்த்து நிராகரிக்க வேண்டும் ஏமாற்றுப் பிரசாரங்களால் ஏமா திருக்க அவற்றைப் பகிஷ்கரிக்க வேண்டும். மக்கள் நாளாந்தம் குடிக்கு ஒவ்வொரு முடறு கொக்காகோலாவு பெப்சிகோலாவும் மோசமான நஞ்சு பதார்த்தங்களும் அதேவேளை பண உறுஞ்சலும் இருப்பதை உணர்ந் கொள்வது அவசியம். எனவே காசை கொடுத்துப் நோயை கொள்ளாதிருப்பதே சிறந்ததாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் ஊடகங்கள் பற்றி (4)

உலகின் பெரும்பாலான நாடுகளில் நீண்டகாலமாக வானொலி, அரசின் ஆதிக்கத்தின் கீழாகவோ, அரசின் உடைமையாகவோ இருந்து வந்தது. பாராளுமன்ற ஜனநாயகத்தின் பிறப்பிடம் என்று பெருமை பேசப்படும் பிரித்தானியாவிலும் 1960களின் பிற்பகுதி வரை வானொலி அரசகட்டுப்பாட்டின் கீழிருந்த பி.பி.சி. எனப்படும் பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஏகபோகமாகவே இருந்தது. வணிக நோக்கத்திற்காக ஒலிபரப்பைப் பாவிப்பதற்கு அதன் சட்ட ஒழுங்குகள் அனுமதிக்காததால் விளம்பரத்திற்காக வானொலியைப் பாவிக்க விரும்பிய வணிக நிறுவனங்களின் தேவையைச் சட்ட விரோதமாகச் செயற்பட்ட சில வானொலி நிறுவனங்கள் பாவித்தன. பிரித்தானியக் கடல் எல்லைக்கு வெளியே நிறுத்தப்பட்ட கப்பல் ஒன்றிலிருந்து செயற்பட்ட ஒரு ஒலிப்ரப்பு நிறுவனம் மக்களை எளிதில் கவரக் கூடிய பாடல்கள் போன்றவற்றை ஒலிபரப்பியதன் மூலம் பி.பி.சிக்கு ஒரு சவாலாக இருந்தது. அதைத் தொடர்ந்து சக்தி மிக்க ஒலிபரப்புக் கருவிகளுடன் ஐரோப்பாவினின்று தனியார் ஒலிபரப்பு நிலையங்கள் வணிக நோக்கில் இயங்கின. இவற்றின் விளைவாக தனியார் வானொலி சட்டபூர்வமாக இயங்கும் விதமாக பிரித்தானிய ஒலிபரப்புச் சட்டம் மாற்றி அமைக்கப்பட்டு இன்று பி.பி.சியுடன் போட்டியிடும் நிலையில் நூற்றுக்கும் மேலான தனியார் வானொலி நிலையங்கள் இயங்குகின்றன. பிராந்திய மட்டத்தில் இவற்றுக்கு ஈடுகொடுக்கும் முறையில் பி.பி.சி.யும் தனது பிராந்திய ஒலிபரப்பை மாற்றி அமைத்து வந்திருக்கிறது.

வானொலி மீது அரச ஏகபோகத்திற்கான தேவை ஏன் ஏற்பட்டது என்றால், மக்களை நேரடியாகச் சென்றடையக் கூடிய ஆற்றல் வானொலிக்கு இருந்தது. ஒரு பத்திரிகையைப் போலல்லாமல் விலை கொடாமல் அதைக் கேட்க இயலுமாக இருந்தது. வானொலியில் மனிதர் தகவல்களைத் தேடி வாசிப்பதற்கான தேவையோ கவனித்து வாசிக்கும் தேவையோ இல்லை. எனவே அரச அதிகாரத்தின் கரங்களுள் ஒன்றாக வானொலி செயற்பட்டது.

வணிக நலன்களுக்கான ஊடகமாக வானொலியைப் பாவிக்க முடியும் என்பது இரண்டு விதங்களில் உணரப்பட்டது. விளம்பரத்திற்கான தேவை அதிகமாகிவிட்ட முதாலாளியச் சூழலில் வானொலியின் பயன் பெரியது. விளம்பரத்திற்கான தேவையை வைத்து வானொலியைக் கொண்டு பணம் சம்பாதிக்கும் வாய்ப்பும் பெருகியது. எந்த நாட்டிலும் தனியார் வானொலி என்பது விளம்பரமும் லாப நோக்கும் கொண்டே செயற்பட்டு வந்துள்ளது என நாம் காணலாம்.

தனியார் வானொலி நிறுவனங்கள் எவையும் முதலாளிய முறையை மாற்றி அமைக்க விரும்ப நியாயம் இல்லை. ஆயினும் அவற்றுக்கு அரசியற் சார்பு இருப்பது தவிர்க்க இயலாதது. பெரிய பத்திரிகைகளின் அரசியலைப் போலவே வானொலியின் அரசியலும் இருக்கும். அதைவிட, முற்றாகவே விளம்பர வருமானத்தை நம்பியிருக்கும் தனியார் வானொலி நிறுவனங்கள் தமக்கு ஊட்டுகிற கைகளைக் கடிக்குமென எதிர்பார்க்க இயலாது. அந்த வகையில், பத்திரிகைகளை விட அதிகமான அரசாங்கச் சார்பையோ முதலாளியச் சார்பையோ வானொலி நிறுவனங்களிடமிருந்து எதிர்பார்க்க வேண்டியிருக்கும் என்பது நியாயமானதே. பாராளுமன்ற அரசியலில். பெரிய பத்திரிகை நிறுவனங்கள் ஒரு முதலாளியக் கட்சியையோ இன்னொரு முதலாளியக் கட்சியையோ ஆதரிக்கின்றது போல அல்லது அதிலும் அதிக வலதுசாரிப் பண்புடன் தனியார் வானொலி

## தனியார் வானொலியும் தகவற் சுதந்திமும்

இயங்காதபோது அது கீழ்த்தரமான பத்திரிகைகள் போல முற்றிலும் வணிக நோக்கில் மக்களுடைய ரசனையின் தரத்தைக் கீழிறக்கிக் காசு சேர்ப்பதிலேயே குறியாக இருக்க நேருகிறது. இதுவே ஐரோப்பாவின் யதார்த்தம். இதுவே இன்று மூன்றாமுலக நாடுகள் பலவற்றினதும் யதார்த்தமும் ஆகும்.

உண்மையான மாற்று வானொலி என்பது வெகுசன அமைப்புக்களால் வெகுசன ஆதரவுடன் நடத்தப்படுவது மட்டுமே. இத்தகைய வானொலியால் வணிக நோக்கில் இயங்கும் நிறுவனங்களுடனும் அரசுடனும் போட்டி போட முடியாது. ஆனாலும் விடுதலைப் போராட்ட இயக்கங்கள் வானொலியைப் பிரசாரத்திற்காகப் பாவிக்கின்றன. ஆனால் வானொலி மூலம் அவை மக்கள் ஆதரவைத் திரட்டி அதன் மூலமே தமது செலவினங்களை ஈடுசெய்ய முடிகிறது. இங்கு வானொலி ஒரு அரசியற் பணிக்கான கருவியாக மட்டுமே இயங்குகிறது.

அரசாங்கம் மக்களிடையே செல்வாக்கிழந்து போகிற சூழ்நிலைகளில் அரசாங்க வானொலித் தகவல்களை மக்கள் நம்ப முடியாத சூழ்நிலையில் மக்கள் மாற்று வானொலியை நாடுகின்றனர். இந்த மாற்று வானொலி நிறுவனம் பி.பி.சி.. வொய்ஸ் ஒவ் அமெரிக்கா போன்று வலிய நாடுகளின் அரசாங்கங்களது கருவிகளாகவோ கத்தோலிக்கத் திருச்சபை ஆதிக்கத்தின் கீழ் பிலிப்பின்ஸின் தலைநகரிலிருந்து ஒலிபரப்பாகும் }ரேடியோ வெரித்தாஸ்‍ போன்ற ஒன்றாகவோ இருக்கலாம்.

தகவல் ஒலிபரப்புத் துறைகளின் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக அரச கட்டுப்பாட்டை மீறியுள்ள வானொலித்துறையைத் தனியார் துறை ஊடுருவியதைத் தகவற்துறையின் ஜனநாயக வளர்ச்சி என்று எவரும் சொல்லக், கூடும். முதலாளிய பாராளுமன்றம் ஜனநாயகமானது என்றால் வானொலியில் தனியார் துறையின் செல்வாக்கின் வளர்ச்சியும் அப்படியான ஜனநாயகம் தான். இரண்டு இடங்களிலும் பண வலிமையின் பங்கு பெரியது.

இலங்கையில் பெருமுதலாளியத்தின் கட்சியான யூஎன்.பி. 1977க்குப் பிறகு உலகின் முதலாளியப் பெருவல்லரசுகளின் கையில் இந்த நாட்டின் பொருளாதாரத்தை ஒப்படைக்கும் பணியை 1980களின் பிற்பகுதியில் பெருமளவுக்கும் நிறைவு செய்தது. அந்நிய மூலதனத்தின் ஆதிக்கத்துக்கு எதிரான பாராளுமன்ற அரசியற் கட்சிகளின் சீரழிவின் பின்னணியில் தனியார் வானொலியின் வருகை முதலாளியத்துக்கோ பெரு முதலாளிய சார்பான அரசாங்கத்திற்கோ ஒரு மிரட்டலாக இருந்திருக்க இடமில்லை. ஆனாலும் செய்திகள், தகவல்கள் என்பன. பற்றிய நேரடியானதும் மறைமுகமானதுமான பல கட்டுப்பாடுகட்கும் உட்பட்டே இந்த வானொலி நிறுவனங்கள் இன்று வரை செயற்பட்டு வருகின்றன.

தனியார் வானொலி நிறுவனங்களினது நடத்தையைத் தீர்மானிப்பன லாப நோக்கமும் அரசாங்கத்தைப் பகைத்துக் கொள்ளாமல் மக்களிடையே தமது செல்வாக்கைப் பெருக்குவதுமேயாகும். இந்த வகையில் தமிழில் செயற்பட்டு நின்றுபோன சிங்கள முதலாளிய ஸ்வர்ண ஒலியும், பெருமுதலாளியக் கம்பனியான மகாராஜா நிறுவனத்தின் சக்தியும் தமது ஒளிபரப்பு நிகழ்ச்சிகளிற் கடைபிடித்து வந்த கொள்கையையே ஒலிபரப்பிலும் கடைப்பிடித்து வந்தன எனலாம். சூரியனின் மூலதனம் அயல்நாட்டிற் செயற்படும் இந்திய வம்சாவளி வணிகர்களுடையது.

சூரியன் செய்திகள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில், முக்கியமாக வடக்கில் விடுதலைப்புலிகட்கும் அரசாங்கத்துக்கும் போர் மும்முரமாக நடந்து கொண்டிருந்த காலத்தில் சில தகவல்களைப் பூடகமாகத் தெரிவித்த தன் மூலம் தமிழ் மக்களிடையே செல்வாக்கைப் பெற்றது. மற்ற இரண்டு தனியார் வானொலிகளையும் இலங்கை வானொலியையும் விடச் சிறிது அதிக நம்பகமான தகவல்களை வழங்குவதற்கு மேலாகச் சூரியன் ஒலிபரப்பாளர்கட்கு ஆற்றலோ அனுமதியோ கிடையாது என்பதை நாம் அறிவோம். ஒரு தனியார் நிறுவனத்துள் செயற்படுகிற ஒலிபரப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தின் அளவு நாட்டுக்கு நாடு வேறுபடலாம். ஆயினும் ஒரு நிறுவனத்தின் அரசியல். வணிக நலன்களின் எல்லைகட்கு உட்பட்டே இந்தச் சுதந்திரம் பயன்பட முடியும். இந்தச் சுதந்திரம் மேலை நாடுகளிற் சற்று அதிகமாகவும் மூன்றாமுலக நாடுகளில் குறைவாகவும் இருப்பதற்கான காரணம் மேலை நாடுகளில் ஜனநாயக சுதந்திரங்கள் பற்றிய மயக்கமே அங்கு முதலாளியத்துக்கு அரணாக இருப்பதும் மூன்றாம் உலகின் அரசாங்கங்கள் தம்மளவில் வலியனவாக இல்லாமையும் எனலாம்.

எந்த ஒலிபரப்பு நிறுவனமும் நாட்டின் தேசிய 'ஒற்றுமை', 'தேசிய நலன்கள்' எனப்படுகிற விடயங்களுக்குப் பாதகமாக நடப்பதாக அஞ்சப்படு மானால் அந்த நிறுவனம் தனது ஒலிபரப்பு அனுமதியை இழக்க நேரிடும். அல்லாது போனால் யாராவது ஒலிபரப்பாளர்கள் தமது வேலையை இழக்க நேரிடும். இதன் விளைவாகத் தனியார் நிறுவனங்களும், அவைபோல அவற்றின் ஊழியர்களும் ஒருவிதமான சுய தணிக்கையைக் கடைப்பிடிப்பதை நாம் காணலாம். இதற்காக நாம் தனிப்பட்ட முறையில் யாரையும் குறை கூற முடியாது. நாய் வேடம் போட்டால் குரைக்கத்தான் வேண்டும் என்பார்கள். 'குரைக்கலாம், கடிக்க முடியாது' என்பது தான் ஜனநாயக வேடம் பூண்ட ஒலிபரப்பாளர்கட்கு இடப்பட்ட விதி. மக்களைப் பொறுத்தவரை, யார் உண்மையை அதிகம் சொல்கிறார்கள் என்பதை விட யார் உண்மையை அதிகம் மறைக்கிறார்கள் என்பதை மட்டுமே ஒப்பிட வாய்ப்பு இருக்கிறது.

மேற்குறிப்பிட்ட ஒப்பீட்டின் அடிப்படையில் சக்தியையோ ஸ்வர்ண ஒலியையோ விடச் சூரியன் மேலாகத் தெரிந்தாலும் சூரியனின் அடிப்படை நோக்கம் மக்களுக்கு உண்மையை வழங்குவது மட்டுமே என்று யாரும் கருத இடமில்லை. ஏனெனில் அது வணிக நிறுவனமே ஒழியத் தரும நிறுவனம் அல்ல.

சகல தனியார் வானொலி நிறுவனங்களுக்கும் பொதுவான ஒரு பண்பாக விளங்குவது மக்களின் பண்பாட்டுத் தரத்தை உயர விடாமல் கவனித்துக் கொள்வதும் முடிந்த வரை மலினப் படுத்துவதுமே. மூன்றாந்தரமான இசை நிகழ்ச்சிகளையும் கீழ்த்தரமான ரசனையை ஊக்குவிக்கும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளையும் இவை ஏன் ஊக்குவிக்கின்றன என்று கேட்டால் எதிர்பார்க்கக்கூடிய விடைகளே வரும். 'மக்கள் அதைத்தான் எதிர்பார்க்கிறார்கள்' 'நாங்கள் செய்யாவிட்டால் மற்றவர்கள் செய்வார்கள்' 'நேயர்களை நம்முடன் வைத்திருக்க வேண்டும்.'

மட்டரகமான சினிமாவும், கீழ்த்தரமான சஞ்சிகைகளும் மக்களிடையே உள்ள தனிப்பட்ட பலவீனங்களைப் பயன்படுத்தி அவர்களது ரசனையை மோசமாக்கி வருகின்றன. அதே பலவீனத்தின் மீது தனியார் வானொலி நிறுவனங்கள் தமது செல்வாக்கைக் கட்டியெழுப்பி லாபத்தைப் பெருக்குகின்றன. நிறுவன முதலாளிகளைப் பொறுத்தவரை, நிகழ்ச்சிகளை விட நிகழ்ச்சிகட்கு இடையே வருகிற விளம்பரங்களே முக்கியமானவை.

பொதுமக்கள் பங்குபற்றும் நிகழ்ச்சிகள் என்ற தோரணையில் வரும் தொலைபேசி உரையாடல்களும் பேட்டிகளும் உட்பட்ட பல நிகழ்ச்சிகள் மூலம் மக்களுடைய அறிவு வளர இடமுள்ளதா என்று நம்மையே கேட்டுக் கொள்வோம். மக்களைச் சிந்திக்கத் தூண்டக் கூடிய நிகழ்ச்சிகளை விடத் தமது குரலை வானொலியில் கேட்பதிலும் சிறுபிள்ளைத்தனமான அரட்டையிலும் மகிழ்ந்து மனநிறைவு பெறுமாறு இளைய தலைமுறையைத் தூண்டுவதிலேயே இந்த நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன.

சொல்லப்போனால். அரசாங்கச் சார்பான செய்திச் சார்பும் திரிப்பும் இலங்கை வானொலியின் பலவீனமாக இருந்தாலும் தரமான நிகழ்ச்சிகளை வழங்க வேண்டும் என்பது கொள்கை அளவிலும் கொஞ்சத் தூரம் நடைமுறையிலும் அங்கே காணக்கூடிய ஒன்றாக உள்ளது. தனியார் வானொலியின் பொழுதுபோக்குக் கொள்கையோ இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பினும் மோசமாக மலினப்படுத்தப் பட்ட ரசனையை ஊக்குவிப்பதற்கு வானொலியையும் அதற்குப் புறம்பான 'கலை நிகழ்ச்சிகளையும்' பயன்படுத்துவதாகவே உள்ளது. இதற்கான காரணம் இந்த மலினப்பட்ட ரசனையே முதலாளிமாரின் மூலதனம்.

தனியார் வானொலியின் நடத்தையை நமது சமூகச் சீரழிவின் ஒரு பகுதியாகவும் அதன் காரணங்களில் ஒன்றாகவுமே நாம் காணவேண்டியுள்ளது. ஒவ்வொரு வானொலி நிறுவனமும் தனக்கான சில படிமங்களையும் அடையாளங்களையும் உருவாக்கி மக்களில் ஒரு பகுதியினரைத் தம் வசப்படுத்த முயல்கிறது. இதற்கு அப்பாலான சமூக அக்கறையை இந்தச்சமூகச் சூழலில் எதிர்பார்ப்பதில் நியாயமும் இல்லை. என்றாலும் சமூகச் சீரழிவுக்கும் சிந்தனையின் தரத்தை உயராமல் பார்ப்பதற்கும் தனியார் வானொலி நிறுவனங்கள் செய்கிற காரியங்களை நாம் கண்டிக்காமல் இருக்க முடியுமா?

---

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் யுத்த தயாரிப்பா? அரசியல் தீர்வா?

அ.பூபதி

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஒப்பமிடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் நான்காவது மாதத்தைக் காண்கிறது. கடற் பரப்பில் இடம்பெற்ற இரண்டு மோதல் சம்பவங்களைத் தவிர தரையில் மோதல்களோ தாக்குதல்களோ இடம் பெறவில்லை. இருப்பினும் இரு தரப்பிலிருந்தும் அதேவேளை பொது மக்கள் மத்தியிலிருந்தும் கண்காணிப்புக் குழுக்களுக்கு குற்றச்சாட்டுக்கள் முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன. அவைபற்றி விசாரணைகளும் இடம் பெற்றுள்ளன.

வடக்கு கிழக்கில் இப்போது பீரங்கிகளின் அதிர்வுகளோ துப்பாக்கிகளின் வேட்டுக்களோ கேட்கவில்லை. அவ்வாறே எறிகணை வீச்சுக்களும் விமானக் குண்டுகளும் இடம்பெறவில்லை. இவை மக்களுக்குப் பெரும் ஆறுதலும் நிம்மதியாகவும் காணப்படுகின்றன. பொருட்களுக்கான தடை நீக்கங்களும் பாதை திறந்தமையும் மக்களது கஷ்டங்களைப் பெருமளவிற்கு குறைத்துள்ளன என்பது உண்மையே. ஆனால் இவை தான் எல்லாமாக இருக்க முடியாது.

இருப்பினும் நிலைமைகளை உற்று அவதானித்து வரும் மக்கள் தற்போதைய சூழல் எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் என்ற ஒரு சந்தேகத்துடனேயே இருந்து வருகின்றனர். அவ்வாறான சந்தேக நிலைக்கு காரணங்கள் பல இருந்தும் வருகின்றன. அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் தெளிவான போக்குகள் தென்படவில்லை. குறிப்பாக ராணுவம் கடற்படையினர் முன்னெடுத்து வரும் செயற்பாடுகளை அவதானித்தால் ஒரு பரந்த நிகழ்ச்சி நிரலின்படியான யுத்தத் தயாரிப்பிலேயே ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

இராணுவ ஆட்சேர்ப்பு பயிற்சி. ஆயுதக் கொள்வனவு தொடர்கின்றன. யுத்த நிறுத்த சூழலில் கொண்டு வரப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்கு ஆறாயிரம் கோடிக்கு மேல் ஒதுக்கப்பட்டுள்ளது. இது ஏன் என்பது தான் கேள்வியாகின்றது. வடக்கு கிழக்கில் ஏற்கனவே இருந்து வரும் பாரிய ராணுவ முகாம்கள் மறுசீரமைப்புக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன. வடக்கில் புதிய முகாம்களும் விநியோகப் பாதைகளும் அமைக்கப்படுகின்றன. கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் பாதுகாப்பு அரண்களும் பதுங்கு குழிகளும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

பலாலி படைத்தளத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் கீரிமலை முதல் தொண்டமானாறு வரையும் உள்ளே அச்சுவேலி வசாவிளான். குரும்பசிட்டி தெல்லிப்பளை, காங்கேசன்துறை கீரிமலை உள்ளிட்ட பரந்த பிரதேசம் இப்போதும் உயர் பாதுகாப்பு வலையமாகவே இருந்து வருகின்றன. அங்கு மீளக் குடியமர்வுக்கோ மற்றும் விவசாய தொழில் முயற்சிகளுக்கோ மக்கள் அனுமதிக்கப்படவில்லை.

இதேநிலை கிழக்கிலும் காணப்படுகின்றது. தமது சொந்த இடங்களில் இருந்து விரட்டப்பட்ட மக்கள் சமாதான சூழலை நம்பி மீளக்குடியமரச் சென்றால் ராணுவம் அதிரடிப்படையினர் தடுக்கிறார்கள். மிரட்டல்கள் விடுக்கிறார்கள். அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் வீட்டுக்கு ஒரு சவப்பெட்டி தயாராக வைத்திருக்குமாறு அதிரடிப்படையினர் அச்சுறுத்தியுள்ளமை அம்பலத்திற்கு வந்துள்ளது. நடைமுறையில் வடக்குக் கிழக்கில் ராணுவ-அதிரடிப் படையினரின் கட்டுப்பாடுகளும் கெடுபிடிகளும் அதிகரித்தே வருகின்றமையைக் காணமுடிகின்றது. குறிப்பாக கடற் பரப்பில் ஒப்பந்தத்தின் படி சுதந்திரமாக மீன்பிடிப்பதற்கு மீனவர்கள் அனுமதிக்கப் படல் வேண்டும் என்றே கூறப்பட்டுள்ளது. ஆனால் மிகக் குறுகிய ஐந்நூறு மீற்றர் தூர எல்லையும் குறைந்தளவு நேரமும் என்ற கட்டுப்பாடு தொடர்வதுடன் தொழில் அனுமதி அட்டை முறை கடுமையாக்கப் பட்டுள்ளது. இவை அனைத்திற்கும் மேலாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கடலில் மீன் பிடிப்பதற்கான கட்டுப்பாட்டு விதிகளுக்கான வர்த்தமானிப் பிரகடனத்தை அண்மையில் பாதுகாப்பு அமைச்சர் வெளியிட்டு நடைமுறைக்கும் கொண்டு வந்துள்ளார்.

இவற்றுடன் ராணுவத்தின் உயர்மட்ட பதவிகளில் முக்கிய மாற்றங்களும் அவற்றின் ஊடாக தாக்குதல் - தற்காப்பு வியூகங்களுக்கான துரித செயற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. ஏற்கனவே ராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை எப்படி பாதுகாத்து தற்காத்துக்

தொடர்ச்சி 10ம் பக்கம்.

www.padippakam.com



# சமூக முரண்பாடுகளை அடையாளம் காண்பதும் ஒடுக்குமுறைகளை வகைப்படுத்திப் போராடுவதும் மார்க்சிச லெனினிச வாதிகளின் நிலைப்பாடாகும்.

## பாரிஸ் நகரில் நடைபெற்ற கருத்தரங்கில் தோழர் செந்தில் ஆற்றிய உரை

கடந்த 12.05.2002 பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிசில் நடைபெற்ற தோழர் கே.டானியல் நினைவுக் கருத்தரங்கில் புதிய-ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி. கா. செந்திவேல் 'இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்' என்னும் தலைப்பில் ஆற்றிய நீண்ட உரையின் சுருக்கத்தை இங்கே தருகின்றோம். மேற்படி முழு நாள் கருத்தரங்கை உயிர் நிழல் - EXIL, அசை-சமூக அசைவுக்கான எழுத்தியக்கம், ஐரோப்பிய கீழைத்தேச தொடர்பு மையம் (C.D.C) தேசிய கலைஇலக்கியப் பேரவை (ஐரோப்பியக் கிளை) ஆகியன ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இம் முழு நாள் கருத்தரங்கில் அருந்ததி, வி.ரி.இளங்கோவன், ஏ.ஜி.யோகராசா ஆகியோர் கட்டுரை சமர்ப்பித்தனர். காலை அமர்வுக்கு சி. சிவநேசனும் மாலை அமர்வுக்கு வி.ரி.இளங்கோவனும் தலைமை தாங்கினர். ஒவ்வொரு உரைக்குப் பின்பும் கருத்துரை-கலந்துரையாடல் இடம்பெற்றது. நன்றியுரையை தோழர் வை. வன்னியசிங்கம் வழங்கினார். பெரும் தொகையான சமூக அக்கறையாளர்களும் செயற்பாட்டாளர்களும் இம் முழு நாள் கருத்தரங்கில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

(ஆ. குழு)

சமூக முரண்பாடுகளை சமூக அமைப்பு வாயிலாக அடையாளம் காண்பதும், ஒடுக்குமுறைகளை வகைப்படுத்தி பிரதான ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுவதும், ஏனைய ஒடுக்குமுறைகளுக்கு உள்ளான மக்களை பிரதான போராட்டத்தோடு இணைந்து போராடச் செய்வதும், எதிரி யார்? நண்பன் யார்? என்பதை வரையறை செய்வதும் வெற்றி நோக்கிச் செல்லக் கூடிய எந்தவொரு போராட்டத்தினதும் அடிப்படைக் கொள்கையாகவும் தந்திரோபாயமாகவும் இருக்க முடியும். அதுவே மார்க்சிச லெனினிச வழிப்பட்ட நிலைப்பாடுமாகும்.

அந்த வகையிலேயே அறுபதுகளின் முற்கூறில் தமிழர்கள் மத்தியில் கூர்மையடைந்து கனன்று கொண்டிருந்த சாதிய முரண்பாட்டில் அவ் ஒடுக்குமுறைக்கு எதிராக மார்க்சிச லெனினிச வாதிகளின் தலைமையில் வெகுஜனப் போராட்டங்கள் புரட்சிகரப் பாதையில் வெடித்தெழுந்து முன் சென்றன. அப்போராட்டங்களின் எழுச்சிக்கும் முன்செல்லுதற்கும் அடிப்படை வர்க்க சக்திகளாகவும் சாதிய ஒடுக்குமுறையை எதிர்கொண்ட மக்களாகவும் திகழ்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் என அழைக்கப்பட்ட மக்களே பிரதான போராட்ட சக்தியாவார். அன்றைய போராட்டங்கள் வெறுமனே சமத்துவம் என்னும் குறுகிய எல்லைக்குள் நிற்கவில்லை. அவை இரண்டாயிரம் ஆண்டு காலப் பழைய சுமையாகவும் ஒடுக்குமுறை நிறுவனமாகவும் கட்டிக் காத்து வரப்பட்ட சாதிய அமைப்பின் மீது தொடுக்கப்பட்ட போராட்டமும் ஆகும். அதனால் தமிழர் மத்தியிலான மேட்டுக்குடியினரும் ஆதிக்க சக்திகளும் கதி கலங்க வேண்டிய தாயிற்று. அரசியலில் ஏகபோக ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வந்தவர் களை ஆட்டம் காண வைத்தது. இதன் எதிர் நிலைச் சிந்தனையே தேசிய இனப்பிரச்சினையில் இடதுசாரி முற்போக்கு சிந்தனையில் செல்லக் கூடிய இளைய தலைமுறையினரை திசை திருப்பி தீவிர தேசியவாத முழக்கங்களுடன் இஸ்ரேல், இந்தியா, அமெரிக்கா என்றவாறு சிந்திக்க வைத்தது. அதன் அடிப்படையில் செயலாற்றவும் தூண்டிவிடப்பட்டது. இவற்றின் ஒட்டுமொத்த விளைவைத் தான் தமிழர் போராட்டம் இன்றுவரை பாதகமானவையாக அனுபவிக்க வேண்டியதாயிற்று. இதனை வேறொரு சந்தர்ப்பத்தில் விரிவாக நோக்க முடியும்.

இன்று இந்தியாவிலும் இலங்கையிலும் ஏனைய தென்னாசிய நாடுகளிலும் எதிர்கொண்டுள்ள சாதியம் இரண்டாயிரம் ஆண்டுகால பழைய சுமைகளில் ஒன்றாகவும் கொடிய ஒடுக்கு முறையாகவும் நீடித்து நிலைத்து வந்துள்ளது. அது ஆரிய திராவிட நிலைகளுக்கு அப்பாலும் தொன்மையான இனக்குழு காலகட்டத்திலிருந்தே தோன்றி வளர்ந்து வந்துள்ளதாகப் புதிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பொருளாதார வர்க்க ஆதிக்கங்களாலும் ஆட்சி அதிகாரங்களாலும் பாதுகாக்கப்பட்டு வந்த சாதியம் அக மண முறையின் மூலம் இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வருகின்றது. தொழில்களால் வரையறுக்கப்பட்டு படிநிலை வடிவிலே உரிமைகளும் கடமைகளும் அமைப்பு வழியாக நிலைநிறுத்தப்பட்ட சாதியம் இன்றுவரை பிறப்பின் வழியாக நீடித்து நிற்கின்றது. அதற்குரிய கருத்தியல் சிந்தனை மரபு என்பது ஒவ்வொரு வரினதும் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது. இத்தகைய சாதியத்தை வெறுமனே மேழெழுந்த வாரியாக நோக்காது வர்க்க வரலாற்றுக் கண்ணோட்டத்திலிருந்து நோக்குதல் வேண்டும். சமூக முரண்பாடுகளின் வளர்ச்சியோடு வைத்து அடையாளம் காண வேண்டும். அவ்வாறானால் மட்டுமே சாதிய ஒடுக்கு முறையினை ஏனைய ஒடுக்குமுறைகளுடன் இணைத்துப் வகைப்படுத்தியும் காண இயலும்.

இந்தியாவில் சாதியத்தையும் தீண்டாமையையும் பாதுகாத்து முன்னெடுத்து நிலைநிறுத்தி வந்தமை பிராமணியமாகவே அமைந்து கொண்டது. ஆனால் அதே சாதிய-தீண்டாமை அமைப்பினை இலங்கையில் சைவ வேளாள ஆதிக்கமே நிலைநிறுத்திப் பாதுகாத்தும் நின்றது. இதனைத் தமிழர்கள் மத்தியில் இருந்து வந்த நிலவுடைமை ஆதிக்க சக்திகள் இறுக்கமாக்கிக் கொண்டன. இங்கே இம் மேட்டுக்குடியினரது நிலைக்கு நாவலரது பங்கும் பணியும் உரமிட்டுக் கொடுத்தது. இச் சைவ வேளாள ஆதிக்கத்துடன் பிற்காலத்தில் உயர்வேளாள கிறிஸ்தவ ஆதிக்க சக்திகளும் இணைந்து கொண்டன. இத்தகைய விஷேச நிலையானது இந்திய நிலைமைகளில் இருந்து வேறுபட்டதாயினும் அரசியல்இ பொருளாதாரஇ சமூகஇ பண்பாட்டு கல்வித் தளங்களில் தாழ்த்தப்பட்ட மக்களைப் புறம்தள்ளி அவர்கள் மீதான சாதிய ஒடுக்குமுறையினை நிலைநாட்டிக் கொள்வதில் சைவ-கிறிஸ்தவ வேளாள ஆதிக்கமே முன்நின்றது.

இச்சாதியத்திற்கு எதிரான போராட்டங்கள் கடந்த நூற்றாண்டின் இருபதுகளில் இருந்து பல்வேறு வடிவங்களில் மேலெழும்ப ஆரம்பித்தன. அதில் குறிப்பானது யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் முன்வைத்த தீண்டாமைக்கு எதிரான உறுதி மிக்க நிலைப்பாடாகும். அதேவேளை சில கல்வி கற்ற கிறிஸ்தவ மதம் சார்ந்த தாழ்த்தப்பட்ட சமூக அக்கறையாளர்களும் அக்காலத்தில் சாதியத்திற்கு எதிராகக் குரல் கொடுத்து செயற்பட்டிருக்கிறார்கள்.

அடுத்த கட்டம் நாற்பதுகளின் ஆரம்பத்துடன் சிறுபான்மைத் தமிழர் மகாசபை என்னும் அமைப்பு உரிமை மறுக்கப்பட்டு தீண்டாமைக்கு உட்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களை ஒன்று படுத்தியது. இவ் அமைப்பு இடதுசாரிகளது குறிப்பாக பொதுவுடமை இயக்கத்தின் ஆதரவுடன் சில எல்லைப்பாடுகளுக்குள் நின்று இயக்கங்களை நடாத்தியது. கருத்து நிலையிலும் பிரச்சார இயக்கத்திலும் சாதியம் தீண்டாமைக்கு எதிராக நாற்பதுகள்இ ஐம்பதுகளில் மகாசபை முன்னெடுத்த இயக்கங்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் ஆரம்ப விழிப்புணர்வுகளை ஏற்படுத்தியது. ஆனால் அங்கும் சீர்திருத்தவாத பாராளுமன்றக் கண்ணோட்டமே முனைப்புடையதாகக் காணப்பட்டது.

ஆனால் 1964ம் ஆண்டுடன் பொதுவுடமை இயக்கம் பாராளுமன்றப்பாதை புரட்சிகரப் பாதை என பிளவு கண்ட பின்பு சாதியொடுக்கு முறைக்கெதிரான போராட்டம் புதிய கால கட்டத்தினுள் புகுந்து கொண்டது. புரட்சிகரப் பாதையில் அணிவகுத்துக் கொண்ட தோழர்.நா.சண்முகதாசன் தலைமையிலான மாக்சிச லெனினிசக் கட்சி சாதியத்திற்கெதிரான போராட்டத்தை தனது கைகளில் எடுத்துக் கொண்டது. அன்றுவரை 'அவர்களது பிரச்சினை அல்லது போராட்டம்' எனப் பார்க்கப் பட்டு வந்த நிலைக்குப் பதிலாக வர்க்க-சாதிய ஒடுக்குமுறைக்குள்ளான மக்களது போராட்டங்களை அவர்களது முன்னணிப்படையான பொதுவுடமைக் கட்சி தானே கையேற்று முன்னெடுக்க முடிவு செய்து கொண்டது. அதன் வரலாற்றுத் திருப்புமுனையாகவே 1966ம் ஆண்டு ஒக்டோபர் 21 எழுச்சி 'சாதியமைப்புத் தகரட்டும் சமத்துவ நீதி ஓங்கட்டும்' என்னும் செம்பதாகையின் கீழ் முன்னெடுக்கப்பட்டது. அதன் அடிப்படையிலேயே வெகுஜனப் போராட்டங்கள் புரட்சிகர வழிகளில் முன்னேறிச் சென்று சாதியக் கோட்டையில் தாக்குதல்கள் தொடுத்தன.

1966-72 காலகட்டத்தில் இடம்பெற்ற இப்போராட்டங்களுக்குரிய மற்றொரு முக்கியத்துவம் வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுப்பதற்குத் தோற்றுவிக்கப்பட்ட தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் என்பது ஏற்கனவே இருந்து வந்த சாதியச் சங்கங்கள் அமைப்புகளை போன்றதல்ல. அது சாதியத்தையும் தீண்டாமையையும் எதிர்த்த சகல முற்போக்கு ஜனநாயக சக்திகளையும் பரந்த அடிப்படையில் ஐக்கியப்படுத்தி நின்ற ஒரு அமைப்பாக விளங்கியது குறிப்பிடத்தக்க விடயமாகும். இத் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தை வழிநடாத்தி தலைமை கொடுத்தது பொதுவுடமைக் கட்சியேயாகும்.

சாதிய-தீண்டாமைக்கெதிரான போராட்டங்கள் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆண்டாண்டு காலமாக மறுக்கப்பட்டு வந்த உரிமைகள் வென்றெடுக்கப்பட்டன. தமிழ் மக்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கினரான இம்மக்களின் சமூக அந்தஸ்து சாதி ஆதிக்க நிலைக்கும் அப்பால் நிலை நிறுத்தப்பட்டது. அவர்களது பொருளாதாரஇ சமூகஇ பண்பாட்டுஇ கல்வி நிலைமைகளில் விழிப்புணர்வும் புதிய சிந்தனை மாற்றங்களும் ஏற்பட ஆரம்பித்தன. நாமும் இந்நாட்டின் சமத்துவமான மனிதர்கள் என்றும் சாதிய தீண்டாமை மூலம் எம்மை எவரும் அடிமைப்படுத்த இனிமேலும் அனுமதிக்கமாட்டோம் என்னும் புதிய நிலை அன்றைய போராட்டங்கள் மூலம் பெறப்பட்டன.

இப் போராட்டங்கள் மூலம் வளர்ந்து வந்த தேசிய இனப் பிரச்சினையிலும் மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தன. வெகுஜனப் போராட்டங்களில் பயன்படுத்தப் பட்ட ஆயுதப் பிரயோகச் சூழலானது தமிழ் இளைஞர்கள் மத்தியில் புதிய சிந்தனைகளைத் தோற்றுவித்தது. தாழ்த்தப்பட்ட மக்கள் ஆயுதங்கள் மூலம் போராடித் தமது உரிமைகளை வென்றெடுக்க முடியுமானால் இன ஒடுக்குமுறையை எதிர்த்து ஏன் தமிழர்கள் குறிப்பாக இளைஞர்கள் போராட முடியாது என்ற நியாயமான கேள்வியை எழுப்பி அதன் வழியில் செயற்படவும் வைத்தது.

இத்தகைய போக்கிற்கு சிங்கள பௌத்த பேரினவாதம் அரசியல் தீர்வை வழங்குவதற்குப் பதிலாக ராணுவ ஒடுக்குமுறையினை ஏவிவிட்டது. தமிழ் மக்களை அரசாங்க ஆயுதப் படைகள் கொண்டு அடக்கி ஒடுக்கி கொலை வெறித் தாண்டவம் ஆடியது. இந்நிலையிலே தமிழ் இளைஞர்களது ஆயுதப் போராட்டம் தேசியவாத வழி நின்று வளர்ச்சி கண்டது. பல்வேறு இளைஞர் அமைப்புகளும் ஆயுதம் தாங்கிப் போராட முன் வந்தன. அவற்றின் கொள்கை கோட்பாடுகள் யாவும் குறுகிய தேசிய வாதத்தால் மூடுண்டே இருந்தன. வெறும் ஆயுதக் கவர்ச்சியும் ஆளும் பேரினவாத ராணுவ எதிர்ப்பும் மட்டுமே காட்டப்பட்டு இளம் தலைமுறையினர் அணி திரட்டப்பட்டனர. சமூக விடுதலைக்கான தூரநோக்கு எதுவுமின்றி தமிழர் ஆயுதப் போராட்டம் முன் சென்றது. கடந்த இரண்டு தசாப்த காலத்தில் இடம்பெற்றவை மீள் மதிப்பீட்டிற்கும் மீள் சுய விமர்சனத்திற்கும் உள்ளாக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் சுயநிர்ணய உரிமைக்கான அடுத்த கட்டப் போராட்டமானது சரியான தடத்திற்கு வந்து கொள்ள முடியும்.

தேசியவாத தமிழ் இளைஞர்களது பேரினவாதத்திற்கு எதிரான போராட்டம் மேல் எழும்பியதால் சாதியப் போராட்டம் குறிப்பிட்ட உரிமைகளுக்கான வெற்றிகளுடன் அமுங்க வேண்டியதாயிற்று. பேரினவாத ஒடுக்குமுறை பிரதான இடத்திற்கு வந்து கொண்டது. இப் போராட்டத்தில் தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்ற ஐக்கிய நிலையில் நின்று பேரினவாதத்திற்கு முகம் கொடுப்பதற்கு சாதிய ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டமே வழி ஏற்படுத்திக் கொடுத்தது. ஆனால் கடந்த இரண்டு தசாப்த தேசியவாத ஆயுதப் போராட்டமானது எந்தளவுக்கு சாதியத்தை தமிழர்கள் மத்தியில் இருந்து அகற்றியது அல்லது குறைவடையச் செய்தது என்ற கேள்வியை எழுப்வுவது அவசியமானதாகும். இன்றும் கூட தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திறந்து விடப்படாத கோவில்கள் யாழ் குடாநாட்டின் வடமராட்சிப் பிரதேசம் உட்பட பல பிரதேசங்களில் ஆங்காங்கே இருந்து வருகின்றன. சாதிய வெறி கொண்ட செயற்பாடுகள் மூலம் மோதல்கள் இடம்பெற்று வந்துள்ளன. இன்றைய சமாதான சூழலில் சாதிய ஆதிக்கம் கொண்டோர் தத்தமது நில பண அதிகார ஆதிக்கங்கள் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களை மறைமுக வழிகளில் ஒடுக்குவதற்கு முன் நிற்கின்றன. கல்விக் கூடங்களான பாடசாலைகளில் மட்டுமன்றி யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் கூட சாதியச் செயற்பாடுகள் தாராளமாகி நிற்கின்றன.

இவை மட்டுமன்றி இன்று புலம்பெயர்ந்த நாடுகளில் சாதியம் கட்டிக்காத்துப் பேணப்படுகிறது. ஆங்காங்கே விதிவிலக்கான செயற்பாடுகள் இருந்த போதிலும் பிரதான ஓட்டமாக சாதியக் கருத்தியல் காணப்படுகிறது. அவை தொடர்வதற்கு சாதியக் கண்டுபிடிப்புக்களும் அகமண முறையுமே அடிப்படையானதாகும். புலம்பெயர்ந்த காரணத்தால் சாதியம் ஒழிந்துவிடவில்லை. அவ்வாறே புலம்பெயர்ந்தவர்களின் பொருளாதார மேம்பாட்டால் சாதியம் தானாக மறைந்துவிடவும் இல்லை. புலம்பெயர்ந்து பொருளாதார வளர்ச்சி பெற்ற தாழ்த்தப்பட்டவர்கள் எனப்படுவோர் வர்க்க ரீதியில் ஓரளவுக்கு உயர்வு பெற்று தம்மை மேல் நிலையாக்கத்திற்கு உட்படுத்திக் கொண்டனரே தவிர வேறு எதுவும் நடந்து விடவில்லை. பலர் கோவில் கட்டிஇ கோபுரம் எழுப்பிஇ மதில் கட்டி தமது பெருமையினை பறைசாற்றுகிறார்கள். அதேவேளை கொட்டில்இ குடிசைகளில் அடிப்படை வசதிகள் இன்றி வர்க்க ரீதியிலும் சாதி ரீதியிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் அடிநிலை வாழ்வில் அமுங்கியவர்களாக இருந்தும் வருகின்றனர். அவர்களைப் பேரினவாத யுத்தம் மேலும் பல படிகள் கீழே தள்ளி அமுக்கியுள்ளது.

இவ்வேளை மற்றுமொரு விடயத்தை இவ்விடத்தில் கூறிக் கொள்ள வேண்டும். தமிழர்களின் ஆதிக்க அரசியல் சக்திகளே 'ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை ஆள நினைப்பதில் என்ன குறை' எனக் கேட்டு அன்று தமிழீழத்தை முன் வைத்தனர். ஆனால் அவ்வாறு வைத்தவர்களும் அவர்களது பிள்ளைகளும் சுற்றம் சூழலும் எங்கெங்கோவெல்லாம் சென்று விட்டனர். ஆனால் சாதாரண தொழிலாளர்களின் விவசாயிகளின் தாழ்த்தப்பட்டவர்களின் மீனவர்களின் பிள்ளைகள் தான் போராட்டக் களங்களிலே பேரினவாத யுத்தவெறியர்களை எதிர்த்துப் போராடி வந்துள்ளனர். தியாகியானவர்களும் தியாகத் தழும்பேற்று அங்கவீனர்களானவர்களும் சாதாரண குடும்பத்து இளைஞர் யுவதிகளேயாவார்.

கடந்த இரண்டு தசாப்தகால யுத்தத்தால் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் 16, 700 போராளிகள் தியாகிகளாகியுள்ளனர் எனக் கூறப்படுகிறது. விடுதலைக்கெனப் புறப்பட்டு ராணுவத்தாலும், சகோதரப் படுகொலைகளாலும் இயக்க உள் முரண்பாடுகளாலும் பத்தாயிரம் இளைஞர்கள் மடிந்து போய்விட்டனர். அதாவது போராளிகள் என்ற பேரில் 25. 000 உயிர்கள் பலியாகியுள்ளன. குத்துமதிப்பாக 75. 000 பொதுமக்கள் வடக்கு-கிழக்கிலே கொன்றொழிக்கப்பட்டுள்ளனர். மொத்தம் ஒரு லட்சம் தமிழர்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் உயிர் துறந்துள்ளனர். கோடிக் கணக்கான சொத்துக்களும் அழிக்கப்பட்டுள்ளதுடன் 10 லட்சம் தமிழர் இடம்பெயர்ந்தும் புலம்பெயர்ந்தும் அகதிகள் என்னும் பெயருடன் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறான ஒரு சூழலிலேயே அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு யுத்த நிறுத்த சூழல் ஏற்பட்டிருக்கிறது. இது வரவேற்க வேண்டியதாகும். அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி ஒரு பெரு முதலாளித்துவ பேரினவாத ஏகாதிபத்திய விசுவாசக் கட்சி என்பதை மறந்துவிட முடியாது. இடைக்கால சபையா? அல்லது நிரந்தரத் தீர்வா? என்பன பற்றிய நிச்சயமின்மையே நிலவுகின்றது. இலங்கையின் அகப் புறச் சூழல் இரு தரப்பினரையும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு வர நிர்ப்பந்தித்துள்ளது. எவ்வாறாயினும் யுத்த நிறுத்தமும் ஏனைய தடை நீக்கங்களும்

தொடர்ச்சி 11ம் பக்கம்.

www.padippakam.com



# தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும் [5]

தமிழ் மக்கள் தமது மொழியில் பற்றும், தமது பண்பாட்டில் அக்கறையும், தமது தாயகப் பிரதேசத்தில் தமது வாழ்வும், தமது பொருளாதாரத்தில் விடாப்பிடியான கடின உழைப்பும் சேமிப்பும் மிக்கவர்களாக வாழ்ந்தனர். வாழத்தலைப்பட்டனர்.

மொழி பண்பாடு. பிரதேசம், பொருளாதாரம் மீது பேரினவாதம் தயவு தாட்சண்ய மின்றித் தொடுத்த பாரபட்சம், புறக்கணிப்பு என்பன வளர்ச்சி பெற்று இன ஒடுக்கல் வடிவம் பெற்றது.

தனிச்சிங்கள மந்திரிசபை, திட்டமிட்ட குடியேற்றம், மலையக மக்களின் பிரஜாவுரிமை பறிப்பு, தனிச்சிங்களச் சட்ட அமுலாக்கம், அடையாள அட்டை அறிமுகம். தரப்படுத்தல். இன ஒழிப்புக் கலவரங்கள், பயங்கரவாதத் தடைச் சட்டம். அவசரகாலப பிரமாணங்கள், அரச பயங்கரவாதம். தமிழ் மக்களுக் கெதிரான பகிரங்க யுத்தம் எனச் சிங்களப் பேரினவாதம் தலைவிரித் தாடியது.

தமிழ் மக்களை வழி நடத்தத் தலைவர்களும்– கட்சிகளும், விடுதலை இயக்கங்களும் எழுச்சி பெற்றன.

அரசியல் என்பது தலைவர்களுக்கும் கட்சிகளுக்குமுரிய விடயங்களென மக்கள் ஒதுங்கிக் கொண்டனர்.

போராட்டம் என்பது விடுதலை இயக்கங்களின் செயற்பாடென விரும்பியோ. விரும்பாமலோ. வில்லங்கமாகவோ மக்கள் ஆதரவு செய்தபடி மிகக் கவனமாகவே விலகி நின்றனர்.

தலைவர்களும் கட்சிகளும் விடுதலை இயக்கங்களும் விடுதலைப் பாதைகளை வடிவமைத்தனர். மக்கள் அரசியலிலும்–போராட்டத்திலும் இணையாமலும்–விலகாமலும் இருக்கும்படி கடிவாளத்தை மிகக் கவனமாகவே இறுக்கிக் கொண்டனர்.

டொனமூரால் அறிமுகப்படுத்தப்பட்ட இனவாரிப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையை யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் ஆரம்பத்திலேயே எதிர்த்தது. கொலனித்துவவாதிகள் இருபதாம் நூற்றாண்டின் முற்பாதியைத் தமது நேரடி நிர்வாகத்தின் கீழ் வைத்திருந்ததுபோல 'கருணை' யால் ...ாமாகவே இலங்கைக்கு வழங்கிய ...தந்திரத்தின் பின்னர் மிகுதி பிற்பாதி ...ம்பது ஆண்டுகளும் அதற்குப் ...ின்னரும் கூட அவர்கள் வகுத்தளித்த ...தர்தல் செக்கையே சுற்றிவர ...ிர்பந்திக்கப்பட்டனர் இலங்கைத் ...லைவர்கள்.

...தாகுதிவாரி தேர்தலிலும் விகிதா சாரத் ...தர்தலிலும் இனங்களுக் கிடையிலான ...கைமையும் முரண் பாடும் நன்றாகவே ...ரஸ்பர ஊட்டம் பெற்று ...ளர்க்கப்பட்டன.

...தர்தல் காலங்களிலும் போராட்ட ...ாலங்களிலும் தேர்தல் என்பது தமிழ்த் ...லைவர்களுக்கும் போராளிகளுக்கும் ...க்கதொரு புகலிடமாகவும் அங்கீகார ...ாகவும் இருந்தது.

...தர்தலில் வெற்றி பெற்றதும் எந்த ...ட்சிகளை சிங்களக் கட்சிகள் என்று ...ூற்றினார்களோ அவர்களுடன் ...ட்டியும் –ஒட்டாமலும் உறவாடி. ...மைச்சரவையில் அமர்ந்தும்– ...மராமலும் அணைந்து தமது ...திக்கத்தை நிலைநிறுத்த தக்கபடியே ...மிழ்த்தலைவர்கள் பழகிக் ...காண்டனர்.

...க்கள் என்போர் தேர்தல் நாளில் ...டும் இந்நாட்டின் மன்னர்களாக ...ள்ளடி போடும் முறையை ஆறுவருட ...ா. வருடாந்தமோ முறையாகப் பழகிக் ...காண்டனர். தேர்தல் தினத்தில் ...க்கள் தலைவர்களால் நன்றாகவே ...யப்படுவர். தேர்தலில் வென்றபின் ...டுத்த தேர்தல்வரை முறையாகவே ...ய்க்கப்படுவர். மக்கள் அரசியல் ...க்காகாதென்று மிக ஒதுங்கியே ...து அன்றாட அலுவல் களில் உழன்று ...ழும் தலைமுறை களாக விட்டு ...டுதலையாவர்.

...ாராட்ட காலங்களில் வரிகொடுக்க ...். வேண்டும் போது வியாபாரிகளின் ...ாக்குவரத்து வாகனங்களில் அடைக் ...பட்டு கூட்டங்களில் ஊர்வலங்களில் தமிழ்மக்களின் எதிர்ப்புகளை வெளிப்படுத்தவும் தமிழ்த் தேசிய ஆதிக்க சக்திகளால் மக்கள் அவ்வப்போது பயன்படுத்தப்படுவது ஓர் வழக்கமாயே மாறியுள்ளது. தமிழ்த் தேசிய போராட்ட எழுச்சிபெற்ற 1970களிலிருந்து பாடசாலைகளும் பிள்ளைகளும் மிக நன்றாகவே இதற்காகப் பயன்படுத்தப்பட்டனர்.

தனிச்சிங்கள மந்திரிசபை முதல் அரச பயங்கரவாத யுத்தம் வரை தமிழ்த் தேசியத் தலைவர்கள் அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் முதல் ஆனந்த சங்கரி வரை அவ்வப்போது ஒட்டியும்–விலகியும் தமது தமிழ்த் தேசியத் தலைமைக் கற்புக்குப் பங்கமேற்படாமல் தமது உயர்வர்க்க நலன்களைப் பாதுகாத்துக் கொண்டனர்.

தமிழ்த் தலைவர்கள் என்போருக்குச் சில இலக்கணங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அத்தகுதிகளைப் உடையோரே தலைவர்களாக அங்கீகாரம் பெற முடியும்.

## ஆசனப் பற்றும் ஆதிக்கப் போதையும்

### செண்பகன்

(1) பல்லாண்டுகால ஆதிக்க பரம்பரையில் பிறந்தவராக இருக்க வேண்டும். (2) தேர்தலுக்கு இலட்சக் கணக்கில் செலவழிக்க வல்லமையுடைய பணபலம் உடையவராய் இருக்க வேண்டும் அல்லது வியாபாரிகளின் அனுசரணையும் அணைப்புமுடையவ ராய் இருக்க வேண்டும். வியாபாரியாய் இருந்தால் இன்னும் விசேஷம். (3) எங்காவது ஏதாவது படித்தவர் என்று பட்டம் பெற்றிருக்க வேண்டும். அல்லது சண்டியர்களின் சகவாசமும் அவர்களைப் பயன்படுத்தும் வல்லமையும் உடையவராய் இருக்க வேண்டும். (4) சிங்கள மக்களை நையாண்டி பண்ணியும் எதிரிகள் என்று ஏசவும் பயிற்சி பெற்றவராயுள்ள அதே சமயம் சிங்கள அரச தலைவர்களுடன் அளவளாவவும் அணைந்து அலுவல் பார்க்கவும் கூடிய விசுவாசியாய் இருக்க வேண்டும். (5) சுத்தச் சைவத்தமிழன் என்று பிறர் சொல்லும்படிக்குத் தோற்றமளிக்க வேண்டும் அல்லது அசல் கிறிஸ்தவனாக இருக்க வேண்டும் அதாவது உயர் வேளாள குலத்தவராக இருத்தல் விரும்பத்தக்கது. (6) மக்களுடன் சாதாரண இடங்களில் சாதாரணமாக பழகக் கூடியவராக இருக்கக் கூடாது. (7) தூரத்தில் தொலைவில் கண்காணாத இடத்தில் காட்சிக்கு அரியவராய் இருக்க வேண்டும். அதாவது கண்டபடி எவரும் அவரது வீட்டுக்குச் சென்றுவர முடியாதபடி விலகி இருக்க வேண்டும். (8) எதுவும் பேசாமலும் எழுதாமலும் இருக்க வேண்டும். அவ்வப்போது ஏதாவது தீர்க்கதரிசன வார்த்தை களை உதிர்க்கத் தெரிந்திருத்தல் நல்லது. (9) கட்டாயமாக காலால் நடந்து செல்பவராகவோ பொது பஸ்களில் பயணம் செய்பவராகவோ இருத்தல் தவிர்க்கப்படல் வேண்டும். அல்லாதுவிடின் அவர் ஆயுள் காலத்தில் தமிழ் தேசிய அகராதியில் தலைவராவதற்கு எவ்வித அருகதையும் அற்றவர். (10) மெல்லியவராகவோ கறுப்புநிறமுடையவராகவோ இல்லாதிருத்தல் விரும்பத்தக்கது. அதாவது சரியாகச் சொல்வதெனில் நிச்சயமாக ஒரு தொழிலாளியாகவோ, விவசாயியாகவோ. வறுமையில் உழல்பவராகவோ, அல்லது ஏழைகளுடன் உறவு பூண்டவராகவோ இருத்தல் தவிர்க்கப்பட வேண்டும்.

மேற்குறித்த பத்து அம்சங்களும் முழுமையாக வாய்க்கப் பெற்ற ஒருவரே ஆதிக்க போதையுடைய வராகவும் ஆசனப் பற்றுடையவராகவும் கணிக்கப்படுவார். எனினும் குறித்த அம்சங்களில் ஏதேனும் ஒரு சில குறைவுபட்டிருப்பின் ஆதிக்க வகுப்பாருக்கு விசுவாசமுடையவராய் ஆதிக்க போதையுடையவரெனத் தன்னைப் பிரகடனப்படுத்தினால் அவருக்கு விலக்களிக்கப்படும்.

கிட்டத்தட்ட ஆலயத்தின் மூலஸ்தானத்தில் உள்ள முழுமுதற் கடவுளுக்குரிய அம்சங்கள் பொருந்தி வரவேண்டும். விழாக்களுக்கு வெளியே வரும்போது குடை. கொடி. ஆலவட்டம். தேர். சப்பறம். ஆளணி. அடியளிக்கும் பயபக்தியுடைய பக்தர்கள் புடைசூழ ஆடை, ஆபரணம். சாத்துப்படி அலங்காரம் செய்து அழகு பொலியத் தோற்றமளிக்க வேண்டும். அப்போதுதான் தமிழ் ஊடகங்களின் அதிக கவனத் துக்கு உள்ளாகலாம். வேட்டைத் திருவிழாவில் ஊரைச் சுற்றி வருவது போல்– ஒவ்வொரு வீட்டாரும் தமது வீட்டு வாசல்களின் முன் வந்த கடவுளுக்கு படையல் வைத்து அர்ச்சனை செய்து வரவேற்பதுபோல் தேர்தல் காலத்தில் மட்டும் ஊராரின் வீட்டுப் படலையைத் திறக்க வேண்டும். கண்டபடி எவரது வீடுகளுக்கும் செல்லக் கூடாது. பெரிய வசிதியான இடங்களில்–ஹோட்டல்களில் இடம் பெறும் திருமண நிகழ்வுகளில் கலந்து கொள்வது பரவாயில்லை. மொத்தத் தில் தனது 'இமேஜ்' பழுதாகாமல் தன்னைக் கண்டதும் எவரும் எப்போதும் எழுந்து மரியாதை செய்யவும், காலில் வீழ்ந்து வணங்கி ஆசி பெறவும் கூடிய ஒருவரோ அல்லது சிலரோ மட்டுமே தமிழ்த் தேசியத் தேவைக்குத் தக்க தலைவர்களாக வரமுடியும்.

இத்தகு முறையான தகுதிகள் பெற்ற ஒருவரே அரசியல் பேசவும்–அரசியலில் ஈடுபடவும்–தமிழ்த் தேசியத் தலைவர்களில் ஒருவராகத் திகழவும்– தமிழர்களின் தன்னிகரில்லாத் தலைவராக மிளிரவும் இயலும் என்பதனால் சாதாரண தொழிலாளர்– விவசாயக் குடும்பங்களில் பிறந்தவர்கள் அத்தலைவர்களுக்கு அடியாட்களாக வோ அல்லது தொண்டர்களாகவோ செல்லும் பாக்கியம் பெற்றவர்களே தவிர. தலைவர்களாவதற்குத் 'தப்புக்கணக்குப்' போட்டுத் தலையைக் குழப்பிக் கொள்ளக் கூடாது.

இதற்கு வரன்முறையான வசதிகள் வாய்க்கப் பெற்றவர்களே எமது தமிழ்த் த்லைவர்களாக உலாவந்துள்ளனர். முத்துக்குமாரசுவாமி, சேர்.பொன். இராமநாதன், அ.மகாதேவா. சி.சுந்தரலிங்கம், ஜீஜீ. பொன்னம்பலம். எஸ்.ஜே.வி. செல்வநாயகம், மு.சிவசிதம் பரம், வீ.ஆனந்தசங்கரி ஈறாக அனை வரும் தந்தை முதல் மைந்தர்கள் சகலரும் இவற்றுள் சங்கமமாவர்.

ஆதிக்க போதை என்பது வர்க்க ரீதியில்–பிறப்பில் இருந்து கூடிப் பழகும் குழாம் வரை தக்கபடி வைத்துக் கொள்வது மட்டுமே நிலப்பிரபுத்துவ–முதலாளித்துவ ஆண்டபரம்பரைக்குரிய வண்மத்தை ஊட்டச்சத்துடன் பேண வழி செய்யும்.

சிங்கள. முஸ்லீம், மலையகத் தலைமைகளுக்கும் இது பொருந்தும். குறிப்பாக மூன்றாமுலக நாடுகளிலுள்ள ஆதிக்க சக்திகளும் ஏகாதிபத்திய–அந்நிய விசுவாசத் தலைமைகளுக்கும் இவை ஏற்புடையவை.

உலகமயமாதல் திட்டத்தின் கீழ் தமது தேசிய இனங்களின் விடுதலையை விட்டுக் கொடுக்கவும் நாட்டின் சுதந்திரத்தை மேலாதிக்க வல்லாதிக்கங்களுக்குப் பலியிடவும் இத்தகைய குறுந்தேசியவாதத் தலைவர்கள் தயங்க மாட்டார்கள் என்பது உலக வரலாற்றுப் பாடமாகும்.

இத்தகு தலைமைகள் தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்தி அரசியலில் நீடித்து நிற்பதற்கான அங்கீகாரத்தை வழங்குவது பாராளுமன்ற ஆசன அமர்வு மட்டுமே! பாராளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றினால் மட்டுமே இந்நாட்டு மக்கள் முதல் வெளிநாட்டுத் தூதரகங்கள் வரை அனைவரதும் பார்வையில் அரசியல் ஆதிக்கம் நிலை நிறுத்தப்படும்.

அதனால்தான் தமிழ்த் தேசியத் தலைவர்கள் அனைவரும் பாராளுமன்ற ஆசனத்தைக் கைப்பற்றலே தமது இறுதி இலக்காகக் கொள்வது தவிர்க்கவியலாத் தலையாய பெரும் பணியாகக் கொண்டுள்ளனர்.

தேர்தல்களில் பங்குபெறும் போது மட்டுமே மக்கள் ஒற்றை இரட்டை பிடிப்பதற்குப் பழக்கப்பட்டுள்ளனர். ஐம்பதாண்டு காலத்துக்கு மேற்பட்ட தேர்தல் அரசியல் அநுபவ முதிர்ச்சி பெற்ற மக்கள் குழாத்திற்கு அவ்வப் போது அவர்கள் தலைமீது ஒரு வினா தொடுக்கப்படும். அது என்ன வென்றால் கடவுள் வேண்டுமா–பிசாசு வேண்டுமா ஆண்டவர் வேண்டுமா–சாத்தான் வேண்டுமா இரட்சகர் வேண்டுமா–இரணியன் வேண்டுமா தேவர் வேண்டுமா–அசுரர் வேண்டுமா கதாநாயகன் வேண்டுமா– வில்லன் வேண்டுமா தியாகி வேண்டுமா–துரோகி வேண்டுமா சுத்தத் தமிழன் வேண்டுமா–வேண்டாமா, என்ற கேள்விகளில் இரட்டையில் ஒற்றை பிடித்து ஒன்றுக்கு புள்ளடி போட்டுத் தமது 'மாபெரும்' அரசியல் கடமையை நிறைவேற்ற மக்கள் 'நன்றாகவே' பயிற்றப்பட்டுள்ளனர்.

இதற்கேற்ப தலைவர், தந்தை. அண்ணன். தளபதி, கடவுள், ஆண்டவர், இரட்சகர், தேவர், கதாநாயகன், தியாகி, தூய தமிழன் என்ற படிமங்கள் மிக நன்றாகவே பொருந்தும்படி பத்திரிகை. வெகுஜன ஊடகங்கள். சுவர் போஸ்ரர்கள். கூட்டங்கள், ஊர்வலங்களில் கட்டமைக்கப்பட்டுவிடும். இப்படிமங்கள் வாய்க்கப் பெற்ற தலைவர்கள் தமிழர்களை ஆட்சி பண்ணும் தகுதியும் தன்னாதிக் கமும் பெற்றவர்களாக மக்கள் கணித்து தமது பொன்னான வாக்குகளை மண்ணாக்காமல் தக்கபடி பயன்படுத்தி தமது தலைவர்களைத் தெரிவு செய்வர்.

இதற்காகவே அவ்வப்போது தேர்தல் காலங்களில் பிசாசு. சாத்தான், இரணியர். அசுரர். வில்லன், துரோகி. என்ற பட்டங்களைச் சூட்டக் கூடியவர்களை பாராளுமன்ற அரசியலில் தேடிப் பிடித்து விடுவார்கள். எனவே தேர்தல் மேடைகளில் எவ்வித கூச்சநாச்சமுமின்றித் தூசித்து அவமானம்–வெட்கம்–துரோகம்–இவர்களுக்கு இயற்கை மரணமில்லை என்று வெட்ட வெளியாகவே மாற்றுக் கருத்துடையோரை தாக்கி மகிழ்ந்து காறி உமிழ்வர். மகாதேவா. ஜீ.ஜீ. பொன்னம்பலம், அல்பிரட்துரையப்பா, பொத்துவில் கனகரத்தினம், டக்ளஸ் தேவானந்தா வரை இத்துரோகிகள் பட்டியல் அவ்வப் போது தேர்தல் காலங்களில் உதவி செய்து வந்த வரலாறைக் காணலாம்.

இத்துரோகிகள் பட்டியல் கால. தேவைக்கேற்ப கூடும்–குறையும்–மறையும். அல்லது தொலையும். கூட்டுக்கள் இடைக்கிடை ஏற்படும். இப்போது ஜீ.ஜீ. பொன்னம்பலம் தியாகியாகி விட்டார். அண்ணன் அமிர்தலிங்கம் தியாகியாகவிருந்து இறுதியில் துரோகியாக கொல்லப் பட்டவர். மீண்டும் மரணத்தின்பின் தற்போது தியாகியாவார் போல் தெரிகிறது. சிவசிதம்பரம் சுடப்பட்ட போது துரோகியானவர் மரணத்தின் போது தியாகி ஆக்கப்பட்டுள்ளார்.

தோழர் சி.கா. செந்திவேல் கடந்த பொதுத்தேர்தல் காலத்தில் இத்தியாகப் பட்டங்கள் பற்றியும் துரோகப்பட்டியல்கள் பற்றியும் மிகவும் நேர்த்தியாகவே புட்டு வைத்தாரென்பது இன்று நினைத்துப்பார்க்கும் போதும் அனைத்தும் அப்பட்டமான பம்மாத்துக் கைங்கரியங்களே பாராளுமன்ற ஆசனப் பற்றின் பின்னால் நிறைவேறு கின்றன என்பது துல்லியமாகிறது.

ஆதிக்க சக்திகளின் நிகழ்ச்சி நிரலே பூர்த்தி செய்யப்படுகிறதே ஒழிய ஒடுக்கப்பட்ட தமிழ்த்தேசிய மக்களின் தன்னாதிக்கமோ. சுயநிர்ணயமோ. மனித உரிமைகளோ. ஜனநாயகப் பாரம்பரியங்களோ எவ்வித நிகழ்ச்சி நிரலிலும் இடம்பெறாமலே மறைந்து விடுகின்றன.

இந்தியப்படை நின்றபோது நடந்த 1988ம் ஆண்டுப் பாராளுமன்றத் தேர்தலில் தேசியப்பட்டியல் பாராளுமன்ற ஆசனத்துக்கான சண்டையில் அண்ணன் அமிர்தலிங்கத்துக்கும் தம்பி வரதராஜப் பெருமாளுக்குமிடையில் நடைபெற்ற அடிபிடி ஞாபகம் வருகிறது.

கூட்டணித் தலைவர் சிவசிதம்பரத்தின் மறைவின் பின்னால் தலைவர் ஆனந்தசங்கரிக்கும் – செயலாளார் தலைவர் சம்பந்தனுக்கும் – மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் அருமைத் தம்பி குமரகுருபரனுக்குமிடையில் நடைபெறும் ஆசனப்பற்றின் மீதான அகோரச் சண்டையின் பின்னால் இருக்கும் அங்கீகாரம் என்ன என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

தங்கள் தனிப்பட்ட தன்னாதிக்கங்கள் பற்றிக் கரிசனை மிக்கவர்கள் தயவு செய்து தமிழ் மக்களின் தன்னாதிக்கம் பற்றியும் சிந்தித்துச் சிறிது நேரமாவது செயற்படுவார்கள் என்று நாம் சமரசம் செய்வதில் அர்த்தமெதுவுமில்லை.

ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசியஇனத்தின் விடுதலை என்பது இலங்கைத் தீவின் சுதந்திரத்துக்கு குழி பறிக்காமல். மக்களின் உரிமைகளைக் குழி தோண்டிப் புதைக்காமல், சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் வல்லமை தோற்றுவிக்கப்படல் வேண்டும்.

## மலர்க்கிரீடம் சூட்டும்

(1) இள மஞ்சள் தென்னம்பூ அலங்கரித்து
வண்டி முதுகின்மேல் தேங்காய். நெல்லரிசி. விறகேந்தி
தோய்த்துலர்ந்த வெள்ளாடை நன்கணிந்து
எத்திசை செல்கின்றாய் நண்பா நீ நடை நடந்து

(2) வீதித்தடை இன்றில்லை இற்றுவிட
வடதிசையில் வெளிச்சங்கள் கோலமிட
நடை நடந்து நாகதீபம் நாம் வந்தோம்
நல்லாசி நாம் வேண்டி நடக்கின்றோம்.

(3) பங்கர்களில் பச்சை செடிகொடிகள் படர்ந்துவிட
சின்னஞ்சிறு குருவி சிட்டுக்கள் கூடுகட்ட
நிலக்கன்னி மிதிவெடிகள் ஜொனிவெடிகள் இனி இல்லை
திறந்திருக்கும் பாதைகளைப் பார்ப்பதுவே பரவசம்தான்.

(4) பொட்டிட்டு பூவைத்து நெற்றி திருநீறால் அலங்கரித்து
கதிரோன் கண்திறக்கு முன்னெழுந்து குளித்து முழுகிவிட்டு
தேவாரத் திருப்பதிகம் மெல்ல வாய் முணுமுணுக்க
எங்கே நீ செல்கின்றாய் மெல்ல நடை நடந்து

(5) பாதையிலே சோதனைகள் சீருடைகள் காணவில்லை
தீ கக்கும் ஆயுதங்கள் தீக்கிரையாய் போயினவே
கதிர்காமம் செல்லுகிறேன் கந்தனை நான் கண்டுவர
நிரந்தரமாய் அமைதி கொடு கதிர்காமப் பெருமானே!

(6) ஆயுதங்கள் இனி இங்கெ அடுப்பெரிக்க போய்விடட்டும்
அச்சங்களும் கொடுமைகளும் அக்கினியால் பொசுங்கட்டும்
அறிவு மட்டும் நமக்கிங்கே ஆயுதமாய் இருக்கட்டும்
மெய்வீரர் சிரசுக்கே மலர்க்கிரீடம் சூட்டட்டும்.

சிங்களத்தில் : திலக்க நவரட்ண தமிழில் : இரா. சடகோபன்

படிப்பகம்

www.padippakam.com



# நேபாளத்தில் மக்கள் யுத்தம் முன்செல்கிறது

நேபாளத்தில் என்ன நடக்கிறது? மாவோவாத கெரில்லாக்கள் மன்னராட்சியை இல்லாமல் செய்வதற்காக போராடுகிறார்கள் என்றும் அவர்கள் குரூரமாக பொதுமக்களைக் கொலை செய்கிறார்கள் என்றும் சொத்துக்களை அழிக்கிறார்கள் என்றும் அவர்களால் வெல்ல முடியாது என்றும் செய்திகள் பரப்பப்படுகின்றன.

நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோவாதிகள்) சமதர்ம சமூகத்தை ஏற்படுத்த மக்கள் யுத்த போராட்ட முறையைக் கொண்டு செயற்படுகிறது. அக்கட்சி நேபாளத்தின் ஏனைய கம்யூனிஸ்ட் கட்சிகளிலிருந்து வேறுபட்டு செயற்படுகிறது. ஏனைய கம்யூனிஸ்ட் கட்சிகள் சமூக ஜனநாயக கட்சிகளாகவோ, இடதுசாரி கட்சிகளாகவோ தாழ்ந்த நிலையிலேயே செயற்படுகின்றன. மாவோவாதிகள் நேபாளத்தின் மூன்றில் ஒரு பகுதியை ஏறத்தாழ அவர்களின் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர். அவர்களின் சக்தி 10 ஆயிரம் போராளிகளைக் கொண்டது என்று முதலாளித்துவ ஊடகங்களே அறிக்கை செய்திருக்கின்றன என்பதால் அதைவிட அதிகமாக இருக்கலாம்.

நேபாள இராணுவத்தின் சக்தி 45 ஆயிரம். மிகவும் சம்பிரதாயபூர்வமான இராணுவம். மாவோவாதிகளின் தாக்குதல்களுக்கு பிறகு இராணுவம் கண்டபடி அதனுடைய தாக்குதல்களைத் தொடுத்து வருகிறது.

கெரில்லாக்களையும் அவர்களின் ஆதரவாளர்களையும் கொல்வதாக கூறிக்கொண்டு கண்டபடி கொலைகளை செய்து வருகிறது. 1988-1989 காலகட்டத்தில் ஜே.வி.பி.க்கு எதிரான நடவடிக்கை என்ற பேரில் இலங்கையில் நடத்தப்பட்டது போன்ற நடவடிக்கை நேபாளத்தில் எடுக்கப்பட்டு நேபாளம் பிணக்காடாகக் காட்சியளிக்கின்றது.

ஆளும் நேபாள காங்கிரஸ் கட்சிக்குள் பிளவுகள் ஏற்பட்டுள்ளமைஇ மன்னர் குடும்பக்கொலைஇ இடதுசாரிக் கட்சிகளின் பலவீனம் என்பன நேபாள கம்யூனிஸ்ட் கட்சி (மாவோ) மக்கள் யுத்தத்தை முன்னெடுக்க வாய்ப்பாக இருக்கிறது. தலைநகரான காட்மண்டுவிலும் அக்கட்சியின் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

மாவோவாதிகளை அழிப்பதை தவிர வேறு தெரிவு இல்லையென பிரதமர் டியூபா கூறியுள்ளார். அவசரகால நிலையை பிரகடப்படுத்தி இராணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளார். இராணுவத்தின் அத்துமீறல்கள் படுகொலைகள் பற்றி முறைப்பாடு செய்யப்பட்டபோது மனித உரிமைகளையும் பாதுகாத்துக்கொண்டு பயங்கரவாதத்தை ஒழிப்பது இலகுவான காரியமல்ல என்றும் யார் பயங்கரவாதி என்று உறுதி செய்து கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள இராணுவத்தினர் தெய்வீக மானுடரல்லர் என்றும் அவர் கூறியுள்ளார்.

பொதுமக்கள் கெரில்லாக்கள் என்ற பேரில் கொல்லப்படுவதுடன் இளைஞர்களும் யுவதிகளும் பெரும் எண்ணிக்கையில் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்படுகின்றனர். உள்நாட்டு ஊடகங்களும் வெளிநாட்டு ஊடகங்களும் கெரில்லாக்கள் பயங்கரவாதம் புரிவதாக செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

'கெரில்லாக்கள் சிவிலியன்களை திட்டமிட்டு தாக்குவதாக கூறப்படுவது உண்மையல்ல இருபகுதியின் தாக்குதல்களுக்குமிடையில் மாட்டுப்பட்டு

தொடர்ச்சி 12ம் பக்கம்.

**புரிந்துணர்வு...**

7ம் பக்க தொடர்ச்சி...

கொள்வது என்பது ஒன்று. இரண்டாவது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளைத் தாக்கி ஊடறுத்துச் செல்வது என்பது அடுத்தது என்பதே ராணுவச் சிந்தனையாகவும் செயற்பாடாகவும் காணப்படுகின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் இதுவரை உள்ளுர யுத்தத் தயாரிப்புக்குச் செய்யப்பட்டுள்ள முழுமூச்சான முயற்சிகள் அளவுக்கு அரசியல் தீர்வுக்கான முன்னெடுப்புகள் மந்த கதியிலேயே நடைபெறுகின்றன. தாய்லாந்தில் பேச்சுவார்த்தை யூன் மாதத்தில் என்று குறித்துக் கொண்டார்கள். அதிலும் பின்போடலே இடம் பெறுகின்றது. மேலும் முதலில் இடைக்கால சபை பற்றிய பேச்சு என்றார்கள் இப்போது நிரந்தர தீர்வுக்கு பேச்சுவார்த்தை என்று கூறுகிறார்கள். பிரதமர். ஜனாதிபதி. பேச்சாளர் பீரிஸ் நாளுக்கு நாள் இடத்திற்கு இடம் வெவ்வேறு அர்த்தங்களிலும் தொனிகளிலும் பேசி வருகின்றார்கள்.

உண்மையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் என்ற திரைக்கு முன்னால் சமாதானம் அரசியல் தீர்வு அதற்கான பேச்சுவார்த்தை பற்றிப் பேசப்படுகின்றது. அதேவேளை திரைக்குப் பின்னால் ஒரு யுத்தத்திற்கான பல்வகைத் தயாரிப்புகள் இடம் பெறுகின்றதையே உணர முடிகின்றது. ஆனால் சில அரசியல் ராணுவ ஆய்வாளர்கள் அடுத்த மூன்று வருடங்களுக்கு இலங்கையில் மீளவும் ஒரு யுத்தம் வந்துவிடமாட்டாது எனத் திடமாக எதிர்வு கூறுகின்றனர். அந்தளவுக்கு இரு தரப்பையும் நோர்வேயின் ஊடாக அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் அமர்த்தி இறுக்கி வைத்து வருகின்றனர் என்றும் கூறுகின்றார்கள். இத்தகைய இறுக்குதலையும் மீறி யுத்தம் ஒன்று வருமானால் அமெரிக்கா அரசாங்கத் தரப்பில் மிக உறுதியாக நிற்பதற்கான உத்தரவாதத்தை வழங்கி இருப்பதாகவும் கூறப்படுகின்றது. இந்த விடயம் புலிகளுக்கு வெவ்வேறு வழிகளில் உணர்த்தப் பட்டிருப்பதாகவும் அறிய முடிகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி பெருமுதலாளித்துவ பேரினவாத யுத்தவெறி கொண்ட ஒரு கட்சி என்பதை 77-94 காலகட்ட ஆட்சியின் போது தீர்க்கமாகவே வெளிப்படுத்தியது. அக் கட்சிக்கு அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளினதும் இஸ்ரேலினதும் ஆதரவும் அரவணைப்பும் இருந்து வருகின்றமை இன்றும் நிதர்சனமான ஒன்றாகும். இத்தகைய ஒரு கட்சியின் தலைமையிலான அரசாங்கத்தை நடைமுறைக்கு கொண்டு வரவே தமிழர்களின் தலைமைத்துவங்கள் ஒன்றுபட்டு நின்றன. ஏற்கனவே பேரினவாத யுத்தத்தை நடாத்தி நின்ற பொதுசன முன்னணியை வீழ்த்தி அடுத்த பேரினவாத ஆளும் வர்க்க ஆட்சியைக் கொண்டுவரும் ஆவல் நிறைந்த ஆதரவையே தமிழர் கட்சிகள் பலவும் கடந்த பொதுத் தேர்தலில் வழங்கின. அதன் அடிப்படை ஆளும் ஆதிக்க அரசியல் வர்க்க உறவின் பாற்பட்டதாகும்.

கடந்த இருபது வருடங்களின் யுத்த அவலத்தால் சின்னாபின்னமடைந்த மக்கள் சமாதானத்தை வேண்டி நின்றனர் என்பது யதார்த்தமாகவே இருந்து வந்தது. இதனை ஒரு சந்தர்ப்பமாக 1994ல் சந்திரிகாவிற்கு மக்கள் வெற்றியாக வழங்கினர். ஆனால் அவரது ஆட்சி சமாதானத்திற்குப் பதிலாக சமாதானத்திற்கான யுத்தமாக்கி நாட்டையும் மக்களையும் நாசமாக்கியது.

இப்போது அன்று சாத்தியமற்றுப் போன சமாதானத்திற்கான சந்தர்ப்பத்தை மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியை நம்பியே வழங்கினர். அதன் பேரில் நோர்வேயின் மூன்றாம் தரப்பு முயற்சிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் யுத்தநிறுத்தம் வந்து கொண்டது. மக்களுக்கு சில முனைகளில் ஆறுதல் நிம்மதிப் பெருமூச்சு விட ஒரு அவகாசம் கிடைத்துள்ளது உண்மையே. அவை குழப்பப்படக் கூடாது என்பதும் மக்கள் சார்பான கோரிக்கையேயாகும்.

ஆனால் அரசாங்கமும் பிரதமரும் நேர்மையுடனும் நெஞ்சுரத்துடனும் பேரினவவாத நிலைப்பாட்டிற்கு அப்பால் அரசியல் தீர்வுக்கான பாதையில் வழிநடக்கிறார்களா? என்பதே எழுந்துள்ள முக்கிய பிரச்சினையாகும். சர்வதேச சமூகத்திற்கு தாங்கள் சமாதானத்திற்காகவே உழைப்பதாகக் காட்டிக் கொள்வதும் புலிகள் இயக்கம் பற்றிய பயங்கரவாத தோற்றப்பாட்டை வலியுறுத்துவதும் அரசாங்கத்தின் உள்நோக்கமாக இருந்து வருகின்றது. அதே வேளை யுத்தம் மீளவும் வெடிக்கும் பட்சத்தில் அமெரிக்காவின் நேரடி உதவி ஒத்துழைப்பை பகிரங்க மாகப் பெற்றுக் கொள்வதற்கான உள்ளார்ந்த திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதாகவும் அறிந்து கொள்ளமுடிகின்றது. இன்று பிலிப்பீன்ஸ் நாட்டிற்குள் அமெரிக்கப் படைகள் புகுந்து வரும் ஒரு சூழல் நமது நாட்டிற்குள்ளும் அடுத்த கட்டமாக வரமாட்டாது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் கிடையாது. அதற்கான அடித்தளமாக இலங்கை-அமெரிக்க பாதுகாப்பு ஒப்பந்தம் அமைந்து கொள்ளப் போகிறது.

எனவே தான் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் எடுக்கப்படும் முன்னெடுப்புக்கள் இனிமேல் தான் கடுமையான சோதனைகளையும் சவால்களையும் சந்திக்கவுள்ளன. இதில் ஐக்கிய தேசிய கட்சி தலைமையினாலான அரசாங்கம் அடுத்த கட்டமாக எவ்வாறான நிலைப்பாட்டை மேற்கொள்ளப் போகின்றது. ஏனெனில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சொந்த பேரினவாத நிலைப்பாடு உண்டு. அதேவேளை ஜே.வி.பி. சிஹல உறுமய. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பௌத்தமத நிறுவனங்கள் எழுப்பி வரும் பேரினவாத வெறிக்கு முன்னால் எவ்வாறு நடந்து கொள்வது என்பதிலும் அரசாங்கம் ஒரு நிலைப்பாட்டிற்கு வரவேண்டியுள்ளது. ஏனெனில் அது அரசாங்கத்தின் இருப்போடு சம்பந்தப்பட்டதொன்றாகும்.

இவற்றின் மத்தியில் சிங்கள பேரினவாத ஊடகங்கள் நாளாந்தம் விஷத்தையே கக்கி வருகின்றன. புலிகள் இயக்கம் ஆட்சேர்ப்பிலும் பண வசூலிலும் ஆயுத இறக்குமதியிலும் ஈடுபடுவதாகப் பிரச்சாரம் செய்கின்றன. அவற்றுக்கு ஜே.வி.பி.. சிஹல உறுமய பக்கபலமாக இருந்தும் வருகின்றன.

அதேவேளை அமெரிக்கா அரசாங்கத்தின் பக்கத்தில் நிற்கின்றமையும் புலிகள் இயக்கத்தை மிரட்டி பணிய வைக்கச் செய்கின்றமையும் காணக்கூடியதாக உள்ளது. மறுபுறத்தில் இந்தியா புரிந்துணர்வு ஒப்பந்தமே முற்றுமுழுதாகக் குலைந்து போக வேண்டும் என விரும்பி நிற்கின்றது. அதற்காக உரிய இடங்களில் கைகொடுத்து உசுப்பி விடுவதையும் காணமுடிகின்றது.

எனவே இன்றைய நிலையில் யுத்தத்திற்கான தயாரிப்பு மேலோங்கி விரைவான யுத்த சூழலுக்கு வடக்கு கிழக்கும் நாடும் தள்ளப்படுமா? அல்லது அதற்குப் பதிலாக அரசியல் தீர்வுக்கான முன் முயற்சிகள் முதன்மை பெற்று நிரந்தர சமாதானம் வந்துகொள்ளுமா? என்பது இன்னும் பலத்த கேள்வி வடிவத்திலேயே இருந்து வருகின்றது.

இந்தக் கேள்விக்கு ஒற்றைப் பரிமாண நிலையில் பதில் இருக்க முடியாது. ஏனெனில் இங்கே வர்க்க இன முரண்பாடுகள் வழியாக எழுந்து நிற்கும் அடிப்படைப் பிரச்சினைகள் உண்டு. அவை நாட்டின் ஆளும் வர்க்க பேரினவாத ஒடுக்குமுறையோடு இழையோடி நிற்பவைகள். இன்னும் ஆழ்ந்து நோக்கின் அடிப்படையான சமூக அமைப்பின் ஆழத்தோடும் இன்றைய ஏகாதிபத்திய உலக மயமாதலோடும் பின்னிப் பிணைந்தவையாகவே இனப்பிரச்சினையும் அதன் காரணமான யுத்தமும் காணப்படுகின்றன. இவற்றையிட்டு ஒடுக்கப்படும் தமிழர் மத்தியில் தெளிவான அரசியல் மார்க்கத்திற்கான சிந்தனையும் தூரநோக்கிலான பரந்த போராட்டமும் அவசியமானது என்பது உணரப்பட வேண்டியதாகும். ஏனெனில் எந்தவொரு வல்லமையான இயக்கமும் அதன் உறுதியான போராட்டமும் இறுதியில் ஏகாதிபத்தியம் தனது உலக ஆதிக்கத்திற்காக விரித்துக் கொள்ளும் சதிவலையில் வீழ்ந்து கொள்ளாமல் தன்னைத் தற்காத்துக் கொள்வதிலேயே அதன் எதிர்காலம் தங்கி இருக்க முடியும். யுத்தமானாலும் சரி சமாதானமானாலும் சரி அவற்றுக்கு முகம் கொடுக்கக்கூடிய அரசியல் நிலைப்பாடும் சாணக்கியமும் உறுதியாக அமைவது அவசியம்.



# மாக்ஸியத்தின் போதாமைகள் பற்றி

**முன்னுரை**

எந்த அறிவியல் துறையும் முழுமையான அறிவின் பொக்கிஷமாக மனிதன வந்தடைவதில்லை. எல்லா மனித அறிவும்: மனிதரது சிந்தனையும் செயற்பாடும் ஒன்றிணைந்து உருவாக்குவதே. மனித அறிவின் வளர்ச்சி முடிவின்றி நடைபெறுகிறது. எந்த அறிவியல் துறையிலும், நடைமுறை மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்கள், பொதுமைப்படுத்தப்பட்ட தகவல்களாக அதாவது கொள்கைகளாகத் தொகுக்கப்படுகின்றன. கொள்கைகளின் அடிப்படையில் மேலும் தகவல்கள் சேர்க்கப்படுகின்றன. கொள்கைகள் சோதிக்கப்படுகின்றன. இவ்வாறான சோதனைகள் மூலம் கொள்கைகள் மேலும் பொதுமையான தன்மை பெறுகின்றன சில சமயங்களில் கொள்கைளின் வரையறைகள் அடையாளங் காணப்பட்டுக் கொள்கைகள் மாற்றியமைக்கப் படுகின்றன. சில சமயங்களில் மாற்றுக் கொள்கைகள் உருவாகின்றன.

எந்தக் கொள்கையும் எக்காலத்துக்கும் உண்மையாகவும் சரியாகவும் இருக்கும் என்ற உத்தரவாதத்துடன் வருவதில்லை. எனினும் அறிவியற் கொள்கைகள் மனித நடைமுறையுடன் சேர்ந்து விருத்தி பெறுவதால் அவை திரும்பத் திரும்பச் சோதிக்கப்பட்டு நிறுவவோ நிராகரிக்கப்படவோ கூடும். இந்த வகையில் அவை சமயச் சிந்தனைகள் ஊட்டப்பட்ட கருத்து முதல்வாத எண்ணங்களைப் போலன்றி மாற்றத்தை ஏற்கத் தயாராகவே உள்ளவை.

கடந்த முப்பது ஆண்டுக் காலத்தில் விஞ்ஞான மறுப்பும் மனித சமத்துவக் கொள்கைகளின் மறுப்பும் மனித அறிவின் நிச்சயமற்ற தன்மை பற்றிய மிகைப்படுத்தலும் பல வேறு வடிவங்களில் ஊக்குவிக்கப்பட்டு வந்துள்ளன. மாற்றுச் சிந்தனைகள் என்ற வகையில் அவற்றை நாம் எடுத்த எடுப்பிலேயே தூக்கி எறிவதும் வலிந்து தவறாக விளக்குவதும் எவருக்கும் நல்லதல்ல. அதே வேளை இவ்வாறான சிந்தனைகள் எந்தவிதமான சமூகப் பார்வைகளின் வெளிப்பாடுகளாக வருகின்றன என்பதை மறந்து அவற்றை மதிப்பிடுவது முழுமையான ஆய்வுமல்ல

பௌத்தம் முதல் பின்நவீனத்துவம் வரையிலான பல சிந்தனைப் போக்குகள் மூன்றாமுலக நாடுகளிலும் முன்னேறிய நாடுகளில் சமூக உணர்வுடன் செயற்படுகிறவர் மத்தியிலும் மாக்ஸியத்தை மறுப்பதற்குப் பயன்பட்டு வருகின்றன இவை பற்றிய தெளிவான ஆணித்தரமான பதில்கள் மாக்ஸியச் சிந்தனையாளர்களால் வழங்கப்பட்டு வந்தாலும் திரும்பத் திரும்பச் சில விடயங்கள் அவை செல்லாதன என்று நிறுவப்பட்ட பின்னரும் வலியுறுத்தப்படுவதை நாம் காண்கிறோம். எல்லா நேரத்திலும் இவை பற்றித் திரும்பத் திரும்ப மறுமொழி சொல்லிக் கொண்டிருப்பதும் இயலாது. எல்லா நேரத்திலும் இவை பற்றி மௌனமாக இருக்கவும் முடியாது.

குறிப்பிட்ட சூழ்நிலைகளில். குறிப்பாக. பழைய விவாதங்கள் பற்றி இளைஞர்கட்கும் அரசியலுக்குப் புதியவர்கட்கும் தெரியாதிருக்கும் போது. விஞ்ஞான ரீதியான சிந்தனை. மாக்ஸியம் என்பன பற்றிய குழப்பமான கருத்துக்கள் தெளிவு படுத்தப்படாவிட்டால் அதன்மூலம் சமூகப் பயனுள்ள நடைமுறை பாதிக்கப்படும் எனவே போதாமைகள் பற்றிக் கூறப்படுகிற விடயங்கள் உண்மையிற் போதாமைகள் அல்ல என்றால் அவை ஏன் அப்படிக் கூறப்படுகின்றன என்று கவனித்துத் தவறான வாதங்கள் முறையாக மறுக்கப்பட வேண்டும். சுட்டிக் காட்டப்படும் போதாமைகள் உண்மையானவை என்றால் அவற்றின் அடிப்படையான குறைபாடு எதன் காரணமாக ஏற்பட்டவை என்று நாம் ஆராய வேண்டும்.

அப்படியானால் நமது அணுகுமுறை மீளாய்வுக்கு உள்ளாக வேண்டும் தகவல்களின் போதாமை அல்லது தவறான பாவனையின் விளைவான குறைபாடுகளாயின் அவை நிறைவு செய்யப்பட வேண்டும். இவை ஒவ்வொரு மாக்ஸியவாதியினதும் கடமைகட்குட்பட்டவை. ஏனெனில். மாக்ஸியம் எல்லாவற்றையும் கேள்விக்குட்படுத்து என்று வற்புறுத்துகிறது. அது மாக்ஸியத்துக்கு விலக்களிக்கவில்லை. எனவே மாக்ஸியத்தைக் கேள்விக்கு உட்படுத்தி அதன் மூலம் மாக்ஸியத்தைச் செழுமைப் படுத்த முடியும் என்பது முற்போக்கான மாக்ஸியம். உயிருள்ள மாக்ஸியம். மாக்ஸியத்தை ஏதோ ஒரு கால வரம்பிற்குள் அது இருந்த நிலையில் நிரந்தரமான விறைப்பான ஒரு வடிவத்தை அதற்கு வழங்கி அதை வழிபடுவதும் கேள்விக்குட்படுத்த மறுப்பதும் வரட்டு மாக்ஸியம். உயிரற்ற மாக்ஸியம்.

நாம் இன்று பலவேறு விடயங்கள் பற்றிப் பேசும் போது மாக்ஸியத்தின் போதாமை பற்றிக் கூறப்படுகிறது. இவற்றைக் கூறுவோரிற் பலர் மாக்ஸியத்தை நிராகரிக்கும் நோக்கிலேயே அப்போதாமைகள் பற்றிப் பேசுகின்றனர். அதேவேளை கணிசமானவர்கள், மாக்ஸியத்தைப் பற்றி மேலும் அறிய வேண்டியும் தமது அனுபவமும் தகவல்களும் கூறுகிற விடயங்களின் காரணமாக எழும் ஐயங்களாலும் மாக்ஸியத்தால் சில விடயங்களைச் சரிவரக் கையாள முடியுமா என்று கேட்கிறார்கள். எந்த நோக்கமாக இருந்தாலும் கேள்விகள் எழுவதற்கான நியாயம் இருக்கும்போது பதில் தருவதற்கான தேவையும் உள்ளது. இந்தக் கண்ணோட்டத்திலேயே இன்று பெண்ணிய நோக்கிலிருந்தும் தேசியவாத நோக்கிலிருந்தும் தலித்திய நோக்கிலிருந்தும் மாக்ஸியம் பற்றி முன்வைக்கப்படுகிற கேள்விகட்கு விடைதருவது பயனுள்ளது.

நியாயமான போராட்டங்கள் ஒன்றை ஒன்று ஆதரிக்கின்றன. எனவே அவற்றை ஒருங்கிணைப்பதற்கான தேவை மனித சமூகத்தின் விடுதலை மீது அக்கறையுள்ள அனைவருக்கும் உண்டு. அந்தத் தேவையை முன் நிறுத்தியே இக் கட்டுரை எழுதப்படுகிறது.

அடுத்து வருகிற பகுதிகளில் வெவ்வேறு சமூக விடுதலைப் போராட்டக் கோணங்களிலிருந்து மாக்ஸியத்தின் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் பற்றிய விளக்கங்கள் சுருக்கமான முறையில் வழங்கப்படும். இவ் விளக்கங்களின் நோக்கம் மாக்ஸியத்தை நியாயப்படுத்துவதற்கான வேறெந்தப் போராட்ட நியாயத்தையும் மறுப்பதல்ல. மாறாக. நியாயத்திற்கான எந்தப் போராட்டத்தையும் ஆதரிப்பதும் வலுப்படுத்துவமே மாக்ஸிய நோக்கிற் சரியானது.

இக்கட்டுரை மாக்ஸியத்தின் போதாமைகள் எனக் கூறப்படுவனவற்றை மறுப்பதற்குப் பதிலாக அவை ஏன் போதாமைகளாகக் காணப்படுகின்றன என விளங்கிக் கொள்வதிலேயும் நடைமுறை மூலமும் கொள்கையின் விருத்தி மூலமும் மாக்ஸியத்தை எவ்வாறு செழுமைப்படுத்துவது என்பதிலும் கூடிய கவனஞ் செலுத்தும். பகையான விமர்சனங்களையும் சினேகமான விமர்சனங்களையும் பகுத்து ஆராயும் அதே வேளை. சகல விமர்சனங்களையும் அவற்றின் ஆதாரங்களின் அடிப்படையிலேயே நேர்கொள்ள இயலும் என்ற நம்பிக்கையுடனேயே இக்கட்டுரையை எழுதுகிறேன்.

– இமயவரம்பன் –

படிப்பகம்

www.padippakam.com



# செயற்பாட்டு மார்க்சியத்திற்கு வளம் சேர்க்க வேண்டும்

## அசை - ஒரு கண்ணோட்டம்

வருடத்திற்கு இருமுறை இதழாக அசை என்னும் சஞ்சிகை 150 பக்கங்களுடன் வெளிவந்திருக்கிறது. இந்தியாவில் அச்சாகி பதிவுகள் வெளியீடாக வெளிவந்திருக்கும் இச்சஞ்சிகையின் தொகுப்பாசிரியர் அசோக் யோகன் இப்பொழுது பாரிசில் வாழ்பவர்.

"மறுபடியும் மார்க்ஸிடம்" என்னும் தலைப்பில் தொகுப்பாசிரியர் அசையின் இலக்கு பற்றி தெளிவுறுத்திக் கூறியிருப்பது மார்க்சியர்களின் கவனத்தை ஈர்க்கக் கூடியதாக உள்ளது. உலகின் பரந்த சமூகப் பரப்பிலே மார்க்சிஸம் வேறு எந்தவொரு தத்துவத்தைவிடவும் நடைமுறைச் செயற்பாட்டுடன் இணைந்ததாக வளர்ந்து வந்துள்ளது. அதன் 150 வருடங்களுக்கு மேற்பட்ட மார்க்சிய நடைமுறையில் பல்வேறுபட்ட அனுபவங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. வெற்றிகள் தோல்விகள் பின்னடைவுகளுக்கு ஊடாக மார்க்சிசம் முன்னேறி வந்துள்ளது.

இன்றைய உலகமயமாதல் என்னும் ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலுக்கு மாக்சியத்தினால் மட்டுமே முகம் கொடுக்கக் கூடிய ஆற்றலும் தகுதியும் உண்டு. அதனை அசை ஏற்றுக் கொள்கின்றது. மேற்கிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் சில மார்க்சிச சஞ்சிகைகளை அசை தனது முன்மாதிரியாகக் கொள்ளும் எனக் கூறப்பட்டுள்ளது. (1) மார்க்சியக் கோட்பாடு (2) புரட்சிகர அரசியல் (3) மாற்றுக் கலாச்சாரம் என்ற மூன்று வகைப்பாடுகளின் கீழ் அசையின் கட்டுரைகள் அமையும் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளமை நம்பிக்கை தருவதாகும்.

அசை சுட்டிக் காட்டும் திசையில் நேர்மையான மார்க்சியர்கள் பெருமளவிற்கு உடன்பட முடியும். ஆனால் அடுத்தடுத்த இதழ்களின் வரவோடு தான் அதன் தெளிவையும் செல்நெறியையும் செயற்பாட்டு மார்க்சிய அரசியலுக்கான அடிப்படை களையும் அடையாளம் காண முடியும்.

விவாதங்கள். விமர்சனங்கள். ஆய்வுகள் மார்க்சியத்திற்கு வளம் சேர்ப்பதாக அமைய வேண்டும் என்னும் புரிதலோடு வெளிவந்துள்ள அசையின் நோக்கும் போக்கும் வெறுமனே தத்துவ விசாரணைகளுடன் மட்டுப்படுத்திக் கொள்ளக்கூடாது. விமர்சனம், ஆய்வு, விவாதம் என்பனவற்றுடன் தன்னை கட்டுப்படுத்தி விடாது என்பதில் ஒரு புதிய நம்பிக்கையை வழங்க வேண்டிய பொறுப்பு அசைக்கு இருக்க வேண்டும். அல்லது சில வித்துவம் காட்டும் அதேவேளை மார்க்சிய செயற்பாட்டு அரசியலை வேரறுக்கும் புத்திஜீவிகளிடமிருந்தும் அத்தகையோரது குழப்பகரமான கருத்துக்களுக்கும் வளைந்து கொடுக்காது நிமிர்ந்து நிற்க வேண்டும். இத்தகைய கருத்துக்கள் மேற்கின் மார்க்சியர்களிடமிருந்தும் கிழக்கின் மார்க்சியர்களிடமிருந்தும் வரக்கூடியனவாகும். விளக்கங்கள் குழப்பங்களாகி விடக்கூடாது என்பதில் அசை கவனம் செலுத்த வேண்டும்.

பரந்த தளத்தில் மார்க்சியத்தை வளப்படுத்துவதாகக் கூறிக் கொண்டு சமூக ஜனநாயகத் தரத்திற்கு கீழ் இறங்கி விடமுடியாது. பொருளாதார-வர்க்க அடிப்படைகளை ஒரு பக்கத்தில் தூக்கி வைத்துவிட்டு மார்க்சியத்தை நடைமுறையில் முன்னெடுப்பது இயலாத ஒன்றாகும்.

மறுபடியும் மார்க்சிடம் என்னும் தொகுப்பாசிரியரின் கருத்திலே ஓரிடத்தில் இவ்வாறு குறிப்பிடப்படுகிறது. "மரபு ரீதியான மார்க்சியர்களும், கம்யூனிஸ்ட் கட்சிகளும் சாதியம், ஆணாதிக்கம், சுற்றுப்புறச்சூழல் பிரச்சினைகள், சமப் பாலுறவு, உளவியல், இனத் தேசியம் போன்ற பொருளாதாரம் அல்லாத ஒடுக்குமுறைகளை/பிரச்சினைகளை கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை என்ற விமர்சனம் நமக்கிடையில் இருக்கிறது" இங்கே கருத்து வேறுபாட்டிற்கு இடம் இருக்கிறது. பொருளாதாரம் அல்லாத ஒடுக்குமுறை என்ற கூற்று மார்க்சியத்துடன் எவ்வளவிற்கு உடன்பாடானது என்பது உற்று நோக்கப்படல் வேண்டும். இது மேலும் விவாதிக்கப்பட்டால் தெளிவுக்கு வழி பிறக்கும்.

அவ்வாறே மற்றோர் இடத்தில் "இனியும் ஏகாதிபத்தியச் சதி, பிற்போக்கு வாதம், தன்னார்வக் குழுக்களின் சதி, புரட்டல்வாதம். திரிபுவாதம் என்பதை நமது தோல்விக்கான காரணங்களாக உச்சாடனம் செய்து கொண்டிருக்க முடியாது" என்று கூறப்பட்டுள்ளது. எதையும் வெறுமனே ஒப்புவித்து உச்சாடனம் செய்வது தவறானது தான். ஆனால் மேற்குறிப்பிட்டுள்ளவைகளின் பாரதூரத்தன்மையை இலேசானதாகவோ அர்த்தமற்றவைகளாக எடுப்போமேயானால் வரலாற்றில் அவை ஏற்படுத்திய எதிர்ப்புரட்சிகர அபாயங்களைக் கண்டு கொள்ளத் தவறியவர்களாவோம். அவை ஒவ்வொன்றின் அம்சங்கள் குறித்தும் விவாதிக்காது அலட்சியமாக இருந்துவிட முடியாது.

அசையில் மொத்தம் 11 கட்டுரைகளும் ஒரு உரையாடலும் வெளிவந்துள்ளன.




ஆர்வத்துடன் படிக்க வேண்டியவை. அவை விவாதங்கள் ஊடாக தெளிவை நோக்கி செல்ல வேண்டியவைகளும் ஆகும். மார்க்சின் படத்தைப் பின் தோற்றமாகக் கொண்டு எளிமையும் நேர்த்தியும் கொண்டதான அட்டையுடன் அசை வெளிவந்துள்ளது. அதன் விலை 50 ரூபா ஆனால் இலங்கை விலை 175 ரூபா என்றதும் வாங்க வேண்டியவர்களை தயக்கமடைய வைக்கின்றது. அசையைப் படித்து முடித்தபோது அதன் அடுத்த காலப்பகுதிக்கான இதழை எதிர்ப்பார்ப்பதில் ஒரு வித உந்துதல் ஏற்படுகிறது. இலங்கையில் அசை பரவலான விற்பனைக்கு செல்வது தேவையானதாகும்.

# "நெடுநோக்கும் கூரிய பார்வையும் கொண்ட படைப்பாளி தணிகர் ஒடுக்கல்-சுரண்டல் என்பவற்றின் புதுப்புது மாறுவேடங்களையும் மாய வடிவங்களையும் இனங்கண்டு காட்டும் திறனை நாம் பார்க்கலாம்'



இக்கவிதை நூலும் கடந்த மே மாத தேசிய கலை இலக்கியப் பேரவையின் புத்தகப்பண்பாட்டு நிகழ்வில் வெளியிட்டு வைக்கப்பட்டது. கவிஞரும் ஓவியரும் பத்திரிகையாளரும் சட்டத்தரணியுமான இரா.சடகோபன் ஆய்வுரையை நிகழ்த்தினார். றோயல் கல்லூரி தமிழ்ப் பிரிவுத் தலைவர் திரு. மா. கணபதிப் பிள்ளை தலைமை தாங்கினார். இந் நூலுக்கு முன்னுரையை கவிஞரும் திறனாய்வாளரும் நாடக ஆசிரியருமான திரு. இ. முருகையன் எழுதியுள்ளார்.

இரா.சடகோபன் ஆய்வுரையையில் பின்வருமாறு குறிப்பிட்டார். 'கால் நூற்றாண்டு கால அரசியல் வரலாற்றை ஆவணப்படுத்தும் கவியாக்கமாக இந்நூல் அமைந்துள்ளது. மாக்சீய நெறி சார்ந்த கவிஞர் ஜே.வி.பி.யின் அரசியல் அறிவீனத்தை வெகு தெளிவாகவே வெளிப்படுத்தியுள்ளார். கவிஞர்கள் மக்களிடம் செல்ல வேண்டுமென்பது கவிஞரின் ஆதங்கமாகும். இனப் போராட்டத்துக்கான பல கவிதைகள் காணப்படுமெனிலும் அடிப்படையில் மானுட நேயத்தையே அவை கொண்டிருப் பதனை அவதானிக்கலாம். மானுட ஒடுக்குமுறைக்கெதிரான கவிதைகளாக இனை விளங்குகின்றன.

வெறும் பேனா வீரர்கள் - 1975 என்ற கவிதையில் 1971 ஏப்ரல் கிளர்ச்சியின் போது ஜே.வி.பி.யினர் ஆணிரக்கணக்கான இளைஞர்களைப் புரட்சி என்ற பெயரில் பலி கொடுத்ததை சாடுகின்றார். அவர்களை மக்களிடம் போகவில்லை என்று குற்றம் சுமத்துகிறார்.

மலர்கிறது தேசியம் - 1975 என்ற கவிதையில் தேசியத்துக்கான போராட்டம் எப்படி உருவாகின்றது என்று கூறுகிறார். நில உடமைச் சமூகத்தின் எச்ச சொச்சங்களான 'உடையாரின் வழித்தோன்றல்கள் பொலிஸ் படையின் உதவியுடன் பாட்டாளி வர்க்கத்தை அடக்கி ஒடுக்கி கொடுமைக்குட்படுத்தும்போது அதில் இருந்து தேசியத்துக்கான போராட்டம் உருவாகின்றது' என்கிறார். எனினும் அதனை வர்க்கப் போராட்டம் என்றுதான் நாம் கருத வேண்டும்.

இந்த ரயில் பாதைகள் - 1983 என்ற கவிதையில் வடக்கில் இருந்து தெற்கு வரை நீண்டு நெடிதாக நெளிந்து ஓடுகின்ற ரயில் பாதைகளை தேகத்தின் நரம்புகளுக்கு ஒப்பிட்டு அந்நியர் ஆட்சியின் சுரண்டலின் சின்னங்களாக இன்றும்இ காணப்படு வதனை சுட்டிக் காட்டுகின்றார்.

~ முருகையன் ~

இவ்விதம் அரசியல் இன ஒடுக்குமுறை. யுத்தத்தின் பேரழிவுஇ பாட்டாளி வர்க்க ஒற்றுமைஇ ஏகாதிபத்திய எதிர்ப்பு. உலகமயமாக்கல். சுரண்டல். பண்பாடு மற்றும் விழுமியங்களைப் பாதுகாத்தல். சமமற்ற கல்விக் கொள்கை. இன மத நிற சாதிப் பாகுபாடுகள் பாரபட்சங்கள் எனப் பல்வேறு சமுதாய விரோத கருத்தியல் மற்றும் செயற்பாடுகளுக்கெதிராக தமது கவிதை வாயிலாக குரல் கொடுத்திருக்கும் தணிகாசலத்தின் கவிதைகள் இதேவிதத்தில் ஏற்கனவே குரல் கொடுத்து உலக வரலாற்றில் இடம்பெற்று விட்ட மார்க்சிய கவிஞர்கள் வரிசையில் வைத்துப் பார்க்கப்படுதல் வேண்டும்.

# 'சிறந்த தமிழ்ச் சொல்லாடலும் சிந்தனைத்திறனும் பவித்திரன் கவிதைகளில் உள்ளன'

~ தி. திருக்குமரன் ~

'விமர்சனம் என்பது விளைகின்ற பயிரை வேரறுப்பதல்ல. உரமிட்டு வளர்ப்பதாகும். புதுமைப்பித்தன் காலத்தில் தமிழில் கவிதை இருந்தது. எனினும் கவிதை ஆராய்ச்சி இருக்கவில்லை' யென்று அவர் குறைபட்டார்.

சிறந்த தமிழ்ச் சொல்லாடலும் சிந்தனைத் திறனும் பவித்திரனின் கவிதைகளில் உள்ளன. ஆற்றொழுக்கான சொற்பிரயோகமும் கவிதையை மெருகூட்டுகின்றன.

பாரதியின் சில சொற்கள் கவிஞனையும் மீறி கவிதைகளில் நுழைந்துள்ளன. பவித்திரனின் கவிதைகள் மையப்படுத்தப் பட்டுக் கிளம்பும் போது இன்னும் சிறப்புறும் எதிர்காலம் உண்டு.

எந்தவொரு மனிதனும் தனது வாழ் நாளில் ஏதேனும் கவிதைகள் அவனது உள உணர்வுகளில் தட்டுப்படு மாயின் அக்கவிதைகளை வாழும் கவிதைகள் எனக் குறிப்பிடலாம். அத்தகைய ஆற்றல் பவித்திரனின் கவிதைகளுக்கு உண்டென நம்புகிறேன்.

'சிறந்ததொரு கவிஞனின் கவிதைகள் வரலாற்றையே மாற்றியமைப்பதில் பங்களிக்கும் வரலாற்று ஆவணங்களாகக் கூடக் கொள்ளப்படும் தன்மை வாய்ந்தனவாகும்'

இவ்வாறு தேசிய கலை இலக்கியப் பேரவையின் புத்தகப் பண்பாட்டை நோக்கிய மே மாதப் பௌர்ணமி நிகழ்வில் பவித்திரனின் 'உரசல் ஓசைகள்' என்ற கவிதை நூல் வெளியீட்டில் ஆய்வுரை நிகழ்த்திய திரு. திருக்குமரன் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வினை தலைமை தாங்கிய றோயல் கல்லூரி தமிழ்ப் பிரிவுத் தலைவர் திரு. மா. கணபதிப்பிள்ளை தனது தலைமையுரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

விமர்சனத்துறை தமிழில் இன்று தாழ்நிலையிலுள்ளது. மெய்ப்பொருள் காண்பது அரிதாகிவிட்டது. நயத்தை மட்டும் நோக்கும் பாணியில் திறனாய்வு குறுகலாயிற்று.

'பாரதியின் ஞானச் செருக்கும் மோனக்கிறுக்கும் பவித்திரனின் கவிதைகளிலும் காணக் கிடக்கின்றன'.

சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான வீரியம் மிக்க கவிதைகள் பவித்திரனுடையவை எனலாம்.




### சமூக முரண்பாடு...

9ம் பக்க தொடர்ச்சி....

மக்களுக்கு ஒரு ஆறுதலை வழங்கியுள்ளன.

அதேவேளை அமெரிக்காவும் இந்தியாவும் தங்களது உலக-பிராந்திய நலன்னகளுக்காகத் தீவிரமாகக் களம் இறங்கி நிற்பதையும் காண முடிகின்றது. எனவே தற்போதைய சமாதான சூழல் பாதுகாக்கப்பட்டு வடக்கு-கிழக்கு இணைந்த தமிழர்களின் பாரம்பரிய தாயகப் பிரதேசத்தில் பூரண சுயாட்சி ஒன்று சுயநிர்ணய உரிமை அடிப்படையில் அமைவதையே எமது கட்சி வற்புறுத்தி வந்துள்ளது. அத்தகைய சுயாட்சியின் கீழ் வர்க்க. இன. சாதிய. பெண்ணடிமை ஆகிய நான்கு ஒடுக்குமுறைகளுக்கும் உரிய அரசியல் பொருளாதார சமூக பண்பாட்டுத் தீர்வுகள் எவ்வாறு அமையும் என்பது அடுத்து எழும்பும் கேள்விகளாகும். இவற்றைக் கையாள்வதற்கான கொள்கை நிலைப்பாடுதான் என்ன? இவை நம் அனைவரினதும் சிந்தனைக்குரியதாகும்.

மறைந்த கே. டானியல் நினைவாக நடைபெறும் இக் கருத்தரங்கில் அவரைப் பற்றிய சில விடயங்களை முன்வைப்பது அவசியமாகும். தோழர் கே. டானியல் இலங்கையின் பொதுவுடமை இயக்கத்தின் முக்கிய செயற்பாட்டாளர்களில் ஒருவராகவும் சாதியத்திற்கு எதிரான ஒரு போராளியாகவும் இருந்து வந்தவர். அறுபதுகளின் ஆரம்பத்தில் நான் மாணவனாக இருந்த காலத்தில் 'அடிமை விலங்கறுப்போம்' என்னும் தலைப்பில் ஒரு சிறு நூல் எழுதி வெளியிட்டிருந்தார். சாதியொடுக்கு முறையின் தீவிரத்திற்கு எதிராகப் போராட வேண்டும் என்னும் உத்வேகத்தையே அந்நூல் வெளிக்காட்டி நின்றது.

தோழர் கே. டானியல் தனது இறுதி மூச்சுவரை தன்னை தலித்தியவாதியாக அன்றி பொதுவுடமை வாதியாகவே அடையாளப்படுத்தி நின்றவர். அதேவேளை அவரது நிலைப்பாட்டிலும் எழுத்திலும் விமர்சனங்கள் உண்டு. ஆனால் ஒருவரது சமூகப் பங்களிப்பையும் போராட்ட நிலைப்பாட்டையும் எழுத்துக்களையும் எவ்வாறான அளவுகோல் கொண்டு பார்க்க வேண்டும் என்பதே பிரதான்மானதாகும். நிச்சயமாக எழுபது. முப்பது என்ற அளவைக் கொண்டே காணுதல் வேண்டும். ஒருவரது பங்களிப்பையும் குறைபாடுகளையும் எழுபது. முப்பது என்று நோக்கும் கண்ணோட்டத்திலேயே டானியலை நாம் பார்க்கின்றோம். இந்த அளவுகோல் ஒரு மாக்சிச லெனினிச அப்படிடை சார்ந்த ஒன்றாகும். இன்று நாம் பேசுவது அவரது சாதிய ஒடுக்குமுறைக்கும் தீண்டாமைக்கும் எதிரான போராட்டப் பங்களிப்புப் பற்றியதேயாகும்.

தோழர் கே. டானியல் சாதியத்தாலும் வர்க்கத்தாலும் அடிநிலையில் அடக்கியொடுக்கப்பட்டு வந்த கிராமியக் குடும்பத்தில் இருந்து வந்தவர். அதன் காரணமாக அவரிடம் ஒடுக்குமுறைக்கு எதிரான உணர்வுகளும் போராட்டக் குணமும் இயல்பாகி நின்றன. ஆரம்ப பாடசாலைக் கல்வியுடன் சிறந்த மக்கள் பேச்சாளராகவும் மக்கள் எழுத்தாளராகவும் போராளியாகவும் டானியலினால் யாழ்ப்பாணச் சாதியச் சூழலில் வளர முடிந்ததென்றால் அதற்கு மாக்சிச லெனினிசமும் பொதுவுடமைக் கட்சியுமே அடிப்படையானதாக அமைந்து கொண்டமையை எவரும் மறுக்க முடியாது. அதேவேளை டானியல் தனது ஆற்றல்களில் பெரும் பகுதியை பொதுவுடமை இயக்கத்தின் ஊடாக சாதிய தீண்டாமைக்கு எதிரான இயக்கங்களுக்கும் போராட்டங்களுக்கும் பயன்படுத்திக் கொண்டவர். இன்றைய சூழலில் குறிப்பாகப் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் தோழர். டானியலை நினைவு கூர்ந்து கொள்வதில் அர்த்தமும் அவசியமும் இருக்கின்றது.

இத்தகைய டானியலின் நினைவாக நடைபெறும் இம் முழு நாள் கருத்தரங்கில் கலந்து கொள்வதற்கு எனக்கு அழைப்பும் சந்தர்ப்பமும் வழங்கிய நான்கு அமைப்புகளுக்கும் அதன் நிர்வாகிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று தோழர். சி. கா. செந்திவேல் தெரிவித்தார்.

தொகுப்பு : எஸ். ஆர். எஸ்.

படிப்பகம்

www.padippakam.com



புதிய பூமி
புதிய பூமி REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA PUTHIYA POOMI
சுற்று 09 யூன்/யூலை 2002 பக்கம் 12 விலை 10/- சுழற்சி 48

## சமாதானத்திற்கு எதிரான சதிச் செயலா?

யாழ் வேலணையில் இரண்டு விடுதலைப் புலிகளின் முக்கிஸ்தர்கள் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளனர். கிழக்கில் மூதூரில் புலிகளின் காரியாலயம் தாக்கி சேதப்படுத்தப் பட்டுள்ளது. இச்செயலில் ஆயுதப்படைகளைச் சேர்ந்தோர் சம்மந்தப்பட்டிருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது. இத்தாக்குதல்கள் சமாதானத்தை திட்டமிட்டே முறியடித்து மீண்டும் யுத்த சூழலை ஏற்படுத்துவதற்கான சதிச் செயலா? என்றே சந்தேகிக்க வேண்டியுள்ளது. அதேவேளை இவ்வாறான தாக்குதலுக்குப் பின்னால் அயலகத்துக்கரங்களும் இருக்குமோ என்றும் எண்ண வேண்டியுள்ளது. எனவே சமாதானத்தை நேசிக்கும் மக்களது இயல்பு வாழ்வை விரும்பும் அனைத்து சக்திகளும் இத்தாக்குதலைக் கண்டிப்பதுடன் அவை தொடரப்படாத உத்தரவாதத்தை அரசு தரப்பிலிருந்து பெறவும் வேண்டும். யுத்தத்தால் உயிர் வாழ்ந்த சக்திகளுக்கு நாடு மக்கள் அல்ல முக்கியம். தத்தமது பிழைப்பும் இருப்புமே தேவையாக உள்ளது என்பதையே தாக்குதல் சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

# ஜே.வி.பி-பொதுசன முன்னணி கூட்டு

## சமாதானத்திற்கு வேட்டாகலாம்!

ஜே.வி.பி.யும். பொதுஜன ஐக்கிய முன்னணியும் புரிந்துணர்வுடன் ஐக்கியப் பட்டு செயற்படுவதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றன. அவ்வகையான புரிந்துணர் வுடன் செயற்படுவதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணியின் கட்சிகளில் முக்கியமான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீலங்கா சமசமாஜக்கட்சி என்பன இணக்கம் தெரிவிக்கவில்லை. சுதந்திரக்கட்சியின் சில முக்கியத் தலைவர்களும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

அநுர பண்டாரநாயக்கவும் மங்கள சமரவீரவும் ஜே.வி.பி.யுடன் ஐக்கியப்பட்டு செயற்படுவது குறித்து கூடிய அக்கறை காட்டி வருகின்றனர்.

ஜே.வி.பி. சோஷலிஸம் பற்றி பேசுவதையோ உலகமயமாக்களுக்கு எதிராக பேசுவதையோ நிறுத்திக் கொண்டுள்ளதுடன் அதன் தலைவர்கள் சிவப்பு சட்டைகள் அணிவதையும் கைவிட்டுள்ளனர். தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமைக்கும் சுயாட்சிக்கும் எதிராக இயக்கங்களை நடத்தி வருவதுடன் சாதாரண அதிகாரப்பங்கீட்டு முயற்சிகளுக்கு எதிராகவும் இருக்கிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அதிகாரப் பங்கீட்டு முயற்சிகளை எதிர்ப்பதாகக் கூறவில்லை. பிரதமர் ரணிலுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை விமர்சிக்கின்ற அதேவேளை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலைப் பாட்டில் மாற்றமில்லை என்றும் ஜனாதிபதி சந்திரிக்கா தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலைமையில் ஜே.வி.பி.யும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஐக்கியப்பட்டு செயற்படுவது என்பது சாத்தியமில்லை. ஐ.தே.மு அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட வேண்டும் என்பது ஜே.வி.பிக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் தேவையாக இருக்கின்ற போதும் அதற்கான அடிப்படை உடன்பாடுகள் எவை என்பது தொடரும் பிரச்சினைகளாகவே இருக்கும். சிங்கள தேசிய முதலாளித்துவ சக்திகளை தம்பக்கம் எடுப்பதற்கு இடதுசாரி அரசியல் ரீதியான நிலைப்பாடுகளை எடுக்காமல் இருப்பது நல்லதென ஜே.வி.பி. நினைக்கிறது. அச்சக்திகளை தம்பக்கம் இழுக்கும் நோக்குடனேயே பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் ஐக்கியப்பட்டு செயற்பட விருப்பம் கொண்டுள்ளது. வர்க்கரீதியாக சிங்கள குட்டி முதலாளித்துவ நிலைப்பாட்டிலிருந்து சிங்கள தேசிய முதலாளித்துவ நிலைப்பாட்டிற்கு ஜே.வி.பி. நகர்ந்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பலவீனப்பட்டிருக்கும் சிங்கள தேசிய முதலாளித்துவ வர்க்கத்திற்கு ஜே.வி.பி. யாலோ, பொதுஜன ஐக்கிய முன்னணியாலோ தலைமை கொடுக்க முடியாது. இன்றைய உலகமயமாக்கல் சூழ்நிலையில் தேசிய முதலாளி வர்க்கத்தால் நின்று பிடிக்க முடியாது. எனவே அரசியல் ரீதியாக ஜே.வி.பி. யின் எதிர்பார்ப்பு நிறைவேறப் போவதில்லை. விரக்தியடைந்திருக்கும் தேசிய முதலாளித்துவ சக்திகள் ஜே.வி.பி. யுடன் அணித்திரண்டாலும் பொதுஜன ஐக்கிய முன்னணியிடமிருந்து கிடைத்த ஏமாற்றமே ஜே.வி.பி. யிடமிருந்தும் கிடைக்கும்.

அதேபோன்று வழமையாக சுதந்திரக் கட்சி ஐ.தே.க. எதிர்ப்பு என்ற வகையில் எல்லா சக்திகளையும் ஒன்றிணைப்பதில் முன்பு வெற்றி கண்டு வந்தது. ஆனால் தற்போதைய நிலைமையில் அதன் தலைமைக்கும் வர்க்க ரீதியான அரசியல் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக வேறுபாடு இல்லாதபடியால் வழமையான ஐ.தே.கட்சி எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்கவும் தலைமை கொடுக்கவும் சுதந்திரக்கட்சிக்கு தகைமை இல்லை.

ஐ.தே.முன்னணியின் மக்கள் விரோத அரசியலுக்கும் அடக்குமுறைக்கும் எதிராக மக்கள் இயக்கத்தை கட்டி வளர்ப்பது அவசியமாகும். அந்நடவடிக்கை ஜே.வி.பி.யையோ பொதுஜன ஐக்கிய முன்னணியையோ மையப் படுத்தி முன்னெடுக்க முடியாது. ஐ.தே.கட்சி மேற்படி கட்சிகள் மீது மேற்கொள்ளும் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான பாதுகாப்பை தேடிக்கொள்வதற்காக ஐக்கியப்பட்டாலும் அது நீடிப்பதற்கான அடித்தளங்கள் இல்லை.

# சோதனையாக மாறிவிட்ட செட்டியார் தெரு

## சோதனைச் சாவடி!

கொழும்பு செட்டியார் தெருவில் பொலிஸ் சோதனைச் சாவடியில் அமைக்க ஏற்பட்ட செலவை ஈடு செய்ய வென நகை வர்த்தகர்கள் சங்கத்தினர் ஒரு கடைக்கு 2 ஆயிரம் என 50 கடைகளிலிருந்து நிதியை சேகரித்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது. பல கடைகளின் உரிமையாளர்கள் அந்நிதியை வழங்க முடியாதென எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் சோதனைச் சாவடியை அமைக்க அரசாங்கமே செலவழிக்க வேண்டும்: அதில் கடமையாற்றும் பொலிஸ் அலுவலர்களுக்கு அரசாங்கமே சம்பளம் வழங்க வேண்டும் என்றிருந்தபோதும் நகை வர்த்தகர்கள் சங்கம் மேற்படி நீதியை சேகரிப்பது ஏன் என்ற கேள்வி பரவலாக எழுப்பப் படுகிறது. அவ்வாறான சாவடியை அமைக்க பலர் எதிர்ப்பு தெரிவித்த போதும் நகை வர்த்தகர்கள் சங்கம் விடாப்பிடியாக அச்சாவடியை அமைப்பதில் மும்முரமாக இருந்தது குறிப்பிடத் தக்கது.

அச்சாவடி இருப்பதால் கடை ஊழியர்களின் நடமாட்டம் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது. இரவு 10 மணிக்கு பிறகு கடைகளை விட்டு ஊழியர்கள் வெளியேறக்கூடாது என்றும் செட்டியார் தெருவில் இரவு 10 மணிக்குப் பிறகு நடமாடக்கூடாது என்றும் அறிவுறுத்தப் பட்டுள்ளனர். கடை ஊழியர்கள் இரவில் கடைகளுக்கு செல்லமுடியாத வகையில் காவலில் ஈடுபட்டிருந்தவர்கள் சில கடைகளைப்பூட்டியுள்ளனர். அதனால் இரவு முழுவதும் அவ்வூழியர்கள் வீதியில் விடப்பட்டுள்ளனர்.

இரவு 8, 9 மணிவரை கடை ஊழியர்கள் கடைகளில் வேலை செய்துவிட்டு அதற்கு பிறகே இரவு சாப்பாட்டிற்காகவும், வேறு தேவைகளுக்காகவும் வெளியில் செல்வது வழமை. அவர்கள் இரவு 10 மணிக்கு மேல் கடைகளில் இருந்து விட வேண்டுமெனவும், வெளியில் நடமாடக் கூடாது என்பதும் அவர்களின் அடிப்படை மனித உரிமைகளுக்கு எதிரான கட்டளையாகும்.

கடை உரிமையாளர்களிடம் பணம் கறக்கப்படுவதற்கும் கடை ஊழியர்களின் நடமாட்டம் மட்டுப்படுத்தப் படவுமா பொலிஸ் சோதனைச் சாவடி அமைக்கப்பட்டது? சம்பந்தப்பட்டவர்கள் பதிலளிப்பார்களா?

அச்சாவடியால் இன்னும் எத்தனை எத்தனை இடைஞ்சல்கள் ஏற்படப் போகிறதோ?

### மறைந்த மு. சி.......

5ம் பக்க தொடர்ச்சி...

வர்களுக்காக ஒரு துரும்பைத்தானும் அசைத்தது கிடையாது. அவருக்கு அவற்றின் மீது துளியளவு அக்கறை இருந்ததும் இல்லை. அதனால்தான் மாக்சிச லெனினிசக் கட்சியான பொதுவுடமைக் கட்சியின் தலைமையில் வடபகுதியில் குறிப்பாக கரவெட்டி-நெல்லியடி பிரதேசத்தில் சமத்துவத்திற்கான வெகுஜனப் போராட்டங்கள் இடம்பெற்ற 1966-72 காலகட்டத்தில் சிவசிதம்பரம் நியாயத்தின் பக்கமோ சமத்துவம் வேண்டி நின்ற மக்களின் பக்கமோ நிற்கவில்லை. அவர் சாதிய ஆதிக்கமும் வெறியும் கொண்டோரின் பக்கத்திலேயே நின்றார். அதற்குரிய வரலாற்றுச் சாட்சியமே. 1970ம் ஆண்டின் பொதுத்தேர்தலில் அவரது உடுப்பிட்டித் தொகுதியில் படுதோல்வி கண்டமை ஆகும். உழைக்கும் தாழ்த்தப் பட்ட மக்கள் அன்று புகட்டிய பாடத்தினாலேயே சிவசிதம்பரம் உடுப்பிட்டியை விட்டு நல்லூருக்கும் அமிர்தலிங்கம் வட்டுக்கோட்டையில் தோல்வி கண்டு காங்கேசன்துறைக்கும் செல்ல வேண்டியதாயிற்று என்பது அரசியல் வரலாற்றுச் செய்தியாகும்.

இன்றுவரை சிவசிதம்பரத்தின் சொந்த கோவிலும் ஏனைய சில முக்கிய கோவில்களும் கரவெட்டிப் பிரதேசத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் திறந்து விடப்படவில்லை என்பது பலருக்குத் தெரியாத ஒன்றாகும். தமிழ் மக்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கினரான தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமத்துவத்தை நிராகரித்து தமிழர்களின் ஐக்கியத்திற்கும் பலத்திற்கும் குறுக்கே நின்று வந்த ஒரு அரசியல் தலைவரை ஒட்டுமொத்த தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர் என வர்ணிப்பதில் எத்தகைய நியாயம் இருக்க முடியும்.

எனவேதான் எல்லோரும் அழுகிறார்கள், புகழ் மாலை சூடுகிறார்கள் என்பதற்காக நாமும் ஏதோ சொல்லிக் கொள்ளவியலாது. ஒருவரது அரசியல் வாழ்வின் உண்மைகளையும் பொய்மைகளையும் சரியான நிலை நின்று காண வேண்டும். அவ்வாறு காணும் போதே மறைந்த மு. சிவசிதம்பரம் தமிழர் பழைமைவாத ஆதிக்க அரசியலின் அடையாளச் சின்னமாக இறுதிவரை வாழ்ந்து வந்தார் என்பதை எவ்வகையிலும் மறைத்துவிட முடியாது.

### நோபாளத்தில்

10ம் பக்க தொடர்ச்சி...

சிவிலியன்கள் இறப்பதுண்டு. கெரில்லாக்கள் இராணுவத்தையோ, பொலிசையோ தாக்கும்போது சிவிலியன்கள் மாட்டுப்படலாம். மக்களை கவசமாக பாவிக்கும் இராணுவத்தையும் பொலிசையும் தாக்கும்போது மிகவும் முன்னெச்சரிக்கையாக சிவிலியன் பாதிப்புகள் ஏற்படாத வகையிலேயே தாக்குதல்கள் நடாத்தப்படுகின்றன" என்று கெரில்லாக்களின் தரப்பில் கூறப்படுகின்றது.

அரசாங்கத்துடனும் இராணுவத்துடனும் இருந்து கொண்டு கெரில்லாக்களுக்கு எதிராக செயற்படுபவர்களுக்கு எச்சரிக்கை விடுத்தும் கால அவகாசம் கொடுத்தும் திருந்தாவிட்டால் அவர்கள் தண்டிப்படுபவர். அது சிவிலியன் மீதான தாக்குதலல்ல. எதிரிகளின் மீதான தாக்குதலாகும் என்றும் கெரில்லாக்கள் கூறுகின்றனர்.

தற்போது நோபாள அரசாங்கம் முன்னெடுக்கும் இராணுவ நடவடிக்கையினால் கெரில்லா முறையான மக்கள் யுத்தம், நேருக்கு நேர் யுத்தம் செய்யும் மக்கள் யுத்தமாகவும் வளர வேண்டிய தேவையை ஏற்படுத்தியிருப்பதாக கூறும் கெரில்லாக்கள் இராணுவ நடவடிக்கைகளினால் மக்கள் யுத்தத்தை தோற்கடிக்க முடிாயது என்றும் கூறுகின்றனர்.

நோபாள பிரதமர் பிரிட்டிஷ், அமெரிக்கா, இந்தியா ஆகிய நாடுகளிடம் இராணுவ உதவிகளை கேட்டுள்ளார். அதற்கு சாதகமான பதில்கள் கிடைத்தால் கெரில்லாக்களை அழித்துவிடமுடியும் என்று அவர் நம்புகிறார்.

பொதுவுடமை சமூகத்தை படைப்பதற்கான மக்களின் யுத்தம் நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம், ஏகாதிபத்தியம், மேலாதிக்கம் என்பவற்றுக்கு எதிராகவே முன்னெடுக்கப்படுவதால் அமெரிக்க, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்களுக்கும் இந்திய மேலாதிக்கத்திற்கும் அடிபணியப் போவதில்லை என்று நேபாள கம்யூனிஸ்ட் மாவோவாதிகள் அறிவித்துள்ளனர்.

### அரசாங்கம் கைச்சாத்திட்ட....

1ம் பக்க தொடர்ச்சி..

இதன் மூலம் வடக்கு கிழக்கிலிருந்து வரும் அதிரடிப்படைப் பொலிசார் நவீன பயிற்சியும் படைக்கலன்களும் பெறுவார்கள். இதற்குப் பொறுப்பாக இருந்து வருபவர் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆரின் மகன் ரவி ஜெயவர்த்தனா என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

7. ஏற்கனவே செய்துகொள்ளப்பட்டு நடைமுறையில் இருந்து வரும் இலங்கை இந்திய வர்த்தக ஒப்பந்தம் மீளாய்வு செய்யப்பட்டு புதுப்பிக்கப்படும்.

8. தலை மன்னாருக்கும் தனுஷ்கோடிக்குமிடையில் பாரிய பாலம் அமைக்கப் பட்டு திருகோணமலைக்கான தரை வழி நெடுஞ்சாலை அமைக்கப்படும். திருகோணமலை புதிய நிர்மாணம் செய்யப்படும். இது இந்தியாவால் மேற்கொள்ளப்படும். அதற்கான இணக்கம் காணப்பட்டுள்ளது.

9. காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை இந்தியாவிடம் கையளிக்கப்பட உள்ளது. அதன் மூலம் காங்கேசன் துறை துறைமுகமும் இந்தியாவிற்கு கையளிக்கப்படும்.

10. அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், யப்பான் ஆகியவற்றுடன் மேலும் விரிவான பொருளாதார வர்த்தக ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுவதற்கு திட்டமிடப்பட்டு வருகின்றன.

ஐக்கியத் தேசியக் கட்சி இதுவரை செய்துள்ள ஒப்பந்தங்களினதும் இனிமேல் செய்யப்பட உள்ளவைகளிலும் பின்னணி மிகவும் பாரதூரமானவையாகும். இவை அனைத்தும் நாட்டின் வளர்ச்சிக்கும் மக்களின் சுபீட்சத்திற்கும் என்றே மக்கள் நம்ப வைக்கப்படுகின்றனர். ஆனால் உண்மை என்னவெனில் இவ் ஒப்பந்தங்கள் மூலம் நமது நாடு விலைபேசி விற்கப்படுகின்றது. நமது நாட்டின் வளங்களும் மக்களின் உழைப்பும் அந்நியர்கள் கொள்ளையிட்டுச் செல்வதற்கு எழுத்து மூல ஒப்புதல் வழங்கப்படுகின்றது.

அதேவேளை சுயநிர்ணய உரிமைக்கான தமிழர் போராட்டம் இனிமேல் மேல் எழும்பாதவாறு தடுப்பதற்கும் நசுக்குவதற்குமுரிய புறச்சூழல் உருவாக்கப்படுகின்றது. ஐக்கியத் தேசியக் கட்சி அரசாங்கம் கிள்ளிப் போடக் கூடியவற்றை அரசியல் தீர்வுகள் என ஏற்றுக்கொண்டு தமிழ் மக்கள் அடங்கி இருந்து விடவேண்டும். மீறினால் இதுவரை செய்யப்பட்ட ராணுவ-பொருளாதார ஒப்பந்தங்கள் மூலமாகவும் ஆதரவு அனுசரணையுடனும் கடுமையான யுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையே இவ் ஒப்பந்தங்கள் உணர்த்துகின்றன.

இவ்விடயத்தில் அமெரிக்கா, இந்தியா, ஐரோப்பிய நாடுகள் என்பன ஐக்கியத் தேசியக் கட்சி அரசாங்கத்தின் பக்கம் உறுதியாக நிற்பதற்கான உள்ளார்ந்த ஏற்பாடுகள் மிக நேர்த்தியான செயற்பாடுகள் மூலம் செய்யப்பட்டு வருகின்றன. கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் மட்டுமன்றி இனிமேல் செய்யப்பட உள்ள ஒப்பந்தங்களும் உலகமயமாதல். அமெரிக்க-இந்திய நலன்கள் பாதுகாக்கப்படுதல் தமிழ் மக்களின் அடிப்படை அபிலாஷைகளுக்கான எவ்வித போராட்டத்தை நசுக்குதல் ஏன்ற பின்னணியிலேயே ஐக்கியத் தேசியக் கட்சி அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

எனவே உலகமயமாதல் - தனியார்மயம் - தாராளப் பொருளாதாரம் என்பதற்கு எதிரான வெகுஜன இயக்கத்திற்கான தேவையை இவ் ஒப்பந்தங்கள் வற்புறுத்துகின்றன. அடுத்தது சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் ஏகாதிபத்திய உலக ஆதிக்கத்திற்கும் பிராந்திய மேலாதிக்கத்திற்கும் எதிரான போராட்டத்துடன் இணைந்து முன்னெடுக்கப்படாது விட்டால் அவை எவ்வளவு பலத்துடனும் வீரதீரத்துடன் நின்றாலும் வெற்றிபெற மாட்டாது. இது உணரப்பட்டு சரியான மார்க்கத்தில் புதிய கட்டம் ஒன்று தோற்றுவிக்கப்பட வேண்டும். இவ் ஒப்பந்தங்களின் பின்னணிகளை ஆராயும் போது அதற்கான தேவையும் அவசியமும் தெளிவாகத் தெரிகிறது.

வெளியிடுபவர் : இ. தம்பையா, இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு யூகே. பிரின்டஸ் 98A, விவேகானந்தா மேடு. கொழும்பு 13.

படிப்பகம்